
இழப்பதற்கு எதுவும்
இல்லாதவர்கள் பாகம் – 02
கே.வி.குணசேகரம்


மனங்கள் மாறுதல் வேண்டும்
கே.வி.குணசேகரன்

# மனங்கள் மாறுதல் வேண்டும்

## என்னுரை.

இழப்பதற்கு எதுவுமில்லாதவர்கள் என்ற நாவலுக்கு கிடைத்த வரவேற்பால் அதன் 2ம் பாகத்தை வெளியிடுகின்றேன். இது புனர்வாழ்வு பெற்றபோராளிகளின் கதை என்று உங்களுக்குத் தெரியும். புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கு குடும்பத்தினரும், அவரது உறவினர்களும் தான் எதிரிகளாக இருக்கின்றனர் என்ற தகவல்களினை முதல் பாகத்தில் தெரிவித்திருந்தேன். இரண்டாம் பாகத்தில் அதே கதையின் தொடர்ச்சியினை உங்களுக்குத் தருகின்றேன். பொதுவாக தற்போதைய யாழ்ப்பாணத்தவர்கள் நூல்களை வாசிப்பதுமில்லை விமர்சிப்பதுமில்லை. இக்கதையின் நாயகி ஒருகாலத்தில் உங்களால் கடவுளாகப் பொற்றப்பட்டவள். அதனால் இந்நாவலை வாசித்து உங்கள் கரத்துக்களை முன்வையுங்கள். கோப்பாய் நாவலர்

வித்தியாலயத்தின் காணிப் பிரச்சினை பற்றி எலிகள் கேட்டுச் சொன்ன கதைகளில் குறிப்பிட்டிருந்தேன். அப்பொழுது ஒருவர் நாவலர் வித்தியாலயக் காணியைக் கொடுத்தவரின் பெயர் தம்மிடமிருப்பதாகவும் அதைத் தருவதாகவும் சொன்னார். இரண்டு மாதங்கள் கழிந்தும் பலமுறை கேட்டும் இன்னும் கிடைக்கவில்லை. பொதுவாக ஒவ்வொருவரும் தமது நலனுக்காகத் தான் செயற்படுவதனை அவதானிக்க முடிகிறது. என்னைக் காணும் போது என் சார்பாகவும், காணிக்காரனைச் சந்திக்கும் போது அவர்கள் சார்பாகவும் கதைக்கின்றனர் போலத் தெரிகிறது. காணி பற்றிய விபரம் கிடைத்ததும் எனது அடுத்த நாவலில் வெளியிடுவேன். இதனை கணனி மயப்படுத்தித் தந்த செல்வி க. கல்ப்பனா அவர்களுக்கும், அட்டைப் படங்களை வடிவமைத்துத் தந்த செல்வி.ப.யாழினி அவர்களுக்கும் நன்றி.

கே.வி குணசேகரம்.

# 1

தவப்பிரியா இரவு முழுவதும் தூங்கவேயில்லை. அவளது நினைவுகளில் குருபரன் வந்து மனதைக்குடைந்து கொண்டிருந்தான். குருபரன் அவளோடு படித்தவன். தற்பொழுது பொறியியலாளராகக் கடமை புரிபவன். படிக்கும்போது அவளின் பின்னால் நாய் போல அலைந்தவன். பலவருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவமொன்று அவளது நினைவில் வந்தது.

‘‘பிரியா, குருபரன் உன்னை உயிருக்குயிராக நேசிக்கிறான். நீயில்லா விட்டால் தனக்கு வாழ்க்கை இல்லை என்று சொல்கிறான். அவனுக்கென்ன குறை. உன்னுடைய சாதிக்காரன். பிறகேன் அவனைத் துன்புறுத்துகிறாய்? ஓமெண்டு சொல்லு நான் போய்ச் சொல்கிறேன்’’. படிக்கும் நாட்களில் அவளது தோழி காயத்திரி அடிக்கடி வகுப்பிலும், காணும் இடங்களிலும் கூறிய வார்த்தைகள் அவளின் காதில் ஒலித்தன.

‘‘அவனைப் பற்றிக் கதைக்காதே. அவனைப்பற்றிக் கதைத்தால் இனிமேல் நான் உன்னுடன் கதைக்கமாட்டன்.’’ கோபமாகச் சொன்ன வார்த்தைகள் அவளது மனதை துன்பப்படுத்தின.

‘‘ஏன், அவனுக்கு என்ன குறை? அதைச் சொல்லு’’.

‘‘விருப்பமில்லை என்றால் விடு. வீண்கதை கதைக்காதே’’.

‘‘நான் கதைப்பது வீண்கதையா.......? உன்ரை வாழ்க்கைப்பிரச்சினை. உனக்கு ஏன் விருப்பமில்லை என்று சொல். நீ யாரையாவது காதலிக்கிறாயா...? அப்படியானால் அதைச்சொன்னால் அவன் விலகிச்சென்றிடுவான்’’. என்றாள் காயத்திரி.

அதைக்கேட்டதும் பிரியாவுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. ‘‘என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி யாரிடமும் பகிரவேண்டிய தேவை எனக்கில்லை. என்னுடன் படிப்பதால்

உன்னை எனது தோழியாகக் கருதினேன். அது இவ்வாறான துன்பங்களைத் தரும் என்று நான் நினைக்கவில்லை. திரும்பவும் கூறுகிறேன். என்னோடு ஆண்களைப் பற்றிய கதைகள் எதையும் தயவு செய்து கதைக்காதே. எனக்கு அது பிடிக்காது''. கோபத்தால் கத்தினாள் பிரியா.

காயத்திரி வசதியான குடும்பத்தில் பிறந்தவள். மிகவும் செல்லமாக வளர்ந்தவள். பெற்றோர் அவளைக் கண்டித்ததில்லை. அவளது தந்தை அருணாசலம் கணக்காளர். தாய் தவனேஸ்வரி ஆசிரியை. காயத்திரி அவர்களது ஒரே ஒரு செல்லமகள். அதனால் அவர்கள் அவள் மீது உயிரையே வைத்திருந்தனர்.

சுடுசொல்லை அறியாத காயத்திரிக்குப் பிரியாவின் வார்த்தைகள் அழுகையை வரவழைத்தது. விம்மி விம்மி அழத்தொடங்கினாள். அது பிரியாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

''குருபரன் நீ வெறுத்தால் தான் சாகப்போறன் என்று அழுததால் உன்னிடம் அப்படிப்பேசினேன். ஆராயமால் கண்டபடிகதைக்கும் உன்னோடு நான்

உயிருள்ளவரை கதைக்கமாட்டேன்'' என்று அழுதழுது கூறிவிட்டுச் சென்றாள் காயத்திரி.

அப்போது அவள் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. வாரம் ஒன்று கழிந்த பின்பு தான் அதன் தாக்கம் புரிய ஆரம்பித்தது. பாடசாலையில் மாணவிகளும் ஆசிரியர்களும் அவளைச் சந்திக்கும் போதெல்லாம் ‘‘என்னபிரச்சினை என்ன பிரச்சனை'' என்று கேட்டனர். வீட்டில் அப்பாவும் அம்மாவும் இப்போ காயத்திரி இங்கு வருவதில்லை ஏதாவது சுகவீனமா….? என்று கேட்டனர். எத்தனை நாட்களுக்குத்தான் மறைப்பது. அவர்கள் கூறாத பல கதைகள் அவர்களது பிரிவைப்பற்றி உலாவின. அவற்றைப்பற்றிக் காயத்திரி கவலைப்படவில்லை. அவள் புதிய பல தோழிகளைத் தேடிக்கொண்டாள். காயத்திரி கலகலப்பானவள். எதையும் யோசிக்காது கதைப்பவள். விகடமாகப் பேசுபவள். அதனால் பெண்கள் பலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். இது பிரியாவுக்கு வேதனையாகவும் அவமானமாகவும் இருந்தது.

பிரியா சற்றுக்கோபக்காரி. எதையும் ஆராயாது கதைப்பவள். யாரையும் வேண்டுமென்று நினைப்பதில்லை. சற்றுத் திமிரானவள். அதிகார தோரணையாகவே கதைப்பாள். இது அவளோடு படிக்கும் மாணவிகளுக்குப் பிடிப்பதில்லை. காயத்திரியை அவளிடமிருந்து பிரிக்க வேண்டும் என்று எண்ணியவர்களுக்கு அவர்களது பிரிவு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பிரியாவுக்கு பொழுது போவது மிகவும் சிரமமாக இருந்தது. வலியச்சென்று கதைக்கவும் அவளது திமிர் விடவில்லை. காயத்திரி கதைக்க மாட்டாள் என்று அவளுக்குத் தெரியும். அதனால் சந்தர்ப்பம் வரும் வரை பொறுமையாக இருந்தாள்.

குருபரனின் நண்பன் சயந்தன். அவன் பிரியாவின் மூன்றாவது அண்ணனான வாகீசனின் நண்பன். சயந்தனின் தாய் மீனாம்பாள். வாகீசனின் தாயான மகாலட்சுமியுடன் படித்தவள். தற்பொழுது இருவரும் ஒரே பாடசாலையில் கற்பிக்கின்றனர். அதனால் இரு குடும்பங்களும் மிகவும் அன்னோன்னியமாகப் பழகி வந்தன. சயந்தன்

அடிக்கடி வாகீசனுடன் பிரியாவின் வீட்டுக்கு வந்து போவான்.

சயந்தன் ஒருநாள் பிரியாவிடம் கேட்டான், ‘‘நீ இப்பொழுது காயத்திரியுடன் கதைப்பதில்லையென்று கேள்விப்பட்டேன். உங்கள் இருவரையும் அவதானித்தபோது அது உண்மை என்று தெரிகிறது. எனக்குச்சொல்லாம் என்றால் சொல்லுங்கள் என்றான்’’.

பிரியா ஆண்கள் எவருடனும் கதைப்பதில்லை. சயந்தன் அடிக்கடி வீட்டுக்கு வந்து செல்வதால் வழிதெருக்களில் கண்டால் உதடு பிரியாமல் சிரிப்பாள். அதற்கு மேல் எதுவுமில்லை. அதனால் அவன் அப்படிக்கேட்டதும் பதட்டமடைந்து போனாள். நின்று கூடப் பேசவில்லை.

சயந்தன் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால் அவள் அப்படித்தான் என்று அவனுக்குத் தெரியும்.

காயத்திரி ஆரம்பத்தில் திமிருடன் நடந்துகொண்டாலும் பின் பிரியாவுடன் தான்

கதைத்தது பிழையென்று நினைத்தாள். அத்துடன் காயத்திரியின் சகோதரனான வாகீசன் மீது அவளுக்குக் காதல் ஏற்பட்டிருந்தது. பிரியாவின் வீட்டுக்கு அவள் முன்பு அடிக்கடி சென்று வருவதால் அவள் வாகீசனை அடிக்கடி அங்கு சந்திப்பாள். சந்திக்கும் வேளைகளில் அவன் அவளைப்பார்த்துச் சிரிப்பான். அந்தச் சிரிப்பு அவளைக்கொல்லும். அவன் அவளோடு கதைப்பதில்லை. கதைக்காவிட்டாலும் அவனது சிரிப்பைப் பார்த்து ரசிப்பாள் காயத்திரி. அத்துடன் அச்சிரிப்பையே எவ்வேளையிலும் நினைத்து மகிழ்வாள். அது இல்லாதது அவளுக்குப் பெரியதாக்கமாக இருந்தது. அதனால் பிரியாவுடன் மீண்டும் நட்புப் பூணவேண்டும் என்று நினைத்திருந்தாள் காயத்திரி.

அன்று பாடசாலை விட்டதும் வீட்டுக்குச்சென்ற காயத்திரி மதிய உணவை உண்டுவிட்டுப் பிரியாவின் வீட்டுக்குச் சென்றாள். வாசலில் பூங்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான் வாகீசன். வாகீசனைக்கண்டதும் காயத்திரியின் உணர்வுகள் விழித்துக்கொண்டன. உடல்

வியர்த்தது. அவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. “கனநாளுக்குப் பிறகு வாறியள். ஏதாவது கொழுவலோ...?” சிரித்தான் வாகீசன்.

காயத்திரியால் பதில்பேச முடியவில்லை. பல நாட்களாக வாகீசனுடன் கதைக்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தாள். அது கணப்பொழுதில் உடைந்து சாய்ந்தது.

“பிரியா உள்ளே தான் இருக்கிறாள் போங்கோ” என்றான் வாகீசன்.

பிரியாவின் செல்லப்பிராணியான வீமன் காயத்திரியின் குரலை அடையாளம் கண்டு கொண்டு, மகிழ்வுடன் ஓடி வந்து இரண்டு கால்களில் நின்று வாலை ஆட்டி மகிழ்ச்சியாரவாரம் செய்தது. அதன் முன் இரண்டு கால்களும் காயத்திரியின் வயிற்றுப் பகுதியில் இருந்தன.

நாயின் மகிழ்ச்சியாரவாரத்தைக் கேட்ட பிரியா வெளியே வந்தாள். யாரோடும் அன்பாகப் பழகாது கோபத்துடன் குரைத்துக்கடிக்கும். வீமன் அன்று

மகிழ்வுடன் வரவேற்பதால் யாரோ எமக்கு வேண்டியவர்கள் தான் வந்திருக்கிறார்கள் என்று நினைத்தவாறு வந்த பிரியா முற்றத்தில் காயத்திரி நிற்பதை எதிர்பார்க்கவில்லை. எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட பிரியா, ‘‘உள்ளே வா’’ என்றாள்.

காயத்திரி எதுவும் பேசாது சிரிப்புடன் வந்து தான் வழக்கமாக அமரும் சோபாவில் அமர்ந்து கொண்டாள். இருவரும் சில கனங்கள் எதுவும் பேசவில்லை.

‘‘நான் அன்றைக்கு உன்னோடு கதைத்தது பிழை. குருபரன் கேட்டுவிட்டான் என்பதற்காக உயிர்த்தோழியான உன்னுடன் முரண்பட்டது பிழை என்பதை எப்போதோ உணர்ந்துகொண்டேன். இப்போது தான் வரநேரங்கிடைத்தது. என்னை மன்னித்துக் கொள்’’ என்றாள் காயத்திரி.

‘‘நீ அப்படிக்கதைத்தாலும் நான் கோபித்திருக்கக் கூடாது. நீ தான் என்னை மன்னிக்கவேண்டும்’’ என்றாள் பிரியா.

“சரி அதைவிடு” என்றாள் காயத்திரி அப்போது , “பிரியா மோட்டரை நிப்பாட்டு” என்று வாகீசன் சொல்லப் பிரியா எழுந்து சென்றாள். அவளின் பின்னால் காயத்திரி சென்றாள்.

கிணற்றடியில் இருந்த மோட்டரை நிறுத்திவிட்டு திரும்பிய போது வாகீசன் கிணற்றடிக்கு வந்தான். அவனின் மேலுடல் வெற்றிடமாக இருந்தது. தான் அணிந்திருந்த சேட்டைக் கழற்றிக் கையில் வைத்திருந்தான். குளிப்பதற்காக வந்த வாகீசன் காயத்திரியைக் கண்டு விட்டுத் தான் வந்த வழியில் திரும்பினான்.

ஒருகணம் தான். அதற்குள் காயத்திரியின் கண்கள் அவனது அழகிய உடலைப் படம் பிடித்துக்கொண்டன. காணுதற்கரிய காட்சியைக் கண்டது போலக் காயத்திரியின் மனம் ஆர்ப்பரித்தது.

“எனக்குக் காதலில் நம்பிக்கையில்லை. அப்பா சிவபூசை செய்பவர். சிவ பூசை செய்தபின்பு தான் தேநீரைக் கூடக் குடிப்பார். அப்பாவின் தங்கைக்கு

அப்பாவின் தகப்பனார் திருமணத்தைப்பேசி செய்து வைத்தார். மாப்பிளை பகுதியினர் மச்சம், மாமிசம் உண்பதில்லை என்று தான் அப்பா நினைத்தார். புறோக்கர் மாப்பிளை பகுதி ஆசார சீலர்கள் என்று சொன்னதால் தான் திருமணம் நடைபெற்றது. அதன் பின் மாப்பிளைப் பகுதியினர் மாமிசம் உண்பதை அப்பா அறிந்து விட்டார். அன்றிருந்து அவர் சகோதரியின் வீட்டுக்குச் செல்வதில்லை. எம்மையும் அங்கு செல்லவிடமாட்டார். சைவன் என்றால் மச்சம் மாமிசம் உண்ணக் கூடாது. விரத நாட்களைத் தவிர்த்தாலும் புனிதமாகச் சமைத்தாலும் மாமிசத்தை உண்ட கைகளால் தானே சைவ உணவையும் உண்கிறோம். பாத்திரங்களை மாற்றுவது போலக் கையையும் வாயையும் வயிற்றையும் மாற்ற முடியுமா…? பாத்திரங்கள் ஆசாரமாக இருந்தால் போதுமா..? உடல் ஆசாரமாக இருக்க வேண்டாமா…? உடல் ஆசாரமாக இருக்கவேண்டுமானால் மாமிசம் உண்ணக் கூடாது. மனம் ஆசாரமாக இருக்க வேண்டுமானால் மனதாற் கூட மாமிச வகைகளை

நினைக்கக் கூடாது. மச்சம் உண்பவன் உடலால் மனதால் வாக்கால் களங்கப்படுகிறான். அவனால் ஒரு போதும் சுத்தமாக இருக்கமுடியாது. அதனால் தான் நான் எனது சகோதரியின் வீட்டுக்குப் போவதில்லை. நல்லது கெட்டதற்குப் போனால் உணவு தருவார்கள். மாமிசம் புசித்தவர்கள் சமைக்கும் உணவை உண்டால் உண்பவரின் ஆசாரம் கெட்டுவிடும். அதனால் தான் நான் உறவைக் கைவிட்டேன்'' என்பார். அதனால் தான் நான் விரும்பவில்லை. குருபரனின் குடும்பத்தினர் மாமிசம் உண்பவர்கள். அதனால் அவனை எனக்கு விருப்பமில்லை. மாமிசம் உண்ணும் குருபரனை விரும்பினால் எனது அப்பா உறவைத் துண்டித்து விடுவார்…..'' என்றாள் பிரியா.

அது காயத்திரிக்கு அதிர்ச்சியாக இருந்தது காயத்திரியின் குடும்பத்தினர் மாமிசம் உண்பவர்கள்.

‘‘எமது குடும்பத்தில் உள்ள அனைவரும் ஆசார சீலர்கள். வாகீசன் அண்ணா அப்பாவைப் போன்று

சமய ஒழுக்கங்களைப் பின்பற்றுபவர்’’. பிரியா கதைத்துக்கொண்டிருந்தாள். அவள் கதைப்பது எதுவும் காயத்திரிக்கு விளங்கவில்லை. திக் பிரமை பிடித்தவள் போல அமர்ந்திருந்தாள். ‘‘என்னடீ’’ காயத்திரியின் தோளைப்பிடித்து உலுப்பினாள் பிரியா.

# 2

பொழுது விடிந்து கொண்டிருந்தது. குருவிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யத் தொடங்கின. நினைவுகளில் இருந்து விடுபட்ட பிரியா திறந்த யன்னலூடாக வெளியே பார்த்தாள். இன்னும் சரியாக விடியவில்லை. குளிர்காற்று பிரியாவின் உடலை வருடியது.

மீண்டும் கட்டிலில் படுத்தாள் பிரியா. குருபரனின் நினைவு அன்று அவளை மற்றைய நாட்களை விட அதிகமாக ஆட்கொண்டிருந்து அவளால் அந்த நினைவுகளில் இருந்து விடுபட முடியவில்லை.

‘‘எனக்கு தெரியும். நீ குருபரனை விரும்புகிறாய்’’ காயத்திரி சிரித்தபடி கூறினாள்.

‘‘இல்லை. இல்லவே இல்லை’’ பிரியா கோபத்துடன் கத்தினாள்.

‘‘விரும்பவில்லை என்றால் ஏன் கத்தி ஊரைக் கூட்டுறாய் இப்படித்தான் எனது மச்சாளும் கத்தினவள். மச்சாளுக்கும் இன்னொருவருக்கும் காதல் என்று ஊர் முழுக்கக் கதைத்தது. அவன் தொழில் இல்லாதவன். குடிகாரன். அதனால் மாமாவிற்கு விருப்பமில்லை மாமி அவளைக் கேட்ட போது உன்னைப் போலத் தான் கத்தினாள் பிறகு நாலைந்து நாட்களாலை அவனோடு ஓடி விட்டாள். ஆனால்’’

‘‘ஏன் நிறுத்திவிட்டாய் மிசத்தையும் சொல்’’ வெறி கொண்டவளைப் போலக் கத்தினாள் பிரியா.

‘‘நீ எப்படிக் கத்தினாலும் நான் நம்பமாட்டேன். சத்தியம் செய்தாலும் நம்பமாட்டேன் அதற்கு காரணம் மாச்சளின் நடத்தைகள் மாமி

வற்புறுத்திக் கேட்ட போது வைரவர் கோவிலில் கற்பூரம் கொழுத்தி; ‘‘எனக்கும் ஆதவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.நான் அவனைக் காதலிக்கவில்லை. காதலிக்கவும் மாட்டேன்.’’ என்று கலை கொண்டவள் போலச் சொன்னவள். அதை மாமாவும் மாமியும் நம்பிவிட்டனர். பின் அவள் அவனுடன் சென்ற பின் ஒரு நாள் நான் அவளை சந்தித்த போது; வைரவர் கோயிலில் கலையாடி அவனைக் காதலிக்கவில்லை. என்று சத்தியம் பண்ணிய நீ அந்த சத்தியத்தை மறந்து அவனுடன் சென்று விட்டாயே. அது பாவமல்லவா? ஏன் அப்படிச் செய்தாய்’’ என்று கேட்டேன்.

அவள் சொன்னாள்; ‘‘காதலிப்பவர்கள் பொய் சொல்வார்கள். உண்மையை மறைப்பார்கள் தன்னைக் காப்பாற்ற எதையோ எல்லாம் சொல்வார்கள். இது சகசம் மட்டுமல்ல வழக்கம் என்று எல்லாக் கடவுளுக்கும் தெரியும், நான் சத்தியம் பண்ணு முன், ‘‘வைரவரே நான் பொய் சொல்லப் போகிறேன் என்று உனக்குத் தெரியும் அதற்காக என்னை மன்னித்துக் கொள். முன்பு

தனது பக்தனான சுந்தரரின் காதலை நிறைவேற்றப் பல பொய்களைக் கூறச்செய்தவர். இதெல்லாம் எல்லாக் கடவுள்களுக்கும் தெரியும். அதனால் பயப்படாதே. நீயும் காலித்தால் பயப்படாமல் பலபொய்களைக் கூறு. ஏமாற்று அதனால் எந்தப் பழிபாவங்களும் வராது என்றவள்''.

''அப்ப நானும் உன்னுடைய மச்சாளைப்போல ஏமாற்றுகிறேன் என்று நினைக்கிறாயா? நான் ஏமாற்றவில்லை. ஏனென்றால் என்னுடைய குடும்ப நிலை அப்படி. அப்பா என்னைப் பெற்றெடுக்க எவ்வளவு கஷ்ட்டப்பட்டவர் தெரியுமா?'' என்றுகூறி விட்டு நிறுத்தினாள் பிரியா. அவளாலை பேச முடியவில்லை. கண்கள் கலங்கின.

அதைக்கண்ட காயத்திரி பதறிப்போனாள்; ''நீ காலிக்கவில்லை என்பதை நான் நம்புகிறேன்''. பூதழுத்தாள் காயத்திரி.

''நீஏன் கண்கலங்குகிறாய் நீ எனது நண்பி. குருபரனின் அனுதாபி. அதனால் என்னைப் பற்றி முழுமையாக நீ அறிந்திருத்தல் வேண்டும்'' என்று

நிறுத்தியவள் சில நிமிடங்கள் சில அமைதியாக இருந்தாள்.

‘‘காயத்திரி அம்மா அப்பாவின் தாய் மாமன் மகள். பிறந்தன்றே அவர்களது திருமணம் நிட்சயிக்கப்பட்டது. பின் திருமணமாக பின் அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. ஐந்தும் ஆண் குழந்தைகள். மூன்றாவது குழந்தையைப் பெறும் போது அம்மாவின் கர்பப்பை பலவீனமடைந்து விட்டது. இனிமேல் குழந்தைகள் பெயறக்கூடாது என்று வைத்தியர்கள் கூறிவிட்டனர். அத்துடன் கர்ப்பத்தடை செய்யும் படியும் வற்புறுத்தினர். அப்பா அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை’’. மூச்சுவிட்டாள் பிரியா.

சிறிது நேரங்கழித்து மீண்டும் பிரியா சொன்னாள்; ‘‘அப்பாவும் அம்மாவும் அதன் பின் மிகுந்த பாதுகாப்புடன் தான் வாழ்ந்தனர். தனக்கு ஒரு பெண் பிள்ளை வேண்டும் என்ற ஆசை மனதில் புதைந்திருந்தது. சாம்பலுக்குள் இருக்கும் நெருப்புப் போலக் கனன்று கொண்டிருந்தது. அதை உணர்ந்த அம்மா;

“உங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்வது மனைவியான எனது கடமை. அதை பூர்த்தி செய்யா விட்டால் எனக்குப் பாவம் தான் சேரும். எமது குல தெய்வமான சந்நிதி முருகனுக்கு நேர்த்தி வையுங்கள்.” என்றார். உடனே அப்பா சந்நிதித் தேருக்கு செடிபுல் குத்திக் காவடி எடுப்பதாக நேர்த்தி வைத்து அதனை நிறைவேற்றினார். அதன் பின்பும் ஆண் பிள்ளை தான் பிறந்தது. ஆனால் அது சுகப் பிரசவம் இருப்பினும் வைத்தியர்கள் இனிப்பிள்ளைகளை பெற வேண்டாம். என்று கூறினார். அம்மாவின் நலத்தில் அக்கறை கொண்ட அப்பா அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அம்மா அதை ஏற்கவில்லை. அதனால் அம்மா மீண்டும் கற்பமுற்றார். அது ஆண் பிள்ளை அதனால் அப்பா இனிய் பிள்ளைகள் பெறுவதில்லை. என்று முடிவு கட்டினர். அதை அம்மாவும் ஏற்றுக் கொண்டார். பெண் பிள்ளை ஒன்றை தத்தெடுக்க அப்பா விரும்பினார். ஆனால் ஊர் பெயர் தெரியாத பிள்ளை ஒன்றை தத்தெடுக்க அப்பாவின் தகப்பனுக்கு விருப்பமில்லை.”

‘‘மிகவும் சுவராய்சியமாக இருக்கிறது. பிறகு எப்படி நீ பிறந்தாய்’’ ஆவலோடு கேட்டாள் காயத்திரி.

‘‘எல்லாம் விதி. எப்படித்தான் மனிதர்கள் திட்டமிட்டாலும், விழுந்து விழுந்து கடவுளை வணங்கினாலும் விதிப்படி தான் எல்லாம் நடக்கும். அது தான் நடந்தது. மீண்டும் அம்மா கர்ப்பமுற்றார். அதனால் பெரும் பிரச்சினைகள். நான் கர்ப்பத்தில் புகுந்த நாள் முதல் பிறக்கும் வரை ஒரே பிரச்சினை தான். அம்மாவின் பெற்றோரும் சகோதரங்களும் இனத்தவர்களும் அப்பாவுடன் முரண்பட்டனர். அம்மாவை அநியாயமாகக் கொல்லப்போகிறார் எனக் கூறினார். என்னைப்பெறும் வரை அம்மா வைத்தியசாலையில் தான் இருந்தார். அதிட்டவசமாக நான் சுகமாகப் பிறந்துவிட்டேன். அம்மாவின் தகப்பன் நான் பிறந்த பின் கர்ப்பத்தடை செய்யுமாறு அப்பாவுக்கு நெருக்கடிகள் பலவும் கொடுத்தார். அதனால் கர்ப்பத்தடை செய்யப்பட்டது. இவ்வளவு பிரச்சனைகளைப்பட்டுப் பிறந்தவள் நான். அதைவிட அப்பா தினமும் சிவபூசை செய்பவர்.

மச்சம் மாமிசம் உண்பவர்களை வீட்டிற்கு வெளியே வைத்துத்தான் வரவேற்று உபசரித்து அனுப்புவார். நீ இடம் பெயர்ந்து வந்தனீ. நீ வேளாளர் என்றும் மாமிசம் உண்பதில்லையென்றும் அப்பாவுக்கு கூறியுள்ளேன். அப்படிப்பட்ட தந்தைக்கு மகளாகப் பிறந்த நான் மாமிசம் உண்ணும் குருபரனைக் காதலிப்பேனா…..?'' கேட்டுவிட்டு நிறுத்தினாள் பிரியா.

முற்றாக விடிந்து விட்டது. பிரியா எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு வந்து தனது அறையில் வைக்கப்பட்டிருந்த முருகப் பெருமானை வணங்கினாள். அவள் இயக்கத்திற்குச் சென்று பின்பு புனர்வாழ்வு பெற்று வந்த பின்பு அவளது தந்தை சொன்னார், ''நான்தவம் செய்து தான் உன்னைப் பெற்றெடுத்தேன். அதனால் தான் தவப்பிரியா என்று உனக்குப் யெர் வைத்து'' தவம் என்று பாசம் பொங்க அழைத்து வந்தேன். அதை உணராது இயக்கத்திற்குச் சென்று விட்டாய். இயக்கத்திற்குச் சென்றது

பிழையல்ல. ஆனால் நீ இயக்கத்தில் இருந்த காலத்தில் எமது குல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்திருக்மாட்டாய். முக்கியமாக நாம் யாரும் மாமிசம் உண்பதில்லை. நீ உண்டிருப்பாய். போரில் பலரைக் காயப்படுத்தியிருப்பாய். சிலசமயம் கொன்றும் இருப்பாய். முன்பு எனது தங்கையின் கணவன் மாமிசம் உண்பதால் அவர்களை வெறுத்து ஒதுக்கினேன். அது பிழையென்று இப்போது உணர்கிறேன். எனது குலதெய்வம் முருகன், அவன் வள்ளியைக் காதலித்தே திருமணம் செய்தான். வள்ளி வேடுவ குலத்தவள். அவர்கள் மிருகங்களை வேட்டையாடி உண்டனர். அப்படிப்பட்ட குடும்பத்தில் உறவு கொண்ட முருகனை நான் தெய்வமாக வழிபடும்போது மாமிசம் உண்பவர்களுடன் உறவாடாது விடுவதை எனது மனம் ஒப்புக் கொள்ள மறுக்கிறது. அதனால் நீ பூசை அறைக்கு வராதே. உனது அறைக்குள் முருகனை வைத்து வணங்கு'' என்று கூறியபின் அவள் பூசை அறைக்குள்ச் செல்வதில்லை.

‘‘உனது அப்பாவின் மனமாற்றம் குருபரனை ஏற்கும். அதனால் குருபரனுடன் கதை. உனது நிலைப்பாட்டை அவனுக்குச் சொல்லு. அவன் கட்டாயம் உன்னை ஏற்பான்’’ என்று அவளது உள்மனம் கூறியது.

‘‘மகளே, மகாபாரதத்தில் கண்ணன் பல திருகுதாளங்களைச் செய்து தான் நீதியைக் காப்பாற்றினான். இராமாயணத்திலும் தீமை செய்வோரை அழிக்க கிருஷ்ணன் பல மாயங்களைக் கைக்கொண்டான். புராணங்களும் அப்படித்தான். அசுரமனமுடையவர்களை ஒருபோதும் திருத்த முடியாது. அவர்கள் தர்மங்கள் செய்வதும், கடவுளை வணங்குவதும் தமது நன்மைக்கே தவிர வேறெதற்கும் அல்ல பலமுள்ளவர்கள், பணமுள்ளவர்கள் தமது நன்மைக்காக எதையும் செய்வார்கள். இறுதியில் தான் அழிவார்கள். இறுதிக்காலத்தில் திருந்தி நல்லவர்களாக மாறி முத்தியின்பத்தையும் பெறுவார்கள். இதை நான் கற்றும் உணரவில்லை. பாமரர்களைவிடக்

கேவலமானவனாக நடந்து விட்டேன். இப்போ இறுதிக்காலத்தில் அதை உணர்ந்துள்ளேன். அதனால் எந்தப் பயனும் வரப்போவதில்லை. உனக்கு நல்ல நல்ல இடங்களில் இருந்து திருமணம்பேசி வந்தபோது நான் அக்குடும்பத்தைப் பாராது அக்குடும்பத்தினரின் உறவினர் சகோதரர்களின் பலவீனங்களை ஆராய்ந்தேன். மாப்பிளை நல்லவராக இருந்தாலும் அவர்களின் உறவினர்களையும் ஆராய்ந்தேன். சிலர் குடிகாரர்களாக இருந்தனர். சிலர் மாமிசம் உண்பவர்களாக இருந்தனர். வாகீசனின் திருமணத்தில் எவ்வளவு பிரச்சனைகள் என்னால் வந்தன. காயத்திரி மிகவும் நல்லபெண். அவள் மாமிசம் உண்பதை எமது குடும்பத்திற்காக விட்டுவிட்டாள். ஆனால் நான் பிடிவாதமாக இருந்ததால் வாகீசன் அவளைச் செய்யவில்லை. பின் அவனுக்குச் செய்த பெண் நல்ல குடும்பத்தில் பிறந்தவள். வைத்தியர். தகப்பன் சிவபூசை செய்பவர். ஆனால் அவள் குடும்பத்திற்கேற்ற பெண் இல்லை. அளவுக்கதிகமான திமிரும் , ஆணவமும்

கொண்டவள். காயத்திரியை அவன் ஏமாற்றி விட்டான் என்று தினமும் சொல்லி அவனைத் துன்புறுத்தியதால் அவன் பிரிந்து சென்றுவிட்டான். தவம் உன்னுடைய விஷயத்திலும் நான் கொடுமையாக நடந்ததால் தான் நீ இயக்கத்திற்குச் சென்றாய். உனக்குப் பத்தொன்பது வயதில் பேசிய மாப்பிளையைச் செய்து தந்திருந்தால் நீ இயக்கத்திற்குச் சென்றிருக்கமாட்டாய். குடியும் குடித்தனமுமாக இருந்திருப்பாய்.'' அழுதார் பொன்னம்பலம்.

''அப்பாவுடைய பேச்சில் இருந்து அவர் இப்போது முற்றாக மாறிவிட்டார் என்று தெரிகிறது. அதனால் குருபரனைச் சந்தித்துக் கதைத்தல் வேண்டும்'' என்று நினைத்தாள்.

மறுகனம் குருபரனோடு எப்படிக்கதைப்பது? ஒரு பெண் எப்படி வாய்திறந்து தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்பது? காயத்திரி இருந்திருந்தால் காரியம் சுலபமாக முடிந்திருக்கும். இப்போ காயத்திரி இத்தாலியில் இருக்கிறாள்.

அவள் சென்றபின் எந்தத்தொடர்புகளும் இல்லை என்ன செய்யலாம் என்று யோசித்தாள். அவளுக்குப் பெரிதாக நண்பிகள் இல்லை. உறவினர்களின் பெண்பிள்ளைகள் எவரும் அவளோடு தொடர்பு கொள்வதில்லை. என்ன செய்யலாம் என்று வெகு நேரமாகச் சிந்தித்தும் உருப்படியான யோசனை எதுவும் தோன்றவில்லை. குருபரன் அவளின் பின்னால் அலைந்தபோது அவள் செருப்பைக் கழற்றிக் காட்டியுள்ளாள். இந்த நிலையில் எப்படிக்கதைப்பது என்பதை நினைக்க அவளுக்கு வாழ்க்கை வெறுத்தது. எதுவும் புரியாமல் திகைத்துப் போயிருந்தாள் அவள்.

# 3

மிகுந்த துக்கத்துடன் எதுவும் செய்யத்தோன்றாது கட்டிலில் அமர்ந்திருந்த பிரியாவின் நினைவைக் குழப்பியது ரெலிபோன்.

அது வாகீசனின் அழைப்பாகத்தான் இருக்கும் என்ற நினைவுடன் ரெலிபோனை எடுக்க விரும்பாது

அமர்ந்திருந்தாள் பிரியா. அவன் கதைக்கத் தொடங்கினால் ஒரு மணித்தியாலயம் வரை கதைப்பான். இன்று எப்படியும் குருபரனைச் சந்திக்க வேண்டும் என்ற நினைவில் இருந்த பிரியாவின் எண்ணத்தில் இடிவிழுந்தது. குருபரனைச் சந்திப்பதானால் காலை எட்டுமணிக்கு முன்பு சந்திக்கவேண்டும். காலையில் வேலைக்குச் சென்றானானால் இரவு பத்து மணிக்குப்பிறகு தான் வீட்டுக்கு வருவான். நான்கு மணிக்கு வேலை முடிந்தபின் பாருக்குச் சென்று நன்றாகக் குடித்து விட்டுத் தான் வருவான். அதனால் காலையிலேயே சந்திக்க வேண்டும் என்ற அவளது எண்ணம் தடைப்பட்டது. அவளுக்கு வேதனையாக இருந்தது.

மணி ஓயாமல் அடித்துக்கொண்டிருந்தது. பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டு இடது கையும் காலும் செயலிழந்து சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் அவளது தந்தை பொன்னம்பலம், ‘‘தவம், என்ன செய்கிறாய்? கொண்ணன் அழைப்பில் இருக்கிறான். எடுத்துப்பேசு’’ என்றார் அவன் பதில் சொல்லுமுன் தந்தையிடம்

சென்று, ‘‘வாகீசன் அண்ணா உங்களோடு பேசப்போகிறராம்’’ என்று கூறிவிட்டுப் கான்போனைப் பொன்னம்பலத்திடம் கொடுத்தாள் பிரியா. இனிக்குருபரனிடம் செல்லலாம் என்று தீர்மானித்தாள் பிரியா.

‘‘எப்படி அப்பா இருக்கிறீர்கள்’’ என்று கூறிவிட்டு விம்மி விம்மி அழுதான் வாகீசன்.

‘‘ என்ரை நோய் மாறாது. அதற்காக ஏன் துன்பப் படுகிறாய்? உனக்குள்ள கஷ்டங்கள் யாவும் எனக்குத்தெரியும். என்னால் தான் எல்லாம் நடந்தது. நான் என்ன செய்வது? அது தான் விதியென்றால் யாரால் அதை மாற்ற முடியும்’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘நடந்ததை எண்ணிக் கவலைப்படுவதால் என்ன நடக்கப் போகிறது. எனது வாழ்க்கையைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என்னுடைய நினைவு முழுவதும் தவத்தைப்பற்றியது தான். நீங்கள் அவளைத் தவமிருந்து பெற்றீர்கள். அவள் தன்னுடைய

பள்ளித் தோழிகளுடன் சேர்ந்து இயக்கத்திற்குச் சென்றதால் தானே இந்தநிலை……….''

''இல்லை வாகீசா. அது அவளின்ரை விதி. பதினெட்டு வயதில் அவள் எம்மை விட்டுப் பிரிவாள் என்று சாத்திரி மார் சொன்னவங்கள். அதை நான் தவறாகப் புரிந்து கொண்டு அவளுக்குத் திருமணம் பேசினேன். என்னுடன் வேலை செய்யும் இராமநாதன் தனது மகனைத்திருமணம் செய்யுமாறு கேட்டான். நான் அதற்குச் சம்மதித்தேன். இராமநாதன் மிகவும் நல்லவன். சிவபக்தன். சமய அனுட்டானங்களைக் கைக்கொள்பவன். அவனின் மகளின் சாதகமும் நல்ல பொருத்தமுடையதாக இருந்தது. அந்தநேரம் தான் இவள் இயக்கத்திற்குப் போனவள். அதனால் அவளின் வாழ்க்கை பாழாப்போச்சு'' பொன்னம்பலம் விக்கி விசும்பி அழுதார்.

''அழாதைங்கோப்பா….. அழாதைங்கோப்பா. நடந்தவற்றை நினைத்துக் கவலைப் படுவதில் அர்த்தமில்லை. எப்படியாவது அவளுக்கு ஒரு

திருமணத்தை நடத்தி வைக்கவேண்டும்'' என்றான் வாகீசன்.

''அது நடக்காத விசயம். நான் பல கலியாணப் புறோக்கர்களிடம் அவளது சாதகத்தைக் கொடுத்திருக்கிறேன். ஒருத்தரும் வரவில்லை. போனகிழமை எங்கடை வீட்டில் கூலிவேலை செய்யும் வேலாயுதத்தின் மகளுக்குத் தடல் புடலாகத் திருமணம் நடைபெற்றது. அவள் ஆசிரியை. சில நாட்களுக்கு முன்பு காய்ச்சல் என்று சொல்லி மருந்தெடுக்க டொக்டரிடம் சென்றாள். அந்த டொக்டருக்கு அவளைப்பிடித்து விட்டது. டொக்ரர் தகுதி தராதரம் பாராது அவளைத் திருமணம் செய்துவிட்டார்''. பெருமூச்சு விட்டார் பொன்னம்பலம்.

''அதற்கு ஏனப்பா கவலைப்படுகிறீர்கள். ஒருவரின் வாழ்க்கை அவரின் விதிப்படி நடக்கும் என்று சொல்லுகின்ற நீங்கள் அதற்காகக் கவலை கொள்ளலாமா?'' என்று கேட்டான் வாகீசன்.

‘‘நான் கவலை கொள்ளவில்லை. விஷயத்தைச் சொன்னேன். இவளையல்ல இயக்கத்திற்குச் சென்ற எந்த ஒரு ஆணையோ, பெண்ணையோ திருமணம் செய்ய இங்கு யாரும் முன்வருகிறார்களில்லை. எம்மிடம் கோடிக்கணக்காகச் சொத்து இருக்கு. வாழ்க்கைக்கு துணையாக ஒரு நல்லவன் கிடைத்தால் போதுமென்று புறோக்கர்மாரிட்ட சொல்லியும் யாரும் இதுவரை கிடைக்கவில்லை. அவளை நீங்கள் இருக்கும் ஒரு நாட்டிற்குக் கூப்பிட்டு அங்கையுள்ள ஒருவனைச் செய்து வையுங்கோ. உங்குள்ள பலர் இயக்க உறுப்பினர்கள். இப்போதும் போராடுவதாகப் பேப்பர்களில் செய்திகள் வருகின்றன’’.

வாகீசன் பெரிதாகச் சிரிப்பது கேட்டது. ‘‘இப்ப ஏன் சிரிக்கிறாய்’’ சற்றுக் கோபமாகக் கேட்டார் பொன்னம்பலம்.

‘‘உங்களுக்கு யாழ்ப்பாணத்தாரின் குணம் தெரியாது. அவர்களது பேச்சு ஒன்று செயல்

வேறொன்று. இப்போ இங்கே செய்வதெல்லாம் பொழுது போக்கிற்காகவும் விளம்பரத்திற்காகவும் மட்டுமே. ஊனமுற்ற போராளிகளுக்குக் கூட உதவ யாரும் முன்வரமாட்டார்கள். நன்றாக நடித்துப் பழகிவிட்டார்கள். போராட்ட வேளைகளில் உணர்ச்சிவசப்பட்டுப் பொங்கி எழுந்தவர்கள் போராட்டத்தின் பின் கடைசி ஊனமுற்றவர்களுக்காவது உதவலாம் தானே. அதைச் செய்யாது பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் இங்குள்ளவர்களை யாரும் நம்புவதில்லை'' என்றான் வாகீசன்.

''அப்படியா….?'' பெருமூச்சு விட்டார் பொன்னம்பலம். ''அப்பா , நான் இங்குள்ள பலரைக்கேட்டுப்பார்த்தேன். எவரும் பதில் சொல்லவில்லை. நான் கேட்டதன் பின் பலர் என்னுடன் கதைப்பதில்லை. இது தான் போராட்ட உலகம் என்று நினைத்தேன். தவத்திற்கு இங்கு வர விருப்பமில்லை. அத்துடன் அரசாங்கம் அவளுக்கு அனுமதி

கொடாது. இயங்க முடியாத உங்களையும் நோயாளியான அம்மாவையும் தவிக்க விட்டு விட்டு நான் எங்கும் போகமாட்டேன் என்று திடமாகக் கூறி விட்டாள்'' என்றான் வாகீசன்.

''எங்களைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். இங்கு முதியோர் பாதுகாப்பு இல்லங்கள் பல இருக்கு. முக்கியமாக சைவச் சமயக் கோட்பாடுகளைப் பேணுகின்ற இல்லங்களும் இருக்கு. அதில் ஒன்றில் சேர்ந்து விடுங்கள்.............''

''ஐயோ அப்பா, அப்படிச் சொல்லாதீர்கள். எம்மைப் பெற்று வளர்த்த நீங்கள் முதியோர் இல்லத்தில் இருக்கலாமா...? எனக்குப் பிள்ளைகள் இல்லை நான் உங்களோடு கூடிவாழ உங்கு வருகிறேன். நான் வைத்தியர். உங்கு வந்தாலும் என்னால் பிழைக்கமுடியும்''.

''உன்னுடைய மனைவி ஆடம்பரப்பிரியை. அவளது பெற்றோர்களுக்கும் சகோதரர்களும் நீ வசிக்கும் நாட்டில் தானே வசிக்கிறார்கள்.

அதனால் அவள் அவர்களைவிட்டு விட்டு வருவாளா….?’’

“அவள் வரமாட்டாள். அவள் வரத்தேவையில்லை. அவளை எனக்கு வேண்டாம்’’ என்று சொல்ல ………. வாகீசன் தன்னைச் சமாளித்துக் கொண்டு சொன்னான்; “அவளுக்குத் தனது தாய் தகப்பன் எவ்வளவு முக்கியமோ அதை விட எனக்கு முக்கியம் நீங்கள்’’ என்றான்.

சில நிமிடங்கள் ரெலிபோன் மௌனம் சாதித்தது. கதையை மாற்றுவதற்காக வாகீசன் சொன்னான்; “தவத்தைக் கூப்பிடுங்கோ. அம்மாவோடும் கதைக்கவேண்டும்.’’

பொன்னம்பலம் அருகில் இருந்த மேசையில் போனை வைத்து விட்டு, “தவம்…… தவம்….’’ எனப்பல முறை கூப்பிட்டார்.

மகாலட்சுமி பொல்லை ஊன்றியபடி தள்ளாடித் தள்ளாடி , வந்து , “அவள் அரைமணித்தியாலயத்திற்கு முன்பு மோட்டார்

சைக்கிளில் போனவள்’’மகாலட்சுமிக்கு மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது.

‘‘அப்பா தவம் வெளியே சென்றுவிட்டாளா…? அம்மாவைப் பேசச் சொல்லுங்கோ’’ என்றான் வாகீசன்.

‘‘மகா, வாகீசன் உன்னோடை கதைக்கப்போகிறானாம். மேசையில் போன் இருக்கு எடுத்துப்பேசு’’.

சில நிமிடங்களின் பின் மகாலட்சுமி, ‘‘தம்பீ, என்று அழைத்தாள். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. ‘‘ஸ்பீக்கரில் விடுங்கோ அம்மா. அப்பாவும் பேசட்டும்’’ என்றான் வாகீசன்.

‘‘நீ சுகமாயிருந்தால் சரி……… தெண்டித்துத் தவத்தைக் கரைசேர்க்கப் பாருங்கோ. நாங்கள் இண்டைக்கோ நாளைக்கோ எண்டிருக்கிறாம். நீங்கள் அஞ்சுபேரும் அஞ்சு நாட்டிலை இருக்கிறியள். அப்பா கஷ்ட்டப்பட்டு உங்களைப் படிப்பித்தவர். எல்லாரும் நல்லாய்ப் படித்து நல்ல

உத்தியோகத்தில் இருந்தீர்கள். ஆற்ரை கண்பட்டுதோ தெரியேல்லை. அஞ்சுபேரும் போட்டியள். எம்மிடம் போதிய சொத்திருக்கு. இருந்து என்ன பயன்.....?'' விம்மினாள் மகாலட்சுமி.

''அழாதைங்கோம்மா. நாங்கள் பெரும்பாவிகள் . உங்கு வாழ்ந்திருக்கலாம்.....?'' கலங்கினான் வாகீசன்.

''இங்குள்ளவர்களைப் பார்க்க எனக்குப் பொறாமையாக இருக்கு. போனகிழமை வேலாயுதத்தின் மகளுக்குத் திருமணம் நடைபெற்றது. மாப்பிளை டொக்ரர் வேலாயுதத்தின் மச்சானுக்கு நேற்று இரவு திடீரென்று மாரடைப்பு வந்து விட்டது. வேலாயுதத்தின் மாப்பிள்ளை உடனே வந்து சிகிச்சை அளித்துவிட்டு அம்புலன்சை வரவழைத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். எம்மிடம் எவ்வளவு பணம் இருக்கு. காணி, பூமி இருக்கு எமக்கு வருத்தம் என்றால் தவம் தான் ஓடித்திரிந்து ஆட்களைக் கூட்டி வருவாள்.

அதுகளை நினைக்கத் தான் கவலையாக இருக்கு’’.

‘‘உண்மைதானம்மா, எங்கட வீட்டிலை மூன்று டாக்ரர்கள் இருந்தும் எந்தப்பயனும் இல்லை. எமது தாத்தா எவ்வளவு சொத்தைத்தேடினார். அது போல அப்பாவும் தேடினார். அவை போதாதென்று நாமெல்லாம் நாட்டை விட்டு வெளியேறி விட்டோம். போர்நடந்த நாட்டில் பல்வேறு விதமான துன்பங்களுக்கு மத்தியிலும் இடம் பெயராமல் சொந்த ஊரில் வாழ்ந்த இலட்சக்கணக்கான மக்கள் இன்பமாகத் தானே இருக்கிறார்கள். அதனால் நான் உங்களுடன் வாழ ஆசைப்படுகிறேன்’’ என்றான் வாகீசன்.

‘‘மகா வீண்கதையைக் கதைத்து அவனது மனதைக் குழப்பாதை’’ என்று பொன்னம்பலம் கூறுவது வாகீசனுக்குத் தெளிவாகக் கேட்டது.

‘‘கலியாணம் முடித்து ஒருமாதத்துக்குள் வேலாயுதத்தின் மருமகன் ஊரின் அபிமானத்தைப் பெற்றுவிட்டான். உங்கள் பிள்ளைகளில் ஒன்று

அதைப் பெறுமா....? காசுபணம் இருக்கிற உங்களுக்கு இல்லாத மரியாதை வேலாயுதத்திற்கு உண்டு. அவனிடம் பணம் இல்லையே தவிரக் குணம் இருக்கு. உதவி செய்யும் மனப்பாங்கு இருக்கு. இதைவிடப் பணம் பெரிதா....? கடவுள் அவனது குணத்திற்கேற்ற மாப்பிளையைக் கொடுத்துள்ளார்''. என்றாள் மகாலட்சுமி.

அவர்களின் கதையைக் கேட்கவாகீசனுக்குத் தலை வலித்தது. தொடர்பைத் துண்டிக்க விரும்பி, ''தவம் வந்தவுடனை எனக்கு ரெலிபோன் எடுக்கச் சொல்லுங்கோ. நான் வேலைக்குச் செல்லவேண்டும்.'' என்று கூறித் தொடர்பைத் துண்டித்தான் வாகீசன்.

# 4

ரெலிபோனைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு: ''கடைக்குச்சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சூட்டிப்பப்பில் புறப்பட்டாள் பிரியா.

தவம் என்று அவளை அழைப்பது அவளுக்குப் பிடிப்பதில்லை. தாயும் தகப்பனும் ‘‘தவம்’’ என்று அழைத்தால் எரிந்து விழுவாள்.

குருபரன் அவளைத் தவம் என்று தான் அழைப்பான். அப்படி அழைப்பது அவளுக்குப் பிடிக்காது என்று அவனுக்குத் தெரியாது. அவள் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது முன்பொரு நாள் வகுப்பில் குருபரன், ‘‘தவம், நேற்று நான் பாடசாலைக்கு வரவில்லை. கெமிஸ்ரிசேர் நோட்ஸ் தந்தவராம். கொப்பியைத் தாரீரா….?’’ என்று பணிவுடன் கேட்டான்.

தவம் என்று அழைத்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதைவிட அவளுடன் படிக்கும் மாணவர்கள் நாற்பது பேர் இருக்கையில் தன்னிடம் மட்டும் ஏன் நோட்சைக் கேட்டான் என்ற எண்ணமும் மனதில் எழுந்தது. வழிதெருக்களில் தனக்குப் பின்னால் வருவது, காணும் பொழுதெல்லாம் ஏக்கத்துடன் பார்ப்பதும் அதைவிட ஏனைய மாணவர்கள் அவனின் பெயரைச் சொல்லிக் கேலி செய்வதும்

அவளுக்குப் பிடிப்பதில்லை. அவளின் முகத்தைப் பார்த்தான். அதில் இனம்புரியாத உணர்ச்சிகள் பரவியிருந்தன. உதடுகள் துடித்தன.

தான் கேட்டது அவளுக்குப் பிடிக்கவில்லை என்று குருபரனுக்குத் தெரிந்தது, ‘‘தவம் நீ கெட்டிக்காரி. எழுத்துக்கள் முத்தைவிடப் பிரகாசிப்பான என்று கெமிஸ்ரி ஆசிரியர் சிவநேசன் அடிக்கடி சொல்வார். அத்துடன் உனக்குப் பிடித்தமானபாடம் கெமிஸ்ரிதான். சில சமயங்களில் சிவநேசன் சேர் கேள்விகளுக்கு உன்னைத்தான் விடையளிக்குமாறு கூறுவார். ஏனைய மாணவர்களும் உன்னிடம் தானே தமது சந்தேகத்தைக் கேட்பார்கள். நீ அன்போடு சொல்லுவாய் அதனால் தான் கேட்டேன்’’ என்றான். அதற்குள் பிரியா, ‘‘தேவையில்லாமல் கதைக்க வேண்டாம். இந்தா கொப்பி. காயத்திரியும் நேற்றுப்பாடசாலைக்கு வரவில்லை. அதனால் எனது கொப்பியைக் கேட்டவள். நீ எழுதி விட்டு அவளிடம் கொடு. என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அன்று மாலை பிரியாவின் வீட்டுக்கு வந்த காயத்திரி குருபரன் கொடுத்த கொப்பியைக் கொடுத்தாள். அதைவாங்கி மேசையில் வைத்து விட்டுப் பிரியா மாமியாரின் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

இரவு வந்து கொப்பியை விரித்த போது ஒரு என்வலப். அதனுள் இருந்து விழுந்தது. அதை எடுத்துப் பார்த்தாள். அது ஒட்டப்பட்டிருந்ததே தவிர முகவரி எதுவும் இல்லை, ‘‘காயத்திரிக்கு உரிய என்வலப்பா….?’’ என யோசித்தவள். அதைப் பிரித்தாள்.

‘‘பொன்னம்பலம் ஐயா,

தவமிருந்து பெற்ற தவமே!

உன்னையே எண்ணித் தவமிருக்கிறேன்.

உன்னை அடைய

நீயில்லாவிட்டால்

எனக்கு வாழ்வில்லை.

உன்னை அடையாவிட்டால்

காலம் முழுவதும்

உன் நினைவுகளோடு வாழ்வேன்.

தயவு செய்து

பதில் கூறு

அன்புள்ள குருபரன்.

அப்போது அதைவாசிக்க அவளுக்கு அளவு கடந்த கோபம் உண்டானது. உடனேயே சைக்கிளை எடுத்துக்கொண்டு காயத்திரியின் வீட்டுக்குச் சென்றாள். வீட்டில் காயத்திரி மட்டுமே இருந்தாள். தாயும் தந்தையும் எதிர் வீட்டில் ஒருவர் மரணமானதால் அவரின் குடும்பத்தினருக்கு இரவு உணவு கொண்டு சென்றிருந்தனர்.

காயத்திரியின் வீட்டுக்குள்ளே கோபத்துடன் வந்த பிரியா சைக்கிளை நிலத்தில் போட்டுவிட்டு உள்ளே வந்தாள். காயத்திரி பிரியாவை

எதிர்பார்த்தாள். ஆனால் அவள் இரவு வருவாளென எதிர்பார்க்கவில்லை.

“நீ என்ன கலியாணம் புறோக்கரோ…?” ஆவேசத்துடன் கேட்டாள் பிரியா”

எனக்குக் குருபரன் கடிதம் வைத்தது தெரியாது. பாடசாலையில் வைத்து நீ கொடுக்கச் சொன்னதாய் உனது கொப்பியைத் தந்தான். நான் எழுதும் போது தான் அதைக் கவனித்தேன்”. என்றாள் காயத்திரி.

“பொய் சொல்லாதை. இரண்டுபேருமாகச் சேர்ந்து தான் நாடகமாடுகிறீர்கள். எமது குடும்பத்தைப்பற்றி உனக்குத் தெரியும். அதைவிட என்னைப்பற்றியும் உனக்குத் தெரியும். அப்படி இருக்க எப்படிக் கடிதத்தை வாங்கி வருவாய்?” கொதித்தெழுந்தாள் பிரியா.

பிரியா சற்று யோசித்துப் பார் நான் கொப்பி கேளாவிட்டால் , குருபரன் உன்னிடம் தான் கொப்பியைத் தந்திருப்பார். ஒரு திட்டத்துடன் தான்

அவன் உன்னிடம் கொப்பியை வாங்கியிருக்கிறான்'' என்றாள் காயத்திரி.

காயத்திரி கூறுவதில் நியாயம் இருப்பதாக நினைத்த பிரியா சொன்னாள், ‘‘ எனக்கேன் இவன் தொடர்ந்து தொந்தரவு தருகிறான். என்னால் இவனது தொல்லைகளைத் தாங்கி கொள்ளமுடியவில்லை.'' விக்கி விசும்பி அழுதாள் பிரியா.

‘‘அழாதையடி படிக்கிற காலங்களில் இப்படியான பல பிரச்சினைகள் வரும். அதையெல்லாம் பொருட்படுத்தாதை. காதல் என்பது சாதி சமயம் குலம் கோத்திரம் பணம் பொருள் பார்த்து வருவதில்லை. ஏதோ ஓர் உந்தலால் மனதில் துளிர்த்து வளர்கிறது. அதை அவன் சொல்கிறான். உனக்கு விருப்பமில்லா விட்டால் விடு. சண்டைக்குப் போகாதே. நீங்கள் பிரச்சினைப்பட்டால் ஊர்முழுவதும் பிரச்சினை பரவி விடும். அது உனது வாழ்க்கைக்குக் கேடு தான் விளைவிக்கும். அதை மறந்துவிடு. உனது நிலைப்பாடு பற்றி நான் பலமுறை அவனுக்குக்

கூறிவிட்டேன். அப்படியிருந்தும் உன்னைப் பின் தொடரும் அவன் ஒரு மடையன்’’ என்றாள் பிரியா.

மறுநாள் பாடசாலையில் குருபரனைத் தனிமையில் சந்தித்தாள் பிரியா, ‘‘குரு, உனக்கும் எனக்கும் எந்த வகையிலும் ஒத்துவராது. என்னைத் தொந்தரவு செய்யாதே. எனது நிலைப் பாடு பற்றிக் காயத்திரிக்குத் தெரியும். அவள் சொன்னவள் தானே’’ பிரியா பேசிக்கொண்டிருக்கும் போது குருபரன் குறுக்கிட்டான், ‘‘தவம் உன்னைத் தவிர வேறு எதுவும் எனது மனதில் இல்லை. பிரியா என்னை ஏற்றுக்கொள்’’ அழுதான்.

பிரியாவுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது, ‘‘உன்னைத் திருத்தமுடியாது. செருபாலை தான் அடிப்பேன்’’ என்று செருப்பைக் கழற்றினாள்.

அப்போது சில மாணவர்கள் அவ்விடத்திற்கு வந்தனர். அதனால் இருவரும் பிரிந்து சென்றனர்.

மோட்டார் சைக்கிளில் பிரியாவின் உடல்பறக்க மனம் கடந்த காலச் சம்பவங்களை இரை மீட்டியது. “வாசிகசாலைக்கு அருகில் ஒரு முன்பள்ளி உள்ளது. அதை அவளுடன் இயக்கத்தில் இருந்த அம்பிகா நடத்தி வந்தாள். பிரியாவின் மருத்துவக்குழுவில் அவளும் இருந்தாள். அதனால் இருவரும் நண்பர்களாக இருந்தனர். அம்பிகா அந்த ஊரவள். பிரியாவிலும் பார்க்க ஐந்து வயது குறைந்தவள். இருப்பினும் நல்ல தோழியாக அவள் பழகி வந்தாள். அம்பிகா ஊரவளாகையால் குருபரனைப்பற்றி அவளுக்குத் தெரியும். இரண்டு வாரங்களுக்கு முன் நேசறிக்கு முன்னால் குருபரன் நன்றாகக் குடித்துவிட்டு விழுந்து கிடந்தான். அவனது வாய் “தவம்...... தவம்.... மனதை மாற்றமாட்டாயா?” என்று முணுமுணுத்தது.

அதை அவள் பிரியாவுக்குச் சொல்லி விட்டுச் சொன்னாள், “அக்கா, குருபரன் அண்ணா உங்களை விரும்பியதாகவும், நீங்கள் விரும்பததால் தான் குடிக்கிறார் என்றும்

ஊரவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் நில நாட்களுக்கு முன் குருபரன் அண்ணா குடித்துவிட்டு விழுந்து கிடந்து "தவம், தவம்….. என்னை விட்டு போகாதை என்று" புலம்பியதைக் கேட்டபின் எனக்கு அவரின் மீது ஒரு இனம் தெரியாத பாசம் ஏற்பட்டுவிட்டது. அதனால் கேட்கிறேன் ஏன் நீங்கள் அவரைத் திருமணம் செய்யக்கூடாது? அவர் உங்கடை சாதி. உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறார்…. செய்யலாம் தானே. மருத்துவமுகாம் மீது விமானத் தாக்குதல் நடை பெற்ற போது செல்துண்டு உங்கள் வயிற்றில்பட்டு பெரிய காயம் ஏற்பட்டது. நீங்கள் தப்புவீர்களென யாரும் நம்பவில்லை. இறைவனின் அருளால் தப்பிவிட்டீர்கள். இயக்கத்திலுள்ள எவரையும் யாரும் திருமணம் செய்யமாட்டார்கள். வளர்மதி அக்காவுக்கு எத்தனை திருமணங்கள் பேசி வந்தன. இயக்கத்தில் இருந்தவள் என்று கேள்விப்பட்டதும் எல்லோரும் ஓடிவிட்டனர். குருபரன் அண்ண ாநல்லவர். மதுவும் மாமிசமும் உண்கிறார் என்பதற்காக வெறுக்காதைங்கோ.

உங்களைத் திருமணம் செய்தால் அவர் திருந்திவிடுவார். என்னை நம்புங்கள் அக்கா'' என்றாள் அம்பிகா.

''போடி உனக்கென்ன விசரோ….'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டுச் சென்றாள் பிரியா.

நேசறிக்கு முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே சென்றாள் பிரியா. அப்போது பிள்ளைகள் எவரும் வரவில்லை.

''வாருங்கோ அக்கா. விடியுமுன் வந்திருக்கிறீர்கள். ஏதாவது …'' என்று அம்பிகா முடிக்கு முன் பிரியா சொன்னாள் '' ஓம் உன்னால் ஒரு காரியம் ஆக வேண்டும்''.

''என்னாலா..? அப்படியென்ன. குருபரன் அண்ணாவைச் சேர்த்து வைக்கிறதா..? அது முடியாது தாயே'' என்று சிரித்தாள் அம்பிகா.

அவள் அங்கு வரும்போதெல்லாம் குருபரனது கதையைத் தொடக்குவாள். பிரியா ஏசிவிட்டுச் செல்வாள். அதன்படி தான் இன்றும் கேட்டாள்.

‘‘ஓம் அம்பிகா நான் முன்பு அவரை அளவுக்கு அதிகமாகத் தண்டித்துவிட்டேன். பேசக்கூடாத வார்த்தைகள் பலவற்றைப் பேசிவிட்டேன். இப்போ அதை நினைக்கக் கவலையாக இருக்கு. அதனால் என்னால் அவரோடு பேசமுடியாதுள்ளது. நீ தான் எனது நிலைமையை எடுத்துச் சொல்லி எம்மைச் சேர்த்து வைக்க வேண்டும்’’.

‘‘என்ன நான் கனவு காணவில்லையே? நீங்கள் தலை அசைத்தால் உங்களைத் தூக்கிச் சென்று அரியாசனத்தில் இருத்த அவர்காத்திருக்கிறார். நீங்கள் செருப்பாலை அடிக்க வந்தனீங்களாம். அதைக் கூட அவர் பெரிதாக எடுக்கவில்லை’’ என்றார் அம்பிகா.

‘‘இப்பவும் அவர் என்னை விரும்புகிறாரா….? ஆவலோடு கேட்டாள் பிரியா.

‘‘இப்ப அல்ல எப்பவும் அவர் உன்னைத்தான் விரும்புகிறார். அதனால் தான் அவர் திருமணம் செய்யாமல் இருக்கிறார். சென்றவாரம் இங்கு வந்து

உங்களைப்பற்றிக் கதைத்தவர். அம்பிகா நீ பிரியாவுடன் என்னைச் சேர்த்து வைத்தாயானால் வாசிகசாலைக்கு அருகில் இருக்கும் காணிக்குள் உனக்கு நேசறிக்கான கட்டிடத்தைக் கட்டித் தருவேன்'' என்றவர். அப்ப எனக்குக் கட்டிடம் கிடைக்கப்போகுது. இந்த வாடகைக் கட்டிடத்தை விட்டிடலாம்'' மகிழ்ந்தாள் அம்பிகா.

''பிரியா, அவர் உன்னைப் பற்றி டயறிகளில் எழுதியவற்றைக் கொண்டு வந்து தந்து அதைக்கொண்டு சென்று கொடுக்கும்படி சொன்னவர்.. நான் அதைத் தருவதற்காக அவரின் பேச்சை எடுத்தால் நீ எரிந்து விழுவாய். அதனால் நான் சொல்லவில்லை'' என்றவள் உள்ளே சென்று ஒரு பாசலை எடுத்துவந்தாள். அது நல்ல முறையில் பொதி செய்யப்பட்டிருந்தது.

''ஐந்து நிமிடங்களுக்கு முன்பு தான் வேலைக்குச் சென்றவர். பின்னேரம் வந்ததும் கதைக்கிறேன்'' என்றாள்.

“போன்பண்ணிச் சொல்ல முடியாதே….” ஆவலோடு கேட்டாள் பிரியா.

“அவள் முக்கியமான வேலையில் இருந்தால் போன் ஒவ்வில் இருக்கும். இன்று சீனக்குழு ஒன்று தன்னைச் சந்திக்க வருவதாகக் கூறியவர்” என்று பொய்சொன்னாள் அம்பிகா. அவளைத் தவிக்க வைத்தல் வேண்டும். இவாவின் திமிருக்கு உடனே பதில் கூறக்கூடாது” என்றும் நினைத்தாள் அம்பிகா.

# 5

அம்பிகா கொடுத்த பார்சலைப் பிரித்தாள் பிரியா. அதற்குள் நாலைந்து கொப்பிகள் இருந்தன. அவற்றிற்கு அழகான உறை போடப்பட்டிருந்தது. அதன்மேல் ஆண்டுகள் எழுதப்பட்டிருந்தன. 1991 என்று எழுதப்பட்ட கொப்பியைப் பிரித்தாள்.

1991.05.17 எனத் திகதியிடப்பட்டிருந்தது. பல நாட்கள் பாடசாலைக்கு வராதிருந்த தவம் அன்று வந்திருந்தாள். மாணவர்கள் எல்லோரும்

அவளையே பார்த்தனர். இவ்வளவு காலமும் சிறுமியாக இருந்த அவள் பெரியவளாகியிருந்தாள். எனக்கு அவளை மீண்டும் மீண்டும் பார்க்கவேண்டும் போல இருந்தது. முன்னெப்பொழுதும் காணாத தோற்றமது. வட்டவடிவான முகம். நீண்ட தலைமுடியை இரண்டாகப் பிரித்துப் பின்னியிருந்தாள். நெற்றியில் திருநீற்றுக்குறி. அதற்கு மேல் சந்தனப்பொட்டு. இரண்டு கைகளிலும் தீட்சைபெற்ற குறி. மொத்தத்தில் தேவதைபோல இருந்தாள். அவளுக்கு அப்போது பதினைந்து வயது. வயதுக்கு மீறிய தோற்றம். இருப்பினும் அத்தோற்றம் என்னைக் கவர்ந்தது.

அதை வாசித்து விட்டுச் சில கணங்கள் மௌனமாக இருந்த அவள் அக் கொப்பியை மூடிவைத்து விட்டு

2007 என்று எழுதப்பட்ட கொப்பியை எடுத்து விரித்தாள்.

2007.10.12 அன்று தவத்தைச் சந்தித்தே தீருவது என்று நினைத்துக் காத்திருந்தேன். முதல் நாள்

அவளிடம் கெமிஸ்ரிப் பாடக் கொப்பியை வாங்கியிருந்தேன். அக் கொப்பியை ஒரு திட்டத்துடன் தான் வாங்கினேன். கொப்பியைக் கொடுக்கும்போது அதற்குள் எனது மனநிலையை விளக்கி ஒரு கடிதம் வைக்கவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அவள் கொப்பியை காயத்திரியிடம் கொடுக்குமாறு கூறினாள். காயத்திரி நல்லவள். ஆனால் பயந்தவள். முதலில் எனது கடிதத்தை வாங்க மறுத்தாள். நான் அவளின் காலில் விழாத குறையாகக் கெஞ்சினேன். அதனால் மனம் மாறிக் கடிதத்தை வாங்கி கொப்பிக்குள் வைத்தாள்.

2007.07.10 இன்று பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா. அதன் உபயகாரர் தவத்தின் தகப்பன். அதனால் நான் நேரத்துடன் கோவிலுக்கு வந்து விட்டேன். தவம் அன்று பட்டுச்சேலையுடன் கோவிலுக்கு வந்தாள். நல்ல சிவந்த உடலுக்கு சிவப்புநிறக் காஞ்சிபுரச்சேலை

மிகவும் எடுப்பாக இருந்தது. நீண்ட தலைமுடியின் தொங்கலில் நித்தியகல்யாணி மொட்டால் கட்டப்பட்டசரம் தொங்கிக் கொண்டிருந்தது. பின்னலின் பிடரிப் பகுதியில் சிவப்பு நிற ரோஜா பூத்திருந்தது. கை நிறைய வளையங்கள். சேலையின் நிறத்திலான பொட்டு, லிப்ஸ்ரிக் தோடு என்பன மிகவும் எடுப்பாக இருந்தன. தேவதை ஒன்று வான்வழியாக வந்து நடை பயில்வது போல் இருந்தது.

“பிள்ளையாரே எனக்கு அவள் வேண்டும்” என்று பிரார்த்தித்தேன். பகல் முழுவதும் அவளை ரசித்தமையால் கனவிலும் வந்தாள் மகிழ்ச்சியாக இருந்தது.

இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு நடைபெற்ற தேர்த்திருவிழாவை நினைத்துப் பார்த்தாள். அவன் எழுதிய எவையும் ஞாபகத்திற்கு வரவில்லை.

மறுநாள் அவளைச் சந்திக்கலாமா என்று ஏங்கிய போது அவளே என்னைத்தேடிவந்து, “ குரு உனக்கும் எனக்கும் எந்தவகையிலும் ஒத்துவராது. என்னைத் தொந்தரவு செய்யாதே.

எல்லாவற்றையும் காயத்திரியிடம் கேட்டுத் தெரிந்துகொள்'' என்றாள். அதைப் பொறுக்கமுடியாத நான் குறுக்கிட்டு, ‘‘தவம் உன் நினைவைத் தவிர வேறு எதுவும் என் மனதில் இல்லை. ப்ளீஸ் என்னை ஏற்றுக்கொள் என்றேன்.'' அவள் தனது காற்செருப்பைக் கழற்றிக் காட்டி உன்னைத் திருத்த முடியாது. தொல்லை கொடுத்தால் இதனால் நான் அடிப்பேன்'' என்றாள். அதற்காக நான் துயரப்படவில்லை. அவளை அடைவதற்காக எதையும் நான் தாங்குவேன். செருப்பால் அடித்தாலும் கூட.''

அதை வாசித்தும் பிரியாவின் கண்கள் கலங்கின. அந்த நேரச்சூழ் நிலை அது என நினைத்தாள்.

முடிவு:

அடுத்து 2008 ஆம் ஆண்டு என்று எழுதப்பட்ட கொப்பியை எடுத்துப்பிரித்தாள்.

2008-06-10

இன்று எனது உயிர் என்னை விட்டுப் பிரிந்து விட்டது. தவம் தன்னுடன் படிக்கும் தோழிகள் பலருடன் இயக்கத்திற்குச் சென்றுவிட்டாள். இயக்கத்திற்குச் சென்றவர்கள் திரும்பி வரமாட்டார்கள். அதனால் என்னுயிர் பிரிந்து விட்டது. நான் நடைப்பிணமானேன். வாழவேண்டும் என்று இருந்த பற்று நீங்கிவிட்டது. என்னை அவள் நிராகரித்தாலும் ஒரு காலத்தில் ஏற்பாள் என்று நினைத்தேன். இயக்கத்திற்குச் சென்றதன் மூலம் அவள் என்னைக் கொன்றுவிட்டாள். அதனால் குடிக்கத்தொடங்கினேன். அவளை மறக்கலாமென்று குடித்தால் அவளின் நினைவு பல மடங்கு பெருகுகிறது.

“நல்லதொரு மனிதன் என்னால் தான் கெட்டழிந்து போனார். நான் பலமுறை அவமானப்படுத்தியும் அதை எண்ணாது என்னை எப்பாடு பட்டாவது அடைவேன் என்ற அவரின் உறுதியை நினைக்க அவளுக்கு வியப்பாக இருந்தது. காதலிக்கும் பெண்ணைவிட்டுவிட்டு இன்னொரு பெண்ணோடு உல்லாசமாகப்

பொழுதைப் போக்குபவர்கள் மத்தியில் தன்னை நினைத்து வாழும் குருபரனை நினைக்க அவளுக்கு மெய் சிலிர்த்தது.

“குருபரன் தான் எனது கணவன். யார் எதிர்த்தாலும் பரவாயில்லை. நான் நினைத்ததைச் செய்தே தீருவேன்” என்று நினைத்தவாறு தகப்பனிடஞ் சென்றாள் பிரியா.

“காலமை எங்கை அம்மா போனனீ. வாகீசன் உன்னைப் பற்றிக் கவலைப்பட்டான். அவன் விரும்பிய காயத்திரியை அவனுக்குச் செய்து கொடுத்திருக்கலாம். இப்ப அவன் பெருங்கஷ்ட்டப்படுகிறான். ஒரு பெண்ணுக்குப் புரிந்து கொள்ளக்கூடிய கணவனும், ஓர் ஆணுக்கு அவனை நேசிக்கிற பெண்ணும் தான் தேவை. காயத்திரி நல்ல பெண். வசதியானவள். எமது சாதி தான். ஆனால் தகப்பன், மாமிசம் உண்பவன். குடிப்பவன் என்பதால் அவளைச் செய்ய நான் விடவில்லை. இப்போ சாதிபார்த்து சமயம் பார்த்து ஒழுக்கம் பார்த்துச் செய்த பெண் அவனுக்கு அடங்கி நடக்க மறுக்கிறாள்.

அதனால் ஒரே பிரச்சனை. வாகீசன் அவளை விட்டு விட்டு ஊருக்கு வரப்போகிறாானாம். என்ன செய்வதென்று புரியவில்லை'' கண் கலங்கினார் பொன்னம்பலம்.

‘‘நீங்கள் தானே அப்பா நடப்பது நடக்கும். விதிப்படி நடப்பதை நாம் மகிழ்வுடன் ஏற்கவேண்டும் என்பீர்கள். வாகீசன் அண்ணைக்கு விருப்பமில்லாவிட்டால் வற்புறுத்தாதங்கோ'' என்றால் பிரியா.

‘‘எல்லாம் முடிந்த முடிவாகிவிட்டது. காயத்திரியின் காதல் விடயத்தை யாரோ கைகால் வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது பெரியபூகம்பமாய் வெடிச்சிட்டுது. நாம் அதற்கு என்ன செய்யமுடியும். எல்லாம் இறைவன் விட்டவழி'' என்றார் பொன்னம்பலம். அவரது நா தழுதழுத்தது.

‘‘கவலைப்படாதைங்கோ அப்பா. வேறை என்ன அண்ணை சொன்னவர்.

‘‘உனக்கொரு கல்யாணம்  செய்து வைக்கும்படி கொண்ணன் மார் ஐந்து பேரும்  தினமும் சொல்லிக்கொண்டிருக்கிறாங்கள். கொம்மாவுக்கு நீ கலியாணம் செய்யவில்லை என்பது தான் வருத்தம். நீ கலியாணம் செய்தால் மனிசி பிளைத்திடும்’’என்றார் பொன்னம்பலம்.

நீங்கள் கோபிக்காவிட்டால் நான் ஒன்று சொல்லுறன்.’’

‘‘நான் ஏனம்மா கோபிக்கப்போறேன். நான் கோபிப்பதால்  எதுவும் நடக்குமே. நான் எதுவும் சொல்லமாட்டேன் நீ சொல்லு’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘குருபரனை உங்களுக்குத் தெரியும் தானே…’’

‘‘ஓம் அவனுக்கென்ன . இரவுபகலாகக் குடித்துவிட்டு தெருவிலை விழுந்து கிடக்கிறான். தான் செய்யுற தொழிலைக் கூட மதிக்கிறானில்லை.  படிச்ச படிப்புக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். அது கூடத் தெரியாது

தலையாலை நடக்கிறான். அவனின் தகப்பன் இரத்தினசிங்கம் என்னுடன் வேலை செய்தவர். இப்ப பென்சன் நாற்பதினாயிரமாம். அவர் நேற்றும் வந்து கவலைப்பட்டு அழுது விட்டுச் சென்றவர். நீ ஏதோ சொல்லப்போவதாகச் சொன்னாய். அதைச் சொல்லு'' என்றார் பொன்னம்பலம்.

பொன்னம்பலம் அப்படிச் சொன்ன பின்பு தான் குருபரனைத் திருமணம் செய்யப்போறேன் என்று சொல்வது எப்படி என்று தயங்கினால் பிரியா.

''அவன் யாரோ ஒரு பெண்ணைக் காதலித்தவனாம். அவள் ஏமாற்றிப்போட்டாளாம். அதனால் தானாம் குடிக்கிறான். என்ன காதலோ, கத்தரிக்காயோ'' என அலுத்துக் கொண்டார் பொன்னம்பலம்.

''உதையார் சொன்னது உங்களுக்கு''

''இரத்தினசிங்கம் தான் சொன்னவன். அவன் யார் அந்தப்பெண் என்று கூடச் சொல்கிறானில்லையாம். குடித்துவிட்டு வந்து புலம்புகிறானாம். அதனால்

தனக்கும் மனிசிக்கும் பிறசர் கூடுகிறது'' என்று கவலைப்பட்டான்.... கேட்கப் பாவமாயிருக்கு'' என்றார் பொன்னம்பலம்.

''அப்பா........''

''சொல்லம்மா....''

விம்பினாள் பிரியா, ''இடிவிழுந்தாலும் அசையாத தவமா அழுவது...?'' என்னம்மா....? சொல்லு சொல்லு.... பயப்படாதை. உன்ரை விருப்பத்திற்கு மாறாக நான் நடக்கமாட்டன்.''

அப்படிப் பொன்னம்பலம் சொன்னபோதும் பிரியா சற்றுத் தயங்கினாள்; ''நான் காதலிக்கிறேன் என்று சொல்ல அவளுக்குப் பலத்தை விடக் கூச்சம் தான் அதிகமாக இருந்தது. அதைவிட ஊரில் உள்ள பெரியவர்கள் எவருக்கும் குருபரன் மீது நல்ல எண்ணமில்லை.

“நீ என்னத்தைச் சொல்லப்போகிறாய்” என்று அவர்கூறும் போது ரெலிபோன் அடித்தது; “அதை எடுத்துப்பாரம்மா….” என்றார் பொன்னம்பலம்.

“ரூபன் என்று விழுது. யாரப்பா?” என்று கேட்டாள் பிரியா.

“ரூபனா? அவன் ஒரு கலியாணப் புறோக்கர். கரவெட்டியிலை ஒரு மாப்பிளை இருக்கெண்டவன்… பின்நேரம் குறிப்போடை வாறதெண்டவன். தா என்னெண்டு கேட்பம்”.

பிரியா ரெலிபோனைக் கொடுத்து விட்டுத் தயங்கினாள்.

“என்ன ரூபன்…”

பொன்னம்பலத்தின் முகம் இறுகிக் கறுத்தது. சிறிது நேரம் பிரமை பிடித்தவர் போல இருந்தார். அவரின் நிலையில் இருந்து அவன் வரமாட்டான் என்று புரிந்தது.

“நான் எதிர்பார்த்தது தான். ரூபன் தான் அவன் ஒத்துக்கொள்ளுவன் என்று சொன்னவன். இப்ப தாய்க்கும் தமக்கைக்கும் விருப்பமில்லையென்று சொல்கிறான். இதெல்லாம் விதியில்லை சாபம். எம்மவரே எம்மவரைப் பரிகசித்து விற்கிறார்கள். இயக்கம் இருந்த காலத்தில் இயக்கச் சப்போட்டர் என்றாலே ராசாவுக்குச் கொடுக்கிற மதிப்பைக் கொடுத்தவங்கள். ஒவ்வொரு ஆமிக்காம்பையும் அடிக்கேக்கை மேள தாளத்துடன் கொண்டாட வைச்சாங்கள். ஆனையிறவு இராணுவமுகாம் தாக்கியபோது எத்தனை நாட்கள் போராளிகளுக்கு உணவும் பலகார வகைகளும், சிற்றூண்டிகளும் கொடுத்துக் கொண்டாடினவங்கள். இப்ப போராளிகள் வேண்டாதவர்களாகி விட்டார்கள். இது இன்றல்ல இரண்டாயிரம் வருடங்களாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தைச் சேரர் பாண்டிய சோழ அரசர்கள் ஆண்டபோது தமக்குள்ளேயே முரண்பட்டு அன்னிய அரசர்களுடன் கூட்டுச் சேர்த்து அழித்தனர். இதுக்கெல்லாம் முக்கிய காரணம் பதவி ஆசை

தலைமைதாங்க வேண்டுமென்ற எண்ணம் ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுத்துத்தான் தமிழர்கள் அழிந்தவர்கள். அது தான் இப்பவும் நடக்குது'' உணர்ச்சி வசப்பட்டு பேசிக்கொண்டிருந்தார் பொன்னம்பலம்.

தான் சொல்ல வந்ததைச் சொல்லமுடியவில்லையே என்று மனம் குழம்பினாள் பிரியா. அதை அவதானித்த பொன்னம்பலம்: ‘‘நீ சொல்ல நினைத்ததைச் சொல்'' என்றார்.

இனியும் தயங்கக்கூடாது என்று நினைத்த பிரியா, ‘‘எனக்கு இனிமேல் திருமணம் பேச வேண்டாம்'' என்றாள்.

‘‘பேசினாலும் சரிவராது என்று நினைக்கிறாயா…? இப்ப நான் முன்பு போல இல்லை. சிவபூசை செய்யாத குடும்பமென்றாலும் பரவாயில்லை. மாப்பிளை மாமிசம் உண்பவனாக இருந்தாலும் பரவாயில்லை. என்று தீர்மானித்து விட்டேன்.. அப்படியொருவன் வந்தால் நீ

ஏற்றுக்கொள்ளம்மா. உனது சகோதரர்கள் உனக்காக உயிரையும் கொடுப்பார்கள். ஆனால் அவர்களின் மனைவிமார் கட்டியவர்கள் உதவிகள் செய்யமாட்டார்கள். நீ நான் தவமிருந்து பெற்றபிள்ளை. நீ உனது சொந்தக் காலிலேயே நிற்கவேண்டும் என்று நினைக்கிறேன். அது சரி நீ சொல்ல வந்ததைச் சொல்லு''

''அப்பா''

''சொல்லம்மா?'' கெஞ்சினார் பொன்னம்பலம்.

''என்னை ஒருவர் விரும்புகிறார் அப்பா'' பிரியாவின் குரல் கரகரத்தது.

''என்ன..? உன்னை ஒருவன் விரும்புகிறானா....? யாரம்மா அந்த உத்தமன்..'' உற்சாகமாகக் கேட்டார் பொன்னம்பலம்.

''கு...ரு...பர...ன்அப்பா'' தட்டுத்தடுமாறியவாறு சொன்னாள்.

“குருபரனா….?” என்றவர் தனது நெஞ்சைப் பிடித்தார்.

அப்போது வாசலில் வாகனம் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ‘‘எமது வீட்டுக்கு யார் வரப்போகிறார்கள்’’

என்று நினைத்தவாறு வெளியே வந்தாள். முற்றத்தில் குருபரன் நின்றான். அதைக்கண்ட பிரியா அதிர்ச்சியால் உறைந்து போனாள்.

# 6

பொன்னம்பலத்தால் அதிர்ச்சியிலிருந்து விடுபட முடியவில்லை. குருபரன் சரியான குடிகாரன். குடித்து விட்டு வீதிகளில் விழுந்து கிடப்பவன். இரவில் குடித்து விட்டு வீதியில் விழுந்து கிடப்பான். தாய்க்காரி அவனைத் தேடிச்சென்று ஊரவர்களின் துணையுடன் தூக்கி வருவதாக ஊரவர்கள் கூறப் பொன்னம்பலம் கேட்டிருக்கிறார். ஒரு நாள் இரவு தாய்தேடிச் செல்லும்போது வீதியில் இருந்த

பள்ளத்தில் இடறி விழுந்து கால் முறிந்து பலநாட்களாக வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றவள். அவளை மகாலட்சுமி சென்று சுகம் விசாரித்தவள். அப்போது தாய் சொல்லிச் சொல்லி அழுவதை. மகாலட்சுமி வந்து பொன்னம்பலத்துக்குக் கூறியிருந்தாள். அவ் வார்த்தைகள் அப்போது பொன்னம்பலத்தின் காதில் ஒலித்தன. ‘‘எவ்வளவு கஸ்ட்டப்பட்டு தவமிருந்து இவனைப் பெற்றனான். நான் திருமணம் செய்து எட்டுவருடங்கள் கழித்தும் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் நான் செல்லாத கோவில்கள் இல்லை. வைக்காத நேர்த்திகள் இல்லை. நான் திருமணம் செய்து பத்து வருடங்களுக்குப் பின் தான் இவன் பிறந்தவன். அதனால் நானும் எனது கணவனும் அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுத்து வளர்த்து விட்டோம் அதனால் அவன் வைத்தது தான் சட்டம் எமக்கு வேறு பிள்ளைகளும் இல்லை. அதனால் கட்டுப்படுத்தப் போக விபரீதமான முடிவை எடுத்து விடுவானோ என பயந்தோம். அந்தப் பயத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி

எங்களை ஆட்டிப் படைக்கிறான். நாம் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யவில்லை. எம்மால் முடிந்தளவு தான தர்மங்களைச் செய்கிறோம். கோவில்களுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்கிறோம். பூசைகள் செய்கிறோம். முன்பு நாம் தினமும் சிவபூசை செய்வோம். இவன் குடித்துவிட்டு மாமிச வகைகளை உண்ணத் தொடங்கியபின் சிவபூசை செய்வது பாவம் என நினைத்துச் சிவபூசை செய்வதை விட்டுவிட்டோம். ஏன் தான் எமக்கு இந்தத் துன்பத்தைச் சிவன் தந்தாரோ தெரியவில்லை''

அங்கு அவர்களுக்கு உதவியாக இருக்கும் கலையரசி என்ற பெண் அங்கு வந்தாள். அவள் மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவள். கணவன் விவசாயி. இரண்டு ஆண்பிள்ளைகளும் இடம் பெயர்வின் போது இறந்து விட்டீர்கள். அவளது கணவன் நோய்வாய்ப்பட்டு மூன்று வருடங்களுக்கு முன் இறந்து விட்டான். அதனால் அவள்

அவர்களுடனேயே தங்கி விட்டாள். அது பொன்னம்பலத்திற்குப் பெரும் ஆறுதல்.

‘‘ஐயா, அந்தக் குடிகாரன் வந்து தவத்தோடை ஏதோ கதைக்கிறான். அவனை வீட்டுப் பக்கம் வரவிடக்கூடாது. பயங்கரமான குடிகாரன். சனி ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை இல்லாததால் பகலில் நன்றாகக்குடித்து விட்டுத் தெருக்களில் விழுந்து கிடப்பான். அந்த வீதியால் பெண்கள் செல்வதில்லை. அவன் ஏன் இங்கு வந்தானோ தெரியாது’’ என்றாள் கலையரசி.

பெருமூச்சு விட்டார் பொன்னம்பலம், ‘‘ஊர் அறிந்த குடிகாரன். அதைவிடக் கேவலமான நடத்தையுடையவன். அப்படியானவனை இவள் காதலிப்பதாகக் கூறுகிறாள். இதென்ன கொடுமை. சிவனே நீ தான் எமது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்’’ என்று எண்ணினார் பொன்னம்பலம்.

‘‘ஐயா, இவனை யாரும் வீடுகளில் அண்டுவதில்லை. தவத்திற்கு எல்லாம் தெரியும். இருந்தும் அவனோடு சிரித்துக்

கதைக்கிறா. அதைப் பொறுக்கேலாமைத்தான் நான் வந்தனான்.. கூப்பிடுங்கோ ஐயா'' என்றாள் கலையரசி.

பொன்னம்பலம் நிதானமாககக யோசித்தார். ''அவள் அவனைத் தான் காதலிக்கிறேன் என்று கூறியபின் எப்படி நாகரீகம் இல்லாமல் நடப்பது?''

''என்னையா யோசிக்கிறியள்? நான் போய் நீங்கள் வரச் சொன்னதாகச் சொல்லட்டா?''

அவசரப்பட்டாள் கலையரசீ. ''வேண்டாம் , வேண்டாம் அவன் உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளவன். ஏதோ காரியமாகத்தான் வந்திருப்பான். பேசி முடித்து விட்டு வரட்டும்'' என்றார் பொன்னம்பலம்.

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. கலையரசி மேசையில் இருந்த போனை எடுத்துப் பார்த்துவிட்டு, ''உங்களுடைய மூத்த மகன் அரவிந்தன் அழைக்கிறாரய்யா'' என்றவள் அழைப்பை ஏற்கும் பொத்தானை

அழுத்திவிட்டுப் பொன்னம்பலத்திடம் கொடுத்தாள். வழக்கமாக அவள் அப்படித்தான் செய்வாள்.

அப்போதய மன நிலையில் பொன்னம்பலத்திற்கு அவனுடன் பேசப்பிடிக்கவில்லை. அவன், ‘‘அப்பா,’’ என்று அழைத்த பின் ‘‘சொல் அரவிந்து’’ என்றார்.

‘‘அப்பா தவத்திற்கு இங்கு ஒரு மாப்பிளை பார்த்திருக்கிறேன். அவனுக்கு அவளைப் பற்றிய முழு விபரத்தையும் கூறியுள்ளேன். அவனுக்கு விருப்பம். ஊரிலை தாயும் தகப்பனும் இருக்கினையாம் அவையோடை கலந்தாலோசித்து விட்டுச் சொல்வதாகச் சொன்னான்’’

பொன்னம்பலத்திற்குச் சிரிப்பு வந்தது. போரைச்சாட்டி வெளிநாடுகளுக்குச் சென்ற பலர் கலியாண விஷயத்திற்கு மட்டும் தான் பெற்றோரை மதிக்கின்றனர். இப்படி எத்தனை பேர் சொல்லி விட்டார்கள். தனக்கு விருப்பமில்லாவிட்டால் தாய் தகப்பனைச் சாட்டுவது யாழ்ப்பாணத்தவரின் பழக்கம்.

‘‘என்னப்பா பேசாமல் இருக்கிறியள். அவன் நல்லவன் பெற்றோரின் சொல்லைத் தட்டாதவன். என்னுடைய உயிர் நண்பன். தெண்டித்துச் செய்யப்பார்க்கிறன். இங்கை வந்தாப் பிறகு எல்லோரும் இஞ்சத்தேற்கலாச்சாரத்திற்கு மாறி விடுவார்கள். அப்படி மாறாவிட்டால் இங்கு வாழ முடியாது. அவன் கொஞ்சம் தண்ணி பாவிப்பான். மாமிசமும் தின்பான். அதுதான் பிரச்சனை. மற்றும்படி வேறெதுவும் இல்லை…’’

‘‘தாய் தகப்பன் எந்த ஊர். சொன்னால் விசாரித்துப் பார்க்கலாம்’’ என்றார்.பொன்னம்பலம் ஒப்புக்கு.

‘‘அவர்கள் மானிப்பாயில் இருக்கினை. விலாசம் தெரியாது. பின்நேரம் கேட்டுவிட்டுச் சொல்கிறேன்’’. என்றான் அரவிந்தன்.

‘‘சரி’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘அம்மா எப்படி…..?’’

“என்னத்தைப் புதிதாகச் சொல்கிறது. இன்றைக்குப் பிரதோஷம். மனிசி விடியப்புறம் எழுந்து வீடுமுழுவதற்கும் சாணி கரைத்துத் தெளித்துவிட்டுச் சிவன் கோவிலுக்குச் சென்றுவிட்டாள். கலையரசி தோய்ந்து குளித்துவிட்டு ஆசாரமாய்ச் சமைத்து வைத்துள்ளாள். அம்மா சிவனுக்கும் கோவிலுக்கு வாற பக்தர்களுக்கும் தனது சோகக்கதைகளைக் கூறி அழுது விட்டு இரண்டு மணிக்குப் பிறகு வருவா” எற்றார் பொன்னம்பலம் வெறுப்புடன்.

“அப்பா, தயவு செய்து அம்மாவின் விடயத்தில் தலையிடாதங்கோ அவா தன்னுடைய விருப்பப்படி நடக்கட்டும். வீட்டில் இருந்தால் தவத்தைப் பற்றி நினைத்து நினைத்து அழுவா. அதிலும் பார்க்கச் சிவனோடு அழுவது நல்லது தானே. இன்றில்லா விட்டாலும் என்றோ ஒரு நாள் அவர் அம்மாவின் கோரிக்கையை நிறைவேற்றுவார்.”

‘‘நான் எப்ப கொம்மான்ரை விஷயத்திலை தலையிட்டனான். நீ கேட்டதற்காகச் சொன்னேன்’’.

‘‘சரி அப்பா. தவத்தின்ரை விஷயத்திலை அக்கறை இல்லாமல் இராதைங்கோ. டொனேசாக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். சிலநேரம் நீங்கள் டொனேசன் என்றவுடனை மறுப்பும் சொல்லுவியள்’’

அதைக்கேட்கப் பொன்னம்பலத்திற்கு வேடிக்கையாக இருந்தது. அவர் இருக்கும் நிலையில் எது கேட்டாலும் கொடுப்பார். அப்படித்தான் அவர் புறோக்கரிடம் கூறியுள்ளார்.

‘‘இப்ப நான் வேலைக்குப் போகவேணும். பிறகு எடுக்கிறன்’’ என்று அரவிந்தன் தொடர்பைத் துண்டித்தான்.

பிரியா எதுவும் பேசத் தோன்றாது. குருபரனைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அவளால் பேசமுடியவில்லை. குருபரன் மது

அருந்தியிருந்தான். அதன் கெட்டநெடி பிரியாவுக்கு வயிற்றைப்புரட்டியது. சத்தி வரும் போல இருந்தது.

“கஷ்ட்டமாக இருக்கா..? காலையில் ஒரு நண்பசைன் சந்தித்தேன். குடிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. அம்பிகா காலை ஒன்பது மணியில் இருந்து பல தடவைகள் போன் பண்ணியிருக்கிறாள். போன் ஜீப்பில் இருந்தமையால் எனக்கு மணி அடிக்கும் சத்தம் கேட்கவில்லை. பிறகு வந்து பார்த்த போது பதினைந்து முறை அவள் எடுத்திருந்தது தெரிந்தது. ஏதோ அவசரமாக்கும் என நினைத்து நான் எடுத்தேன். அப்போது தான் அம்பிகா நீ வந்து சொன்னவிடயத்தைச் சொன்னாள். என்னால் நம்பமுடியவில்லை. அதனால் தான் எதையும் யோசிக்காமல் வந்து விட்டேன். புனிதமான உங்களின் வீட்டுக்கு அசுத்தமாக வரக்கூடாது என்ற எண்ணம் இப்போது தான் வந்தது. என்னை அதற்காக மன்னித்துக்கொள். உண்மையாக என்னை விரும்புகிறாயா..? சொல்லு சொல்லு” அவசரப் படுத்தினான் குருபரன்.

பிரியா எதுவும் பேசமுடியாது தவித்தாள். உதடுகள் பிரிய மறுத்தன.

“சொல்லு தவம். விரை வாய்ச் சொல்லு. நான் அறிய வேண்டும். பதினைந்து வருடங்களாக உனது சம்மதத்தை எதிர்பார்த்துக் களைத்து விட்டேன். சொல்லு அம்பிகா சொன்னது உண்மையா…?

பரபரத்தான் குருபரன்.

“உண்மை தான். ஆனால்……” நிறுத்தினாள் பிரியா.

“ஆனால் என்ன நீ எதைச்சொன்னாலும் நான் கேட்பேன்”

“அப்படியென்றால் குடிப்பதை நிறுத்த வேண்டும். மாமிசம் உண்ணக்கூடாது. முகத்தைச் சவரம் செய்யுங்கள். பார்க்கக அசிங்கமாக இருக்கு….” என்றாள் பிரியா.

‘‘தவம்….. தவம்…. இதை முன்பே சொல்லியிருந்தால் எனது வாழ்க்கை என்றோ மலர்ந்திருக்கும். இனிமேல் நான் குடிக்கமாட்டேன். மாமிசம் உண்ணமாட்டன். இப்பவே சலூனுக்குச் சென்று சவரஞ் செய்கிறேன். இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லு’’

‘‘இம் மூன்றையும் செய்தால் போதும். உள்ளே வரச்சொல்லி நான் கேட்கமாட்டன்.. உங்களில் நம்பிக்கை வந்த பின்புதான் வீட்டின் உள்ளே அழைத்துச்செல்வேன்’’ என்றாள் பிரியா.

‘‘நீ கேட்டாலும் நான் வரமாட்டேன். ஏனென்றால் நான் குடித்திருக்கிறேன்.. உங்களது வீடு கோவில். உனது அப்பாவும் அம்மாவும் சிவனும் பார்வதியுமாக இருக்கிறார்கள். அவர்களைச் சந்திக்கப் புனிதமாக வரவேண்டும்’’ என்றவன் சிறிதுநேரம் தாமதித்து விட்டுச் சொன்னான்,’’ நீ சொன்னது உண்மைதானே. பகிடி இல்லையே’’

“திருமண விடயத்தையாராவது பகிடியாகச் சொல்வார்களா? உண்மை. உண்மை. நான் வணங்கும் சிவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்”

“சிவனே, இன்று தான் கண்திறந்தாய். உனக்கும் கோடி நமஸ்காரம்”. என்றவன் பெருமூச்சுவிட்டு விட்டுச் சொன்னான், “என்னை நீ ஏற்றுவிட்டாய். உனது பெற்றோரும் சகோதரர்களும் ஏற்பார்களா.?”

“தெரியாது. அப்பா ஏற்பாரென நினைக்கிறேன். அப்பா ஏற்றுக்கொண்டால் அண்ணன் மாரும் ஏற்பார்கள். ஆனால் உங்களது நடத்தையைப்பொறுத்துத் தான் எல்லாம் நடக்கும். இப்போ குடிக்கமாட்டன் என்று கூறிவிட்டுப் பின்குடித்தால்....” பிரியா வார்த்தைகளை முடிக்குமுன் குருபரன் அவசரமாகக் குறுக்கிட்டுச் சொன்னான், “நான் சொன்ன சொல் தவறமாட்டேன். இது உறுதி. நீ நம்பத்தான் வேண்டும். நம்பாவிட்டால் எப்படி என்னால் நிரூபிக்கமுடியும்.”

பிரியாவால் உடனே பதில் கூறமுடியவில்லை. மௌனமாக நின்றாள். பின் சொன்னாள், “நம்பிக்கையின் அடிப்படையில் தான் உலகம் சுற்றுகிறது. நம்பாது விட்டால் எக்காரியமும் நடைபெறாது. நான் உங்களை நம்புகிறேன். எனது நம்பிக்கையைக் கெடுத்துவிடாதீர்கள்” என்றாள். அவளது கன்னங்களால் கண்ணீர் வடிந்தது.

அதைக்கண்டு துடித்துப்போனான் குருபரன், “அழாதை தவம். உன்னை நான் ஏமாற்றமாட்டேன்”. என்றான் அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை.

# 7

குருபரன் சென்றுவிட்டான். அவன் வந்த அதிர்ச்சி இன்னும் பிரியாவை விட்டு நீங்கவில்லை.. எல்லாம் ஒருகணத்தில் நடந்து முடிந்து விட்டது. மெதுவாக நடந்து வந்து அம்பிகாவுடன் ரெலிபோனில் தொடர்புகொண்டாள்.

‘‘சொல்லக்கா….., குருபரன் வந்திருப்பாரே’’ என்று கேட்டாள் அம்பிகா.

பிரியா உடனே பதில் கூறவில்லை, ‘‘நான் நீங்கள் வந்த விடயத்தைக் கூறியபோது அவர் நம்பவில்லை.. உங்களின் வாயால் கேட்டால் தான் நம்புவேன்’’. என்று கூறிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தார். அவருக்குச்சொல்லிப் பத்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் வந்து போய்விட்டாரா….? நீங்கள் சொன்னதைச் சொன்னபின் எனக்குப் பயம் வந்து விட்டது. உங்களது அப்பா மிகவும் கண்டிப்பானவர். எனது அப்பாவுக்குச் சொன்னால் அப்பா என்னைக் கண்டபடி ஏசுவார்.. அப்பாவுக்குக் குருபரனைப் பிடிக்காது. குருபரன் என்னுடன் சில சமயங்களில் கதைப்பார். அதைக்கேள்விப்பட்டால் அப்பா ஏசுவார் ‘‘குடிகாரனோடை பேச என்ன இருக்கிறது. அவன் கண்மண் தெரியாமல் குடிப்பவன். குடித்து விட்டு ஏடாகூடமாக நடந்தால் என்ன செய்வது? அதைவிட ஊர்ச்சனம் பரிகசிக்கும்’’ என்று

கூறுபவர். உங்களது அப்பாவுக்கு நான் கூறித்தான் குருபரன் வந்தவர் என்று கூறிவிடாதே. பிறகு நான் வீட்டிற்குப்போன பாடில்லை'' என்றாள் அம்பிகா. அவளது குரலில் பயமும் கலவரமும் இருந்தது.

‘‘உன்னை நான் காட்டிக்கொடுக்க மாட்டன். நீ பயப்படாமல் இரு. அப்பா கூப்பிடுகிறார். நான் பிறகு நேசறிக்கு வாறன்'' என்று கூறிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தாள் பிரியா.

பொன்னம்பலம் சக்கரநாற்காலியில் அமர்ந்திருந்தார். பிரியாவந்து வெகுநேரமாகியும் அவர் அவளுடன் பேசவில்லை. அது அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. எனினும் அவளால் பேசமுடியவில்லை.

‘‘ஏனம்மா குருபரன் வந்தவன்.. அவனைப்பற்றி ஊரில் உள்ள ஒருவருக்குக் கூட நல்ல அபிப்பிராயம் இல்லை. அப்படியிருக்க அவன் எமது வீட்டுக்கு வந்ததைப் பலர் கண்டிருப்பினை. ஏற்கனவே நீ பல பிரச்சினைகளுக்குட்பட்டுள்ளாய்.

இது தேவை தானா? நீ கூறாமல் அவன் வந்திருக்கமாட்டான்'' என்றார் பொன்னம்பலம்.

பிரியா மனதைத்திடப்படுத்திக் கொண்டாள். எப்படியும் சொல்லித்தானே ஆக வேண்டும் என நினைத்தாள்; ''அப்பா குருபரன் மிகவும் நல்லவர். சைவப்பாரம்பரியங்களைப் பேணுபவர். அவர் குடிகாரரானது ஒரு பெண்ணால் என்று கேள்விப்பட்டிருப்பியள்.'' நிறுத்தினாள் பிரியா.

பொன்னம்பலத்திற்கு அது தெரியும். அவன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது ஒரு சிங்களப் பெண்ணை விரும்பியதாகவும் அப்பெண்ணின் பெற்றோர்கள் குருபரன் தமிழன் என்பதால் செய்து கொடுக்க மறுத்தால் தான் குருபரன் மனமுடைந்து குடிக்கிறான். என்று ஊரவர்கள் பேசுவதைப் பொன்னம்பலம் அறிந்துள்ளார். ''ஒரு பெண்ணுக்காக இப்படி மாற வேண்டுமா? ஊரில் பெண்களா இல்லை'' என்று நினைப்பார்.

“அப்பா அவர் விரும்பிய பெண் யார் தெரியுமா…?”

கேட்டு விட்டுத் தந்தையைப் பார்த்தாள். பின்பு “அது உங்களுக்கல்ல உலகுக்கே தெரியாது. அதை சொன்னால் அப் பெண்ணுக்கும் பெண்ணின் குடும்பத்திற்கும் பாதிப்பு ஏற்படும்என்பதற்காக அவர் தனது நண்பர்களுக்கோ அல்லது தன்பெற்றோருக்கோ கூறவில்லை. அதற்குப்பதிலாகத் தான் ஒரு சிங்களப் பெண்ணைக் காதலித்ததாகவும் அவளது பெற்றோர் விரும்பதாதால் அவள் தற்கொலை செய்து கொண்டாள் என்றும் அதற்காகத் தான் காலம் பூராகவும் தான் அவளின் நினைவாகப் பிரமச்சாரியாக வாழப்போவதாகவும் கூறினார்.. அதைத் தான் ஊர்ச்சனம் கதைத்து வருகிறது.ஆனால் அவர் விரும்பியது என்னை”

“உன்னையா?” அதிர்ந்துபோனார் பொன்னம்பலம்.

“ஓமப்பா. அவர் என்னை உயிருக்குரியாக நேசித்தார். அதை என்னிடம் பலமுறை சொன்னார்.

ஆனால் நான் விரும்பவில்லை. எனது மாமியார் அதாவது உங்களது தங்கைக்குக் கல்யாணத் தரகர்கள் பேசிவந்த மாப்பிளையை நீங்கள் விரும்பிச் செய்துகொடுத்து விட்டுப்பின் அவர் மாமிசம் உண்கிறார் என அறிந்து அவர்களின் தொடர்பைத் துண்டித்தீர்கள். அதனால் மாமி மனம் உடைந்து போனா, அவா செய்த தவறு என்ன? அப்படித் தவறு செய்யாத உங்களது தங்கையையே கொடுமையாகத் தண்டித்த நீங்கள் மாமிசம் உண்ணும் குருபரனின் குடும்பத்தை ஏற்பீர்களா…? அவர்மிக மிக நல்லவர். பண்பானவர். என்னை உயிருக்குயிராக நேசித்தவர். அவரை நான் கொடுமையாகத் தண்டித்து விட்டேன். அவரை நான் வெறுத்தாலும் உள்மனம் அவரை நினைத்து ஏங்கத்தான் செய்தது. ஆனால் நீங்கள் அதனால் பாதிக்கப்பட்டு விடுவீர்கள் என்பதற்காகத் தான் அவரை வெறுத்தேன். அதனால் அவரைச் செருப்பால் கூட அடிக்க முயன்றேன்’’ அதற்கு மேல் பேச முடியாது விம்மிவிம்மி அழுதாள் பிரியா.

“தவம் நீ என்னம்மா செய்கிறாய்.? எனக்காகத் தான் குருபரனை வெறுத்தாயா..? அதற்காகத்தான் இயக்கத்திற்குச் சென்றாயா? ஐயோ, எனது நெஞ்சு வெடித்து விடும் போலுள்ளது” அழுதார் பொன்னம்பலம்.

“அப்பா அவர்படுகின்ற துன்பத்தை என்னால் சகிக்க முடியவில்லை. அதனால் தான் நான் அவருக்குப்போன் பண்ணிச்சொன்னேன். சொன்னவுடன் வந்து விட்டார். வந்து என்ன சொன்னார் தெரியுமா?” என்று கூறி விட்டு விம்மி அழுதாள் பிரியா.

பொன்னம்பலம் எதுவும் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை. விக்கி விசும்பி அழுத பிரியா சொன்னாள், “அவர் இங்கு வந்து என்ன சொன்னார் தெரியுமா…?” அவளால் பேசமுடியவில்லை.

பொன்னம்பலம் நிமிர்ந்து அவளைப் பார்த்தார். அவள் குலுங்கிக் குலுங்கிஅழுது கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கப்பரிதாபமாக இருந்தது. தனது

குடும்பநன்மைக்காகத் தனது காதலைத்துறந்த அவள் இமயமாக உயர்ந்து நின்றாள்.

“அழதையம்மா, இனி நீ அழக்கூடாது. நீ குருபரனைத் திருமணம் செய். எனக்குப் பூரணசம்மதம். அவன் குடிகாரனாகவே இருக்கட்டும். மாமிசம் உண்ணட்டும். அவனது தியாகத்தின் முன் இது தூசு போன்றது” என்றார் பொன்னம்பலம்.

“அவர் ஒழுக்கமானவர் அப்பா. தான் குடித்திருக்கிறாராம். மாமிசம் உண்பவராம். எமது வீடு கோவிலாம். அங்கு குடியிருக்கிற சிவன் நீங்களாம் சக்தி அம்மாவாம். அப்படியான புனிதமான வீட்டுள் கேவலமான தான் நுழையக் கூடாதாம். வீட்டுக்குச் சென்று தோய்ந்து விட்டுச்சிவன் கோவிலுக்குச் சென்று குருக்களைக்கொண்டு பிராயச்சித்த அபிசேகம் செய்து விட்டு ஆசாரசீலராகத்தானாம் இந்த வீட்டுக்கு வருவார். அதோடு இனிக் குடிக்க மாட்டேன் என்றும் மாமிசம் உண்ண மாட்டேன் என்றும் சத்தியம் செய்து தந்துள்ளார். அவர்

அச்சத்தியத்தை ஒரு போதும் மீறமாட்டாள்’’ உணர்ச்சி வசப்பட்டாள் பிரியா.

“எனக்குப் பூரண சம்மதம் என்று சொல்லம்மா. மாப்பிளையை உடனே வரச்சொல்லு அந்த உத்தமமான வைராக்கியம் மிக்க மனிசனை நான் நேரில் பார்த்துப் பாராட்ட வேண்டும்’’ என்றார் பொன்னம்பலம்.

பிரியா பூரித்துப் போனாள். பொன்னம்பலம் இவ்வாறு மாறுவார் என்று அவள் கனவு கூடக் காணவில்லை. குருபரனின் போக்கைப் பற்றி தினமும் கவலைப் பட்டுக்கொண்டேயிருந்தாள். ஆனால் ஒரு முடிவை அவளால் எடுக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்து ஆண்கள் இயக்கமிருக்கும் போது இயக்க உறுப்பினர்களைக் கடவுளாகப் போற்றி வணங்கினர். வயது குறைந்த போராளிகளை கிழவர்கள் கூட “அண்ணா அக்கா என்றும் ஐயா’’ என்றும் மிக மிக மரியாதையாக அழைத்தனர். அப்படி அழைக்கும் போது பிரியாவுக்குச் சங்கடமாக இருக்கும் ஆனால்

இப்போ நாயாகக் கூட மதிப்பதில்லை. சுடு சொற்பேசி உள்ளத்தை ரணமாக்குகிறார்கள்.

அவளது இனத்தவர் பரராசசிங்கம்.அவருக்கு அறுபது வயது இருக்கும். அவளை, "அக்கா" என்று அழைப்பார். அவரிடம் ஏராளமாக சொத்து இருந்தது. அதை காப்பாற்றுவதற்காக இயக்கத்திற்கு முழு நேர ஊழியராக இருந்து வேலை செய்தார். பிரியா இல்லாவிட்டாலும் அவளது வீட்டிற்கு அடிக்கடி செல்வார்.

யுத்தம் முடிந்து புனர் வாழ்வு பெற்று அவள் வந்த பின் அவர் வீட்டுப் பக்கமே வருவதில்லை. முன்பு வந்த பழக்கத்தில் அப்பா அவரின் மகனுக்கு அவளைத் திருமணம் பேசிக் கல்யாணத் தரகரை அனுப்பினார். அவர் விருப்மில்லை என்று கூறியிருக்கலாம். அப்படிக் கூறாது. "இயக்கம் என்ற திமிரில் எத்தனை ஆட்டம் போட்டவள். என்னை மதிக்காமல் எனது சொத்தைக் காட்டிக் கொடுத்தவள். அவளை என்ரை மகனுக்குச் சொல்ல முடியுமே? பிறகு இயக்கப் பழக்கம் தான் குடும்பத்திற்கும் வரும்"

என்ற தோடு மிக மிகக் கேவலமாக ஊரில் கதைத்தவர் இப்போதும் கதைத்துத் திரிகிறார்.

அவளைப் போன்ற இயக்க ஆதரவாளர்கள்.இயக்கத்தை கண்டபடி விமர்சிக்கிரார்கள். அதனால் தான் பிரியா எது நடந்தாலும் பரவாயில்லை என்று குருபரனிடம் சென்றாள்.

‘‘எல்லாம் விதியம்மா .நீ முன்பே குருபரனை விரும்பியிருந்தால் நான் சம்மதித்திருக்கமாட்டன். அதனால் நீ குருபரனுடன் சென்றிருப்பாய், இல்லாவிட்டால் தற்கொலை செய்யக்கூடத் தயங்கமாட்டாய். ஒரு நல்லவனை அளவுக்கதிகமாகச் சோதித்து விட்டாய். இனி நீ மகிழ்வுடன் வாழ்வாய்’’ என்றார் பொன்னம்பலம்.

பிரியாவுக்கு உலகம் முழுவதையும் கைப்பற்றி விட்ட மகிழ்ச்சி,

‘‘நான் அவருக்குச் சொல்லிவிட்டு வாறன் அப்பா’’

‘‘சரியம்மா. போனை எடுத்து அரவிந்துக்கு கோல் எடுத்துத்தா’’ என்றார் பொன்னம்பலம். பிரியா எடுத்துக் கொடுத்தாள்.

‘‘இப்பத்தானே அப்பா கதைத்தனான். நான் வேலைக்குப்போகவேண்டும். ஏதாவது சுகமில்லையா?’’.

‘‘இல்லை தவத்திற்கு திருமணம் நிட்சயமாகிட்டுது. மூத்தவன் நீ அது தான் உனக்கு முதலில் சொன்னேன். மற்ற நான்கு தம்பி மாருக்கும் சொல்லு’’.

‘‘யாரப்பா மாப்பிளை. ஆயிரம் சம்பந்தம் பேசியும் யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. இப்ப எப்படித் திடீரென்று’’ அரவிந்தன் பரபரத்தான்.

‘‘எல்லாம் விதி. தவத்தை அவன் படிக்கும் போதே விரும்பியவனாம். தவத்திற்கு விருப்பமில்லை. அவன் மாமிசம் சாப்பிர்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். அதனால் தவம் விரும்பவில்லை. நான் விரும்பமாட்டன் என்று தான்

அவள் விரும்பவில்லை.....'' பொன்னம்பலம் பேசிக்கொண்டிருக்கும் போது அரவிந்தன் குறுக்கிட்டான். யார் மாப்பிளை? எந்த ஊர்? என்னவேலை செய்கிறார்?''

''எங்கடை ஊர்தான். மாப்பிளை எஞ்ஜினியர்....?

''பெயர் என்னப்பா....?''

''குருபரன். சரவணபவனின் மகன்''

''யார் அந்தக் குடிகாரனோ? இரவு பகலாய்க் குடித்துவிட்டுத் வீதிகளில் படுத்துருளும் குருபரனோ..? அவனைச் செய்ய எப்படி முடிவெடுத்தீர்கள். யாரைக்கேட்டு முடிவெடுத்தீர்கள்'' கோபத்தோடு கத்தினான் அரவிந்தன்.

''இது அவள் எடுத்த முடிவு. எனக்குச் சொன்னாள். நிலமையை ஆராய்ந்து பார்த்தன்.

அவள் நன்றாக ஆராய்ந்து தான் முடிவெடுத்திருக்கிறாள்’’.

‘‘அவள் முடிவெடுப்பதனால் நாம் ஏன் இருக்கிறோம்’’.

‘‘எல்லாம் முடிந்த காரியம் . இனியோசிக்க எதுவும் இல்லை. இந்த மாதம் மூன்று முகூர்த்த தினங்கள் இருக்கு. பொருத்தமான ஒரு திகதியில் திருமணத்தை முடிக்க யோசிக்கிறேன்’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘எனக்கு விருப்பமில்லை. மற்றத்தம்பிமாரும் விரும்பமாட்டாங்கள். உங்கடை முடிவை மாற்றுங்கோ. இல்லாவிட்டால் எம்மை மறக்க வேண்டிவரும்’’ அரவிந்தன் ஆவேசமாகப் பேசினான்.

# 8

“அரவிந்தா, எல்லாம் கண் இமைக்கும் நேரத்துள் முடிந்துவிட்டது. குருபரன் வீட்டுக்கு வந்து தவத்துடன் கதைத்து விட்டுச் சென்று விட்டான். அவன் இனிக்குடிக்கமாட்டன் என்று சத்தியம் செய்துள்ளான்’’. பொன்னம்பலம் பேசிக்கொண்டிருக்கும் போது அரவிந்தன் குறுக்கிட்டான்,

“அவன் பெருங்குடிகாரன். குடி காரனின் பேச்சு விடிந்தால்போச்சு என்பார்கள். இராப்பகலாகக் குடித்த ஒருவன் திடீரென்று குடிக்க மாட்டன் என்று சத்தியம் செய்தால் எப்படி அப்பா நம்புவது’’. அரவிந்தனின் குரல் தளதளர்த்தது.

“அவன் இனிக்குடிக்கமாட்டான் என்று தவம் நம்புறாள். அவள் நம்பினால் சரிதானே’’.

“அவள் சின்னப்பிள்ளை அப்பா. நல்லது கெட்டது தெரியாவதவள். அவளது பேச்சைநம்பி கற்றவர் நல்லவர், நேர்மையானவர் என்று நம்பும் ஊரவர் போற்றும் நீங்களா இப்படியான ஒரு முடிவை எடுத்தது. யோசித்துப் பாருங்ககோ

அப்பா. ஊரார் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்?''

''ஊராரைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்.? இதைப்பற்றிக் கவலைப்படும் அவர்கள் தவத்திற்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கலாம் தானே. ஊருக்காகப் போராடினவள் அவள். போராடும் போது போற்றித்துதித்து விட்டு இப்போ கேலி செய்கிறார்கள். என்னிடம் கோடிக்கணக்கான சொத்திருக்கு, வீடு இருக்கு, காணி பூமிஇருக்கு, அப்படியிருந்தும் இயக்கத்திற்குச் சென்ற ஒரு காரணத்திற்காக எவரும் அவளைத் திருமணம் செய்ய முன்வராவிட்டால் அவளது எதிர்காலம் என்னாவது'' பொன்னம்பலம் கோபப்பட்டார்.

''உங்களது கோபம் நியாயமானது அப்பா. ஆனால் அவள் பாரிய காயத்திற்குட்பட்டவள்''

''ஓம் அது எனக்குத் தெரியும். அதாலை குடும்ப உறவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை.

குழந்தை பிறக்கும் என்று டொக்ரர் மார் சொல்லீனை. பிறகென்ன..?’’

‘‘டொக்ரர் சொல்லுறத்தைத் திருமணம் செய்பவன் நம்பவேண்டுமே’’

‘‘டொக்ரர் கடவுளுக்குச் சமனானவர். அவர் சொல்வதை நம்பித்தான் ஆகவேண்டும். உன்னுடைய மாமா தனது மகள் இயக்கத்திற்குச் சென்ற பின் ஓடித்திரிந்து அவளை மீட்டவர். அவளின் இருதயம் பலவீனமானது. அவளால் போராடமுடியாது என்பதைத் தெரிந்து கொண்ட இயக்கம் அவளை விடுதலை செய்தது. அதை அறிந்த பின்பும் காசுக்காக அவளை ஒருவன் திருமணம் செயதவன் தானே. அவள் கருவுற்றபோது டொக்ரர் என்ன சொன்னவர். இனிமேல் அவள் கர்ப்பமுற்றால் உயிருக்கு ஆபத்தென்றவர். கட்டினவன் கேட்டுப் பொறுமையாக வாழ்கிறான் தானே. அது போல் நாட்டுப்பற்றுள்ள ஒருவன் அர்ப்பணிப்புடன் வாழலாம் தானே. உனது

மனைவியின் சகோதரன் ஒருவன் இயக்க ஆதரவாளனாக இருந்தவன். அவன் கூட செய்யமறுத்திட்டான். அப்படியான ஊரிலை தான் நாம் வாழுறம்…'' கோபப்பட்டார் பொன்னம்பலம்.

''அதுக்காகக் கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் விழலாமா?''

''தம்பி இது முடிந்த காரியம் . நான் நான்றாக யோசித்துத் தான் இந்த முடிவை எடுத்தேன். குருபரன் திருந்துவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. தயவு செய்து இனி உதைப் பற்றிக் கதையாதை. நான் சொன்னதெல்லாவற்றையும் உன்னுடைய தம்பி மாருக்குச் சொல்'' என்றார் பொன்னம்பலம்.

''இப்ப இந்த முடிவை எடுத்த நீங்கள் முன்பே எடுத்திருந்தால் மாமியோடு கோபித்திருக்கமாட்டீர்களே''

சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் தான் மனிதனை வாழவைக்கிறது. அந்த நேர நிலைபரம் அப்படி. இந்த நேர நிலபரம் இப்படி''.

''அப்ப மாமியை இனியாவது சேர்ப்பீர்களா…?''

''கட்டாயம் சேர்ப்பன். தவத்தின் திருமண வீட்டுக்குக் கட்டாயம் சொல்லுவன்'' உறுதியாகச் சொன்னார் பொன்னம்பலம்.

''இந்த முடிவை முன்பே எடுத்திருந்தால் நான் விரும்பிய மாமியின் மகளைச் செய்திருப்பேன். அப்போது அவளை நான் கலியாணம் செய்தால் தீக்குளிப்பேன் என்றீர்கள். அதற்குப் பயந்து எனது காதலைத்துறந்தேன் இப்ப….'' அழுதான் அரவிந்தன்.

''எனது முரட்டுச் சுபாவத்தாலை உங்களுக்கெல்லாம் பெரும்பாதிப்புகள் ஏற்பட்டது. ஏற்கனவே பாதிக்கப்பட்டு துன்பத்துடன் வாழுற தவமாவது இனி

மகிழ்ச்சியாக வாழட்டும்'' பெருமூச்சு விட்டார் பொன்னம்பலம்.

''முன்பும் உங்களின்பிடிவாதம் தான் எமது வாழ்க்கையைக் கெடுத்தது. இப்பவும் உங்கள் பிடிவாதம் தான் தவத்தின் வாழ்க்கையைக் கெடுக்கப்போகுது. யோசியுங்கோ அப்பா'' அழுதான் அரவிந்தன்.

சிறிது நேரம் பொன்னம்பலம் பேசவில்லை. பின், ''நான் யோசிச்சுச் சொல்லுறன்'' என்று கூறிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தார் பொன்னம்பலம்.

''அப்பா... உங்கள் முடிவை மாற்றப்போகிறீர்களா...? விம்மினாள் பிரியா.

''இல்லை அம்மா அவன் திரும்பத்திரும்ப தனது விருப்பத்தை வற்புறுத்துகிறானே தவிர எனது பேச்சைக் கேட்கிறானில்லை. அதனால் அவனின் நிலைபாட்டின் படி பேசினேன். எனது

முடிவு மாறாது. நீ கவலைப்படாதே’’ என்றார் பொன்னம்பலம்.

பிரியாவுக்கு அவரது வார்த்தைகள் ஆறுதலைக் கொடுத்தபோதும் அண்ணன்மார் ஐவரும் விரும்பமாட்டார்கள்.... அரவிந்தன் முரடன். முரட்டுக்கதை தான் கதைப்பான். சில சமயம் தகப்பன் என்றும் பாராது கதைப்பான். அவனை நினைத்துப் பயந்தாள் பிரியா.

‘‘எதுக்கும் கவலைப்படாதையம்மா. சிவன்கோவில் குருக்களை வரச் சொல்லியிருக்கிறேன். அவர் மாலைப்பூசை முடியவருவார். வரும்போது திருமணநாளைக் குறித்துக் கொண்டு வரச்சொல்லியிருக்கிறேன். குருபரனின் சாதகத்தைக் கொண்டு சென்று குருக்களிடம் கொடுக்கச் சொல்லிச் சரவணபவனிடம் சொல்லியிருக்கிறேன். இந்தமாத முகூர்த்தத்திலை கலியாணத்தை முடித்து விடவேண்டும்.’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘அப்ப அண்ணன்மாரால் பிரச்சினை வராதா அப்பா’’

‘‘அவங்களைப் பற்றி உனக்குத் தெரியதம்மா. அவங்களெல்லாம் தாங்கள் உண்டு தங்கடை குடும்பமுண்டு என்று இருப்பவர்கள். சும்மாய் தாம் அக்கறைப்படுவது போலப் பாசாங்காகக் கதைப்பார்களே, தவிர உண்மையைக் கதைக்காங்கள். கதைக்க மனிசிமார் விடாயினை. அம்மா எவ்வளவு நாளாக சுகமில்லாம இருக்கிறா. அவர்களைப் பார்க்க ஆசைப்படுகிறா ஒரு முறை வந்திட்டுப் போகலாம் தானே. இப்ப சனம் முழுதும் வந்து போகுது. இவை தான் தொழில் பிள்ளைகளின் படிப்பு என்று சொல்லிக் கொண்டிருக்கினை’’.

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. பிரியா அதை எடுத்துப் பார்த்து விட்டு, ‘‘ஆரூரன் அண்ணா,’’ என்றாள்.

ஆரூரன் பொன்னம்பலத்தின் இரண்டாவது மகன், ‘‘ம் இனி அவர் பிரசங்கம்

செய்யப்போகிறார். இவையின்ரைப் பேச்சைக்கேட்க என்னால் முடியாது,'' அப்பா பாத்ரூமில் இருக்கிறார் என்று சொல்லு'' என்றார் பொன்னம்பலம்.

''அண்ணா அப்பா பாத்ரூமிலை இருக்கிறார். அம்மா இன்னும் கோவிலால் வரவில்லை'' என்றாள் பிரியா.

''என்ன நடக்குது உங்கை. நாங்கள் எல்லோரும் வெளிநாட்டிலை இருக்கிறம். என்ர துணிவிலை தானே உன்ரை எண்ணப்படி அப்பா ஆடுறார். அவன் பெருங்குடிகாரன். அவனைப்போய்க் காதலிக்கிறியாமே... ஊரிலை எத்தனை பெண்கள் இருக்கிறார்கள். ஒருத்தரும் திரும்பிக்கூடப்பார்க்காதவன் எப்படி நீ காதலிக்கிறாய். குடிகாரன் மட்டுமில்லை மாமிசமும் உண்பவன். இதுக்கு அரவிந்தன் அண்ணை ஒத்துக்கொள்ள மாட்டார் என்றவர். நானும் ஒத்துக்கொள்ளமாட்டன். என்ரை தம்பிமாரும் ஒத்துக்கொள்ளமாட்டாங்கள்.

உன்னைப் படுகுழியில் தள்ள நாங்கள் தயாரில்லை''.

பிரியா பதில் எதுவும் சொல்லவில்லை. அதனால் ஆத்திரத்துடன் கத்தினான் ஆரூரன், ''கதை .... ஏன் கதைக்கப் பயப்படுகிறாய். கதை..... கதையடி..'' அப்போதும் பிரியா கதைக்கவில்லை, ''என்னை என்ன பேயன் மடையன் என்று நினைக்கிறியே. ஊருக்கு வந்தனென்றால் கொலைவிழும்'' அப்போதும் அவள் கதைக்கவில்லை.

''நீயும் கொழுத்துப்போனாய். அப்பா வந்தபின் எடுக்கிறேன். அவர் தந்த இடத்தாலை தான் நீ இப்படி தலைகால் புரியாமல் நடக்கிறாய். நான் அவரோடு கதைக்கிறன்'' என்று சொல்லிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தான் ஆரூருன்.

ஸ்பீக்கரில் விட்டமையால் ஆரூரன் கூறியவற்றையெல்லாம் பொன்னம்பலம் கேட்டுக்கொண்டிருந்தார், ''இனி எல்லாரும்

எடுப்பினை. நான் அரவிந்தனுக்குக் கூடச் சொல்லியிருக்கமாட்டன். உன்னோடை கூடப் பிறந்திட்டாங்கள் என்பதற்காகவே சொன்னேன். இவர்களால் எந்தப்பயனும் இல்லை. ஐந்து ஆம்பிளைப்பிள்ளைகள் என்று சொல்லலாமே தவிர வேறென்ன பிரியோசனம். பிள்ளைகளைப் பெற்று கஷ்ட்டப்பட்டு வளர்ப்பதும் கற்பிப்பதும் எதுக்காக…?'' என்றவர் சிறிது நேரங்கழித்துச் சொன்னார். ''பெற்றோரைக் கவனிப்பார்களென்ற நம்பிக்கையில் தானே. பத்து வருடங்களுக்கு முன்போனவங்கள் ஒருத்தனெண்டாலும் வந்து எங்களைப் பார்த்தாங்களே. நாளைக்கு நாங்களும் செத்துப்போனால் உனது நிலை என்ன என்று யாராவது யோசித்துப் பார்க்கிறாங்களே. காசு காசு என்று பேயாய் அலையுறாங்கள். இது எங்கடை வீட்டிலை இல்லை.. யாழ்ப்பாணத்திலை உள்ள பெரும்பாலான வீடுகளிலை நடக்குது. தில்லை நடராசாவுக்கு ஐந்து ஆம்பிளைப் பிள்ளைகள்.

தாயும் தேப்பனும் இஞ்சை வாழ்ந்தவை. தேப்பன் செத்தபோது மூன்று மக்கள் வந்தவை. வந்தாலும் கொள்ளி வைக்கவில்லை. முப்பத்தொரு நாட்களுக்கு நிக்க லீவு இல்லையென்று தில்லை நடராசாவின்ரை தமையன் கொள்ளி வைத்தவர். அவரின் மூன்று பிள்ளைகளும் வெளி நாட்டிலை. அப்ப அவருக்கு ஆர் கொள்ளி வைக்கிறது. இதுகளை நினைத்தால் உயிரே போய்விடும் போல் இருக்கிறது. எனக்கும் நாளைக்கும் இந்த நிலை தான். இப்ப நீ எம்மோடு இல்லையென்றால் ஐந்து வருடங்களாகப் பாரிசவாதத்தால் சிரமப்படும் எனது நிலை என்ன? உனது அம்மாவின் நிலை என்ன? நான் செத்தால் பேரப்பிள்ளைகள் பந்தம் பிடிக்கவேணும். அப்படிப்பிடித்தால் தான் சொர்க்கத்திற்கு வழி தவறாமல் செல்லலாம் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும் பிடிக்கும் பந்தத்தின் ஒளி தான் இறந்த

ஆன்மாக்களுக்கு வழிகாட்டி . அவரவர் செல்ல வேண்டிய அதாவது சொர்க்கம் அல்லது நரகத்திற்கு அது தான் வழி காட்டும். எனக்கு எந்தப்பேரன் அல்லது பூட்டன் இருக்கிறான் வழிகாட்ட'' கலங்கினார் பொன்னம்பலம்..

''அப்பா, இதெல்லாம் மூடக் கொள்கை அப்பா, தயவு செய்து அவற்றை எண்ணிக் கலங்காதைங்கோ. நான் உங்களைப்பாதுகாப்பன். உங்கடை குறைகளைத் தீர்ப்பன். எனது குழந்தைகள் நீங்கள் சொர்க்கத்திற்குச் செல்ல வழிகாட்டும்'' கலங்கினாள் பிரியா.

நீ அழாதையம்மா. எமது சமயம் கூறுவதெதுவும் மூடக்கொள்கை அல்ல. ஞானிகளும் முனிவர்களும் தம் ஞானத்தால் கண்டறிந்தவை. மெஞ்ஞானம் உள்ளவனுக்குத் தான் அது புரியும்''.

''ஓமப்பா...... நான் ஏற்றுக்கொள்கிறேன்'' என்று கூறும்போது, ''மகாலட்சுமி'' என்று யாரோ கூப்பிடும் ஓசை கேட்டது.

# 9

“செல்லத்துரை தான். போய்க்கூட்டிவா” என்றார் பொன்னம்பலம். அதற்குள் அவர் உள்ளே வந்து, “ நீ நினைத்தபடி தவத்திற்குத் திருமணம் செய்து வைக்க முடியுமோ?” என்று கோபமாகக் கேட்டார். செல்லத்துரை.

செல்லத்துரை மகாலட்சுமியின் சகோதரன். அவரின் மகளைத்தான் அரவிந்தன் திருமணம் செய்திருந்தான். செல்லத்துரை ஊரில் உள்ள வண்ஏபீ பாடசாலையில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். சரியான முரட்டுச் சுபாபம் உடையவர். ஆனால் மேலதிகாரிகளுக்குத் தலைவணங்கிச் சவகம் செய்பவர். அவருக்கும் பொன்னம்பலத்திற்கும் ஒத்துவராது. அத்துடன் அவரை மகாலட்சுமிக்கும் பிரியாவுக்கும் பிடியாது. யாரையும் மதிக்காது கேலியும்

கிண்டலுமாகக் கதைப்பார். அதனால் பொன்னம்பலம் அவருடன் தேவையேற்பட்டால் மட்டும் கதைப்பார்.

“எனது மகள் அவள். என்னைத்தவிர அவளது திருமணத்தில் யார் அக்கறை கொண்டுள்ளனர். ஆம்பிளைப்பிள்ளைகள் ஐந்து இருக்கு. ஊர் முழுக்க உறவினர்களும் நண்பர்களும் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவராவது அவளுக்கொரு திருமணம் பேசினார்களா..?”

“திருமணம் என்பது விதிப்படி நடக்கும். இவள் இயக்கத்திற்குப் போகாது இருந்திருந்தால் செய்திருக்கலாம். அவள் திமிரிலை தானே இயக்கத்திற்குப் போனவள் அனுபவிக்கட்டன். அதைவிட்டுவிட்டுச் சகோதரங்களையும் உறவினர்களையும் குற்றம் சொன்னால் எப்படி?” கோபத்துடன் கேட்டார் செல்லத்துரை.

பிரியாவுக்கு அவரின் வார்த்தைகள் அளவுக்கதிகமான ஆத்திரத்தை வரவழைத்தது.

புலிகளோடு இணைந்து செயலாற்றுவது போல நடித்துத்தான் அவர் அதிபர் பதவியைப்பெற்றவர். பலருக்குத் தகுதியிருந்தும் இவர் மீதுள்ள பயத்தால் எவரும் விண்ணப்பிக்கவில்லை. அத்துடன் நான் இயக்கத்தில் உயரிய பதவியில் இருந்ததால் அவரை எதிர்க்க யாரும் முன்வரவில்லை. இது அக்காலத்தில் இயல்பாகவே நடைபெற்றது. நாட்டில் பெரும் பிரச்சினை நடைபெறும்போது வாழ்வதற்குப் பணம் வந்தால் போதும் பதவிகள் எவையும் தேவையில்லையென்றே பலரும் விரும்பினர். அதைப்பயன்படுத்தி எவ்விதமான தகுதியும் இல்லாமல் நியமிக்கப்பட்டவர் தான் அவர். அவர் இயக்கத்தோடு மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தாலும் அவரது மருமகளான நான் இயக்கத்தில் இருந்தாலும் கல்விகள் அவரை மதித்து கௌரவித்தனர். அத்துடன் யாரும் அப்பதவிக்கு விண்ணப்பிக்காததால் நேர்முகப்பரீட்சை இன்றியே அவருக்கு அதிபர் பதவி வழங்கப்பட்டது. அதை எண்ணாது அவர்

கேலியாகக்கதைத்தது பிரியாவுக்கு கோபத்தை வரவழைத்தது.

“மாமா , நீங்கள் சேவையில் இருந்தபோது இயக்க ஆதரவாளராக இருந்தீர்கள். பிரதேசப் பொறுப்பாளர்களையும் என்னையும் பாடசாலை விழாக்களுக்கு விருந்தினர்களாக அழைத்தீர்கள். தேசியக்கொடியை ஏற்றினீர்கள். இப்பயோ வேறமாதிரிக் கதைக்கிறீர்கள். நான் திமிரிலா இயக்கத்திற்குப் போனேன்” உரத்துக்கேட்டாள் பிரியா.

“அந்தநேரம் தேவைக்கேற்ற மாதிரி நடந்தவர். இயக்கம் காட்டிற்குச் சென்ற பின்பு அரசின் பக்கம் சேர்ந்து தனது பதவியைத் தக்கவைத்தவர். அவர் அப்படித் தான் அம்மா பேசுவார். நீ அதைக் கணக்கில் எடுக்காதை” என்றார் பொன்னம்பலம்.

பொன்னம்பலத்தின் பேச்சை அவர் அசட்டை செய்யவில்லை. அதைக்கேட்டதாகவும் காட்டிக்கொள்ளவில்லை. “நான் அரவிந்தன்

சொன்னதற்காகத் தான் வந்தனான். தனக்கோ அல்லது தனது சகோதரர்களுக்கோ இந்தச் சம்பந்தம் விருப்பமில்லையாம். உடனடியாகக் கைவிடட்டாம். அதைத்தான் சொல்ல வந்தனா அதிகாரி?

“சரி” என்றார் பொன்னம்பலம்.

செல்லத்துரைக்கு அவமானமாக இருந்தது. அரவிந்தன் சொல்லியதைச் சொல்லிவிட்டாய் எழுந்துபோ என்று கூறுவது போல இருந்தது அவரது பதில்.

“அரவிந்தனுக்கு நான் என்ன சொல்வது?”

“இதுக்கு நான் எப்படிப் பதில் சொல்வது. தவம் இது உன்னுடைய பிரச்சினை நீயே பதிலைச்சொல்லு” என்றார் பொன்னம்பலம்.

“எனக்குக் குருபரனைத் திருமணம் செய்ய விருப்பம். அதை அப்பாவுக்குச் சொன்னேன். அப்பா அண்ணாக்குச் சொல்ல அவர் உங்களுக்குச் சொல்லியுள்ளார். நான் இப்போ

உங்களுக்குச் சொல்லியுள்ளேன். அதை அண்ணனுக்குச் சொல்லுங்கோ'' என்றார் பிரியா.

செல்லத்துரையால் எதுவும் பேச முடியவில்லை. சில நிமிடங்கள் பேசாமல் இருந்தார். பின்பு, அவள் சின்னப்பிள்ளை. விபரம் அறியாதவள், நல்லது கெட்டது தெரியாது. அவளுக்குப் புத்திமதிகள் கூறுவதை விட்டு விட்டு அவளுக்குச் சார்பாகக் கதைக்கிறீர்கள். நாளைக்கு அந்தக்குடிகாரன் விட்டு விட்டுச் சென்றால் என்ன செய்வீர்கள்'' செல்லத்துரை கேட்டார்.

''அது தான் விதியென்றால் யாரால் என்ன செய்ய முடியும். ஏதோ வாழுற நாளைக்கு வாழட்டும். ஊரில் பெருங்குடிகாரர் பெரும்கள்ளர் எல்லாம் திருந்தி வாழ்கிறார்கள். குருபரன் படித்தவன். அறிவாளி உலகத்தைத் தெரிந்தவன். திருந்தி வாழ்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.'' என்றார் பொன்னம்பலம்.

உள்ளே சென்ற பிரிய ஒரு படத்துடன் வந்து அதைச் செல்லத்துரையிடம் கொடுத்தாள். அதை வாங்கிய பார்த்த செல்லத்துரை திடுக்கிட்டுத் திகைத்துப்போனார்.

‘‘இதுகளையெல்லாம் ஏன் வைத்திருக்கிறாய். நெருப்பில்போடு’’ என்றார். அது அவரது பாடசாலையில் மரம் நாட்டுவிழாவின் போது எடுத்தபடம். பிரியாவை இயக்க உடையில் பாண்ட் செற்றுடன் அவரும் ஆசிரியர்களும் அழைத்துச் சென்ற படம். அது பெருப்பிக்கப்பட்டு பிறேம்போடப்பட்டிருந்தது.

‘‘உனது பாடசாலையில் எடுத்தபடம் தானே. நீ தானே தவத்தை மேளதாளங்களுடன் அழைத்துச் செல்கிறாய்’’ பொன்னம்பலம் கேட்டார்.

‘‘உதுகளை விட்டிட்டு நான் கேட்ட கேள்விக்கு மறுமொழியைச் சொல்லுங்கோ என்றார் செல்லத்துரை. அவரின் பேச்சில் முன்னைய காரம் இருக்கவில்லை. அது தளர்ந்திருந்தது.

‘‘தவம் குருபரனைத் தான் செய்யப்போவதாகச் சொல்கிறாள். அதை அவள் குருபரனுக்குச் சொல்லியும் விட்டாள்.. சரவணபவன் குருக்களிடம் குருபரனின் சாதகத்தைக் கொண்டு சென்று கொடுத்திருக்கிறார். குருக்கள் மாலைப்பூசை முடிய வாற தொண்டவர். இதுக்கு மேலை சொல்ல என்ன இருக்கு’’ பொன்னம்பலம் சொன்னார்.

‘‘லக்சுமி எங்கை? அவளையும் ஒரு சொல்லுக்கேட்பம். பிறகு மருமகன் தாயோடு கதைக்கவில்லை. என்று சொல்வார்’’ என்றார் செல்லத்துரை.

‘‘மகாகோவிலுக்குப் போட்டு கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் வந்தவள். அவளுக்கு எதுவும் தெரியாது. எல்லாம் இரண்டொரு மணித்தியாலங்களில் முடிந்துவிட்டது. தவம் அம்மாவை வரச்சொல்லு’’ என்றார் பொன்னம்பலம்.

“அம்மாவுக்கு எல்லாம் தெரியும். கோவிலில் உள்ளவர்கள் அம்மாவைக் கேட்டவையாம்” என்றாள் பிரியா.

“அதுக்குள்ளை ஊர்முழுக்கப் பரவி விட்டதா……?” பொன்னம்பலம் ஆச்சரியப்பட்டார்.

“குருபரனால் சந்தோசத்தைத் தாங்க முடியவில்லை. வழி தெருவில் நின்றவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். அது கால்கைவைத்துப் பரவியிருக்கு” என்றாள் பிரியா.

அப்போது மகாலட்சுமி அங்கே வந்தாள். அவளுக்கு அவரைப்பிடிக்காது. அவர் பொன்னம்பலத்தைக் கேலி செய்வதும் அவரது மனைவி மதிப்பில்லாமல் கதைப்பதும் அவளுக்குப் பிடிப்பதில்லை. அத்துடன் அரவிந்தன் அவரது மகளைத் திருமணம் செய்தபின் அவரும் மகளும் சேர்த்து தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தனர்.

மகாலட்சுமியைக் கண்டதும் பாசம் பொங்கச் சிரித்தார். செல்லத்துரை பின் , ‘‘எமக்கிடையே பல பிரச்சினைகள் இருந்தாலும் ஆபத்து வரும் போது பழைய கோபதாபங்களை நினைத்து உறவாடாது விட முடியுமே..? மகா, குருபரன் குடிகாரன்… என்று கூறும்போது குறுக்கிட்ட மகாலட்சுமி, ‘‘இப்போ இங்கு யார்தான் குடிக்கவில்லை. பெண்கள் கூடக் குடித்துவிட்டுக் கூத்தாடுவதாகச் செய்திகள் வருகின்றன. அவர் நல்ல பிள்ளை. பண்பான குடும்பத்தில் பிறந்தவர். தவத்தை விரும்பியிருக்கிறார். அவள் தகப்பனுக்காக அவரை வெறுத்திருக்கிறாள். அது தான் அவரது குடிக்குக் காரணம். ஒன்றுபோனால் வேறொன்று என்று மனிதர்கள் வாழும் காலத்தில் இவளை எண்ணி எண்ணி ஏங்கித் துயரத்தைப் போக்கக் குடித்த அவரை நாம் போற்ற வேண்டுமே தவிரத் தூற்றக்கூடாது. அவர் மனிதருள் மாணிக்கம். இதுக்குமேலே கதைக்க எனக்குத்தெரியாது. அதை விட எனது கணவன் இது வரை எந்தக் குறையும்

எனக்குவிடவில்லை. என்னைத் தனது பிள்ளைபோல நினைத்து அன்பு செலுத்தியவர். அதனால் காதலைப்பற்றி எனக்குத்தெரியும். ஒருவன் காதலித்துக் கலியாணம் செய்யலாம். அவன் திருமணம் செய்த பின்பும் காதலிக்கலாம். குருபரன் தவத்தை முன்பு காதலித்தவர் இப்பவும் காதலிக்கிறார். எப்பவும் காதலிப்பார் என்ற எண்ணம் எம் மூவருக்கும் இருக்கு''.

செல்லத்துரைக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. மகாலட்சுமி புரிசனை முழுமையாக நம்பி வாழ்பவள். அவர் சொல்வது தான் அவளுக்கு வேதவாக்கு. இருப்பினும் மகனும் மருமகனும் வற்புறுத்திச் சொன்னதற்காக வந்திருந்தார், '' பொன்னம்பலம் சொல்வதைத்தான் மகாலட்சுமியும் சொல்வாள். பொன்னம்பலத்தாருக்கு விசர் முற்றிவிட்டது. அந்தாள் யாருடனும் எதையும் கலந்தலோசிக்காது. கலந்து ஆலோசிக்கின்ற மனுசன் என்றால் மோளின் பிரச்சினையைத் தமையன் மாருக்குக் கூடச் சொல்லாமல்

முடிவெடுக்குமே. முடிவெடுத்து மாப்பிளைக்கும் , மாப்பிளையின் பெற்றோருக்கும் சொல்லிவிட்டுத் தானே அத்தாள் பிள்ளைகளுக்குச் சொன்னது. இப்ப மாப்பிளை பகுதி முகூர்த்த நாள்ப் பார்க்கப் புறப்பட்டால் பிறகு நீங்கள் போய் என்னத்தைச் சாதிக்கப்போகிறீர்கள். அவமானப் பட்டுத்தான் வருவீர்கள்'' என்று அவர் புறப்படும் போது அவரின் மனைவி கூறியது அவரது காதுகளில் ஒலித்தது.

அப்போது பிரியா அவருக்கும் பொன்னம்பலத்திற்கும் தேநீர் கொண்டுவந்தாள். அவர் பொன்னம்பலத்தின் வீட்டில் நெடுங்காலமாகத் தண்ணீர் குடிப்பதில்லை. அதை அவர் சாமார்த்தியமாக விலக்கி வந்தார்.

‘‘வாசிகசாலையிலை கொஞ்சம் வேலை இருந்தது. அதை முடித்துவிட்டு இப்பத்தான் சாப்பிட்டனான். கலியாணச் சாப்பாட்டைச் சாப்பிடுவம்'' என்று எழுந்தார் செல்லத்துரை. பொன்னம்பலம் எதுவும் பேசவில்லை. மகாலட்சுமியும் பேசவில்லை. தனது

சகோதரி ஒரு முறை ‘‘தேநீரைக் குடி’’ என்று கேட்டிருக்கலாம் என்று நினைத்தவாறு எழுந்தார். பிரியா வாசல்வரை வந்து வழியனுப்பினாள். செல்லத்துரை எதுவும் பேசவில்லை. ‘‘கடைசி போய்வருகிறேன்’’ என்றாவது கூறவில்லை. அது பிரியாவுக்கு வேதனையைக் கொடுத்த போதும் அவள் அதைப் பெரிதாக எடுக்கவில்லை.

# 10

மாலை நான்கு மணிக்குச் சரவணபவனும் மனைவி சிவகாமியும் குருபரனும் அறிவிக்காது பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்தனர். அதை யாரும் எதிர்பார்க்கவில்லை.

பொன்னம்பலம் சக்கர நாற்காலியில் இருந்தபடி வரவேற்றார், ‘‘உங்களின் வருகையை நான் எதிர்பார்க்கவில்லை. இன்று நாளும் அவ்வளவு நல்லதல்ல. பின்னேரம் குருக்கள் வாறதென்றவர் அவர் வந்தபின் அவரைக்கேட்டு

விட்டுக் கூப்பிடலாமென்று நினைத்தேன். வாருங்கோ வாருங்கோ'' என்றார் பொன்னம்பலம்.

''மகன் அவசரப்பட்டான். பலவருடங்களாகக் காத்து காத்து ஏமாந்தது தான் எஞ்சியது. தவத்தின் மாமானார் செல்லத்துரை இக் கலியாணம் நடக்காது. நடக்க நானும் மருமகனும் விட மாட்டம் என்று வாசிகசாலையில் நின்று பகிரங்கமாகச் கூறியிருக்கிறார். அதைக் கேட்டதும் மகன் அளவுக்கதிகமாகக் குழம்பிவிட்டான். அவன்படும் துன்பத்தைச் சகிக்க முடியாததால் தான் வந்தோம். அதனால் தான் நாள்கோள் பார்க்கவில்லை. தவறானால் மன்னித்துக்கொள்ளுங்கோ'' கரங்குவித்தார் சரவணாவன். அவரது கண்கள் கலங்கின. குரல் தளதளர்த்தது.

''ஐயையோ, உங்களைத் தகுந்த முறையில் வரவேற்க முடியவில்லையே என்றுதான் அப்படிச் சொன்னேன். தவறுதான் சமய சம்பிரதாயங்கள் யாவும் விதிக்கு முன் செயலிழந்து போகும். நாள்ப்பார்த்து

கோள்பார்த்து சமய சம்பிரதாயப்படி நான் பல திருமணங்களை நடத்தி வைத்தேன். பெரும்பாலாவை தோல்வியில் தான் முடிவடைந்தன. அதன் பின்பு தான் விதி என்ற ஒன்றிருக்கு என்று நம்பினேன். விதிப்படி தான் யாவும் நடக்கும். எனது இனத்தவன் ஒருவன் ஒரு பெண்ணைக் காதலித்து ஆடி அமாவாசையின்று கூட்டிச் சென்றுவிட்டான். அவை இப்ப ஓகோ என்றிருக்கினை. எல்லாம் இறைவன் செயல். அவனிடம் சகலவற்றையும் ஒப்படைத்து விட்டுச் சகல காரியங்களையும் செய்யலாம். நாள்கோள் பார்க்கத் தேவையில்லை என்று நாயன்மாரே கூறியுள்ளனர். தவம் அம்மாவை அழைத்து வா'' என்றார் பொன்னம்பலம்.

மகாலட்சுமி வந்ததும் குருபரன் சொன்னான், ‘‘அம்மா, பெரியவரின் அருகில் வாருங்கள்'' என்ற போது மகாலட்சுமி சற்றுத் தடுமாறினாள். குருபரன் அவளின் கையைப்பிடித்து அழைத்துச் சென்று பொன்னம்பலத்தின் அருகே இருத்திவிட்டு, அவர்களது பாதங்களை

பற்றினான், ‘‘ஐயா, நீங்கள் இருவரும் சிவத்தையும் சக்தியையும் போன்றவர்கள். நான் கற்றும் மடையனாகியப் பல பாவங்களைச் செய்து விட்டேன். அறிந்தறிந்து செய்ய இப்பாவங்களை மன்னியுங்கள்.. இனிமேல் எக்காரணங் கொண்டும் இப்படியான பாவங்களைச் செய்ய மாட்டேன்’’ விம்மினான் குருபரன்.

பொன்னம்பலம் திகைத்து திகிலடைந்து போனார். அவரால் அதை நம்பமுடியவில்லை. நடிப்புக்கென்றாலும் பெரியவர்களின் பாதங்களைத் தொட்டுக் கும்பிடுவோர் இப்போது இல்லை என்று எண்ணியவர், ‘‘மகனே, நீ எந்தத் தவறையும் செய்யவில்லை. இன்னொருவரின் செயலால் பாதிக்கப்பட்டு உன்னை அறியாமலும், அவை பாவங்கள் என்று அறியாமலும் செய்தாய். தவறைத் தவறென்று உணர்ந்து கொண்டவன் திரும்பவும் அத்தகைய தவறுகளைச் செய்யான். உன்னில் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கு. நான் தவம்

செய்து பெற்றவள் தான் தவப்பிரியா. அவளை என்னைத் தவிர வேறு எவரும் தவம் என்று அழைப்பதில்லை. தவம் என்று அழைப்பது அவளுக்குப் பிடிக்காது. அவளது சகோதரர்கள் அவளைக் கேலி செய்வதற்காகத் தவம் தவம் என்பார்கள். அதை அவள் வெறுப்பாள். அதனால் வீட்டில் பிரளயமே நடக்கும். ஆதலால் நீங்கள் கட்டாயம் அவளைத் தவம் என்றே அழைத்தல் வேண்டும். இது எனது அன்புக்கட்டளை'' தழுதழுத்தார் பொன்னம்பலம்.

''நான் தவம் என்று தான் அழைப்பேன். ஒரே ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தேன். அதில் தவம் என்று தான் எழுதினேன். அதனால் தானோ என்னவோ தவம் என்னை வெறுத்தாள். செ…'' என்றவன் நாக்கைக் கடித்தவாறு மிகுதியை விழுங்கினான்.

''செருப்பாலை அடிக்க முறப்பட்டவள்'' என்று சிரித்த பொன்னம்பலம்,'' அம்மா, குருபரனுக்கு வீட்டைச் சுற்றிக்காட்டு என்றார். அதன் அர்த்தம்

பிரியாவுக்கு விளங்கியது. குருபரனுக்கு விளங்கவில்லை.

பிரியா தனது அறைக்கு அவனை அழைத்து வந்தாள். அந்த அவளை மிக மிக அழகாக இருந்தது. சுவருக்குப்பச்சை வர்ணம் பூசப்பட்டிருந்தது. யன்னலிற்கும் கதவிற்கும் பச்சைநிற கேட்டின்கள் பூட்டப்பட்டிருந்தன. தலைவரின் படம் சுவரில் தொங்கியது. அதற்கு மாலையிடப்பட்டிருந்தது. கட்டிலுக்குப் பச்சை விரிப்பு தலையணைக்கு பச்சை உறை.

‘‘எல்லாம் பச்சை மயமாக இருக்கிறது’’ என்றான் குருபரன்.

‘‘பச்சையென்றால் பசுமை. பசுமையாக எவ் வேளைகளிலும் இருக்க விரும்புகிறேன். உலகமே பச்சையால்போர்க்கப்பட்டுள்ளபோது இந்த அபலை பச்சையை விரும்பக்கூடாதா’’ என்று கேட்டாள் பிரியா.

‘‘தவம் இப்படி ஏன் கதைக்கிறீர். நீர் அபலையா. கேட்டதும் என் நெஞ்சு வெடித்து

விட்டது. நான் உயிரோடு உள்ளவனா நீர் அபலை இல்லை’’ கலங்கினான் குருபரன்.

‘‘இனி நான் அப்படிச் சொல்லமாட்டன். உங்களின் அன்பை முழுமையாகப் புரிந்தும் உங்களைப் புண்படுத்தி விட்டேன்’’ விம்மினாள் பிரியா.

‘‘தவம்........ தவம்............ பழையதை நினைவு படுத்த வேண்டாம். அது சரி உம்மை நான் முன்பே தவம் என்று தான் அழைப்பேன். இப்போது உமது தகப்பனார் தவம் என்று அழைக்கும்படி கூறியுள்ளார். அது உனக்குப் பிடிக்குமா..?’’

‘‘அப்பாவின் அன்புக்குக் கட்டுப்பட்டவள் நான். அவரின் விருப்பத்திற்காகத் தான் உங்களை நான் அவரின் வெறுத்தேன். இனி எல்லோரும் என்னைத் தவம் என்றே அழைக்கட்டும்’’ என்றாள் தவப்பிரியா.

‘‘இன்றைக்கு நீர் மிகவும் அழகாக இருக்கிறீர். இப்படியே பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். போலுள்ளது’’ குருபரனின் குரல் தாழ்ந்து ஒலித்தது. முகம் வியர்த்தது. கைகள் நடுங்கின. தான் விரும்பிய ஒருவருடன் தன்மையில் அதுவும் ஓர் அறையில் இருந்தது அவனுக்கு மயக்கத்தைக் கொடுத்தது.

‘‘எனது உயிர்நண்பன் செழியன். அவன் மாமனின் மகளைக் காதலித்தான். அவளும் அவனைக் காதலித்தாள். அவன் அவளைப்பற்றித் தினமும் கவிதை எழுதுவான். மிகவும் சுவையான கவிதைகள் அவை. அவற்றை எழுதி விட்டு எனக்குக் காட்டுவான். நான் அவற்றைப் படித்து விட்டு ஒரு கொப்பியில் எழுதி வைத்துள்ளேன். சில கவிதைகள் எனக்குப் பாடம். நான் எழுதி வைத்த கொப்பியைக் பின்பு கொண்டு வந்து தருகிறேன். வாசித்துப்பாரும். அருமையான கவிதைகள். அவை சரியானவையா என்று உம்மைப் பார்த்துத் தான் நான் தெரிந்து கொள்ள வேண்டும்’’

என்றவன் சிறிது நேரம் பேசாமலிருந்தான். பின்பு சொன்னான், ‘‘அவன் பாவம். உயிருக்குயிராக நேசித்த அவள் இயக்கத்திற்குச் சென்று விட்டாள். பெற்றோர் வற்புறுத்தி பொய்சொல்லி அவனுக்கு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விட்டனர். அவள் இறந்து விட்டாள் என்று பெற்றோர் சொன்னதால் தான் செழியன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்தான். அவள் உண்மையில் சாகவில்லை. நான் அப்படிச் செத்திருந்தாலும் காலம் பூராகவும் உன்னை நினைத்தே வாழ்ந்திருப்பன்’’ உணர்ச்சிவசப்பட்டான் குருபரன்.

‘‘நீங்கள் கார்த்திகாவின் காதலனைத்தானே சொல்கிறீர்கள்.

‘‘அவளை உனக்குத்தெரியுமா.?’’ என்று கேட்டான் குருபரன்.

‘‘கார்த்திகாவின் மருத்துவக்குழுவில் தான் நானும் இருந்தனான். மாங்குள இராணுவ முகாம்

தாக்குதலின் பின் பதினைந்து நாட்கள் அவளைக் காணவில்லை. அதனால் அப்படி ஒரு நிலை ஏற்பட்டது.

அதில் கார்த்திகாவின் பிழை எதுவும் இல்லை. பெற்றோர் தான்..''

''பெற்றோர் சொன்னால் கேட்பவனுக்கு என்னமதி. நான் மட்டும் தான் உன்னைக் காதலித்தேன். நீ காதலிக்கவில்லை. இருந்தும் உனது நினைவாகவே வாழ்ந்து கொண்டிருந்தேன். அப்படி வாழ ஏன் செழியனால் முடியவில்லை''

''பிரியா உருகிப்போனாள், இப்படி ஒரு முட்டாள்த் தனமான காதலா?'' என்று நினைத்தாள்.

''நீ என்னைக் காதலிக்கவில்லை. நான் கவிதைகளை மனம் பாடம் செய்து அதை நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தேன். அவன் கார்த்திகாவுக்கு அருகில் மிகமிக அருகில் இருந்து அவளை அணுஅணுவாக ரசித்துச்

சுவைத்தவன். அப்படியிருக்க எப்படி மறு மனனம் செய்லாம்?'' கோபித்துதான் குருபரன்.

''அருமையான நேரத்தை ஏன் வீணாகக் கழிப்பான். நாம் எமது கதையைக் கதைக்கலாமே'' என்றாள்.

'' எனக்கு என்ன கதைக்கிறதென்றே புரியவில்லை. இருப்பினும் செழியனின் கவிதையொன்றைச் சொல்கிறேன். அதன் பின்பு அக்கவிதைப்படி இருக்கிறாயா என்று பார்த்து ரசிக்கிறேன்.

இலக்கியம் உந்தன் இதழ்களில் மலரும்.

கவிதைகள் உந்தன் பேச்சில் உதிரும்

கண்கள் என்றும் நாட்டியமாடும்.

கன்னங்கள் இரண்டும் மேடைகளாகி காவியமாகி என்னக் கவரும். எப்படிக்கவிதை . அவளை முழுமையாக ரசித்துச் சுவைத்து எழுதியுள்ளான். அது பொருந்துமா என்று

உம்மை ரசித்துச் சுவைத்தால் தானே தெரியும்'' என்றான் குருபரன்.

குருபரனைப் பார்க்க வெட்கமாக இருந்தது. பலவருடங்களுக்கு முன் அரும்புமீசையுடனும் குநற்தாடியுடனுமே பார்த்தாள். பார்த்ததும் கவரக்கூடிய ஒரு கவர்ச்சி அவனில் இருந்தது. இப்போது மீசையையும் குறுந்தாடியையும் காணவில்லை. பொலிவான அந்தமுகம் முழுமையாகப் பொலிவிழந்திருந்தது.

''கவிதை நன்றாக இருக்கு. அவர் எழுதினார். அதைநீங்கள் படித்துச் சுவைத்தீர்கள்'' என்றாள் பிரியா.

''இல்லை இல்லை சுவைத்து அனுபீக்கப் போகிறேன். இந்த மாதம் முடியுமுன் எமது திருமணம் முடிந்து விடும். அதன்பிறகு கவிதையை அனுபவிப்பது தானே எனது வேலை''.

இன்னொரு கவிதையைப்பார்''.

“ சொர்க்கம் செல்வோம் வாவா என்றாள்

சொல்லில் தானே சொர்க்கம் என்று

நினைத்தேன் அதனால் இன்பம் இல்லை

சொல்லைச் செயலில் காட்டியதாலே

சொர்க்கம் அன்று தெரிந்தது நிஜமாய்

நினைவும் இன்றி கனவும் இன்றி கரைந்தது மனது சொர்க்கத்தோனில் மலர்ந்தது உயிரும் வாடா மலராய்”

“மோசமான கவிதை. இனி உந்தக் கவிதைகள் வேண்டாம்” என்றாள் பிரியா.

“நாம் என்ன அனுபவமுள்ளவர்களா காதல் கதை பேச இரண்டு மூன்று நாட்கள் சென்றால் நானும் கவிதை எழுதத் தொடங்கி விடுவேன்”

“சகிக்காது” என்றாள் பிரியா.

“எனக்குக் கவிதை எழுதத்தெரியாது. கார்த்திகாவைப் பார்த்த பின் கவிதைகளை

எழுதாமல் இருக்க முடியவில்லை. கார்த்திகாவே ஓராயிரம் கவிதை’’ என்று செழியன் அடிக்கடி சொல்வான். பின்பு அவர் இயக்கத்திற்குச் சென்ற பின்பு குடித்து விட்டு கதைப்பான். கதைப்பதெல்லாம் கவிதையாய் மாறும். அதைப் பார்த்து விட்டு நானும் பேனாவையும் பேப்பரையும் எடுப்பேன். ஆனால் தவம் என்ற சொல்லைத்தவிர வேறு எதுவும் நினைவுக்குவராது. இராமநாமம் எழுதுவது போலத் ‘தவம் தவம்’ என்னைக் காதலி என்னை ஏற்றுக்கொள் உன்னை நினையாமல் விடுவதற்காக குடிப்பேன். குடித்து விட்டால் என் நாவில் இருந்த தவம் கண்ணுக்குள் வந்து விடுவாள் என்று எழுதுவேன்.’’

அதைக் கேட்டதும் பிரியாவின் உடல் சிலிர்த்தது. உலகம் இருண்டு கொண்டு வந்தது. ன்ன செய்கிறோம் என்று தெரியாமல் குருபரனின் நெஞ்சில் சாய்ந்தாள்.

குருபரன் திகைத்துப்போவன். அவனது உணர்வுகள் மறுத்தன.

# 11

“நீங்கள் எதைச் சொன்னபோதும் எனக்குப் பயமாக இருக்கிறது. செல்லத்துரை வாத்தியார் மிகவும் மோசமானவர். அவர் தான் நினைத்ததைச் செய்து முடித்து விடுவார். நாவலர் பாடசாலைக்கு வெளிநாட்டில் இருந்து வந்த சிவகுமார் என்ற பழைய மாணவர் பக்கத்தில் இருக்கும் வயல் காணியை வாங்கித் தாறணென்டதாலை அப்போது இருந்த அதிபர் கொஞ்சப்பணத்தைக் கொடுத்து அவ் வயற்காணியை மறித்தவர். இருபது பரப்பு. நாவலர் பாடசாலைக்கு நூறுவருடங்களாக விளையாட்டு மைதானம் இல்லை. ஆனால் செல்லத்துரை அவனைக் காசு கொடுக்கவிடாமல்

பண்ணியதால் அந்த அதிபர் கோடு கச்சேரியெல்லாம் ஏறினவர். இப்படிப் பலதைச் சொல்லலாம்'' என்றார் சரவணபவன்.

''அது பொது விடயம், இது எனது வீட்டுக்குடும்ப விஷயம். எனக்கும் மாணவிக்கும் பூரணசம்மதம்'' என்று பொன்னம்பலம் கூறிக்கொண்டிருக்கும் போது சரவணபவன் குறுக்கிட்டுச் சொன்னார், ''உங்கடை விடயமாக இருந்தாலும் உங்களது ஐந்து பிள்ளைகளுக்கும் விருப்பமில்லையாம். தனது மருமகன் கடை சிவரையும் சம்மதிக்க மாட்டாராம்''. கவலையோடு சொன்னார் சரவணபவன்.

''என்னை மீறி எதுவும் நடக்காது''

''நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். செல்லத்துரை தனது அதிபர் விஷயத்திலை எத்தனை பேரை வெருட்டினது. இவருக்குப் பயந்து ஒருவரும் விண்ணப்பிக்கக் கூடஇல்லை. செய்வது முழுவதும் கள்ளவேலை. ஆயிரம்

பிள்ளைகள் கற்ற பாடசாலை. இப்ப முன்நூறு நாநூறு பிள்ளைகள் படிக்குது. அதுக்குக்காரணமும் இவர் தானே. எல்லாவிடயங்களிலும் நாவலர் வித்தியாலய அதிபரோடை பிரச்சனைப்பட அவர் திட்டமிட்டுப் பிள்ளைகளை யாழ்ப்பாணப்பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தார். அப்படி இருந்தும் திருந்துறாரில்லையே''

''கெட்டவர்கள் திருத்தமாட்டார்கள். அடிக்கடி தாம் திருந்திவிட்டதாகக் கூறுவார்கள். நல்லவர்கள் தீய செயல்களைச் செய்யமாட்டார்கள். நீங்கள் செல்லத்துரைக்குப் பயப்பட்டால் இப்பவே உங்கடை மருமகளைக் கூட்டிக் கொண்டுபோங்கோ''

சரவணபவனும் சிவகாமியும் அதிர்ந்து போனார்கள். சமய விதிமுறைகள் ஒழுக்கம் நேர்மை கட்டுப்பாடு என்று வாழ்ந்த பொன்னம்பலமா இப்படிக் கூறுகிறார்.

‘‘அவள் எனக்காக எனது சமய சம்பிரதாயங்களை மீறக்கூடாது என்பதற்காகத் தான் குருபரனின் அன்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தவள்.அதுபோல அவள் தாங்கமுடியாத கொடுமைகளை செய்தும் குருபரன் அவளின் மீது கொண்டகாதலால் இன்று வரைஅவளை நினைத்தே வாழ்கிறான். அப்படியானவன் ஒருபோதும் தவறு செய்யமாட்டான். குடிக்கமாட்டான். ஆகையால் நான் அவனை முழுமையாக நம்புகிறேன். அதனால் தான் அவளை அழைத்துச் செல்லச் சொன்னேன். முன்பே அவள் குருபரனுடன் சென்றிருந்தால் நாள்கோள் பார்த்திருப்போமா…..? சொல்லுங்கள்’’

‘‘எனது மகன் மீது என்னிலும் பார்க்கக் கூடுதலான நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். அது எனக்குப் பெருமையாக இருக்கு’’ கலங்கினார் சரவணபவன்.

‘‘சிவகாமி அம்மா, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்’’ என்று கேட்டார் பொன்னம்பலம்.

‘‘இதில் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. எனது கணவர் இது வரை எனது விருப்பத்திற்கு மாறாக நடந்ததில்லை. அவர் எதைச் சொன்னாலும் அதை நான் ஏற்பேன்’’ என்றாள் சிவகாமி.

‘‘மகாலட்சுமி, உன்ரை அபிப்பிராயத்தைச் சொல்லம்மா’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘நானென்ன சொல்ல இருக்கு. நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் செல்ல முடியுமா? செல்லத்துரை எனது சகோதரன் தான். இருப்பினும் அவனது நடத்தைகளால் எமக்கு அவனைப் பிடிப்பதில்லை. அரவிந்தன் ஆசைப்பட்டுவிட்டான் என்பதற்காக அவனின் மகளைக் கட்டி வைத்தோம். கட்டிய பின் அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று விட்டனர். யார் எதைச் சொன்னாலும் எனது கணவரின்

விருப்பத்திற்கு மாறாக நான் நடக்க மாட்டேன். அதற்காக நாம் தவமிருந்து பெற்ற தவத்தை இன்றே அனுப்ப முடியுமா..?'' மேலே பேசமுடியாது அழுதாள் மகாலட்சுமி.

''நான் சரவணபவன் இச் சம்பந்தத்தைச் செல்லத்துரையும் எமது பிள்ளைகளும் தடுத்துவிடுவார்கள் என்று சொன்னதால் தான் சொன்னேன். அப்படிச் செய்வேனா…? என்று கேட்டார் பென்னம்பலம்.

''நீங்கள் பகிடிக்குக் இப்படிக் கதைப்பதில்லை. அதனால் நான் பயந்துவிட்டேன்'' என்றாள் மகாலட்சுமி.

அப்போது சிவன் கோவிற்குருக்கள் காரில் வந்திறங்கினார். சரவணபவனும் சிவகாமியும் மகாலட்சுமியும் எழுந்து நின்று வணங்கி அவரை வரவேற்றனர்.

''என்னால் எழும்பமுடியாது. மன்னியுங்கள். வணக்கம் வாருங்கள்'' என்றார் பொன்னம்பலம்.

‘‘இரண்டு பேரினது சாதகங்களும் நல்ல முறையில் பொருந்தியுள்ளன. உங்களது வசதிக்கேற்பத் திருமணநாளைக் குறிக்கலாம்.’’ என்றார் குருக்கள்.

‘‘பதினைந்தாம் திகதிக்கு பின்பு வரும் நல்ல நாளாகப் பார்த்துத் தாருங்கள்’’ என்றாள் மகாலட்சுமி.

‘‘இருபதாம் திகதி, இருபத்து மூன்றாம் திகதிகளில் முகூர்த்தம் உண்டு. இருபத்து மூன்று விஷேசம்’’ என்றார் குருக்கள்.

‘‘அப்ப அதில் திருமணத்தை வைக்கலாம் என்ன சம்மந்தி’’ என்றார் பொன்னம்பலம். ‘‘சரி’’ என்றார் சரவணபவன்.

‘‘குருக்கள், வீட்டின் பின் பக்கத்தில் ஓர் அறை கட்டலாமென்றிருக்கிறேன். இடத்தைப்பார்த்துச் சொல்லுங்கோ’’ என்ற பொன்னம்பலம் குருக்களை அழைத்துக்கொண்டுபோய்

இடத்தைக்காட்டு மகாலட்சுமி'' என்றார் பொன்னம்பலம்.

குருக்களின் கார் வந்து நின்ற சத்தம் கேட்டு குருபரனும் பிரியாவும் வெளியே வந்தனர்.

''செழியன் மிகுந்த அனுபவத்தன். அடிக்கடி சொர்க்கத்திற்குச் சென்று வந்திருக்கிறான். உமது மூச்சுக்காற்று முகத்தில் பட்டபோது நான் சொர்க்கத்தில் மிதந்தேன்'' என்றான் குருபரன்.

அவளுக்கும் இதுவரை கிடைக்காத ஒருவித இன்ப மயக்கம் ஏற்பட்டிருந்தது. அதற்குள் குருக்கள் வந்துவிட்டார் என்று கவலைப்பட்டாள் பிரியா.

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. பொன்னம்பலத்தின் நான்காவது மகன் சுந்தரன் தொடர்பு கொண்டிருந்தான். அதைத் தெரிந்து கொண்ட பிரியா, ''சுந்தரண்னை அழைக்கிறார்'' என்றாள்.

ரெலிபோனைப் பிரியாவிடம் இருந்து வாங்கிய பொன்னம்பலம், ‘‘ஹலோ’’ என்றார்.

சுந்ரன் படிக்கும் போதே தர குளப்படிகாரன். சேரக்கூடாதநண்பர்களுடன் சேர்ந்து குடிப்பான். ஊரில் கலாட்டா செய்வான். பெரியவர்கள் எவரையும் மதிக்கமாட்டான். அவனது உயிர் நண்பன் திவாகரன். பரமஏழை. அவனுக்கு ஐந்து சகோதரிகள். குடிக்கக் கொடுத்து விட்டு தனது மூத்த சகோதரியைத் திட்டமிட்டுச் சேர்த்து வைத்தான். அவனைப் பொன்னம்பலம் ஏற்கவில்லை. அதனால் ஊரில் இருந்து பெருந்தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தான். அதனால் வெளிநாட்டுக்கு அனுப்பும் ஒருவரைப் பிடித்துப்பல இலட்ச ரூபா கொடுத்து வெளிநாடொன்றிற்கு அனுப்பிவைத்தார் பொன்னம்பலம். அதற்குப் பின்பு தான் அவருக்கு நிம்மதி கிடைத்தது. அவன் சென்ற சில வருடங்களுக்குள் மனைவியையும் தான் வாழும் நாட்டிற்கு அழைத்துவிட்டான். அவன் தொடர்பு கொள்வது குறைவு. ஒருவருடத்திற்குப் பின்பு இப்போது தான் தொடர்பு

கொண்டிருக்கிறான். அவன் குருபரனோடு சேர்ந்தும் குடித்திருக்கிறான்.

“அப்பா, சுகமாக இருக்கிறீங்களாப்பா……”

“நல்ல சுகமாய் இருக்கிறன். நீ சொல்லு”

“தவம் குருபரனை விரும்புவதாகவும் அவளை அவனுக்குச் செய்து கொடுக்கக் கூடாதென்றும் அண்ணாமார் மூவரும் சொன்னார்கள். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக நான் சரியென்றேன். ஆனால் அவர்களின் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. அவன் முன்பே தவத்தை விரும்பினவளாம். அவள் விரும்பததால் தானாம் குடிகாரனானவன். நல்ல ஒரு பெண்ணாலை எந்தக் கெட்ட கணவனையும் திருத்த முடியும் என்பதற்கு எனது மனைவி உதாரணமாவாள். நான் குடிக்காத குடியா? இல்லை நான் செய்யாத அடாவடித்தனங்களா…? இப்ப நான் குடிப்பதில்லை. நல்ல குடும்பத்தவளாகக் இருக்கிறேன். அதற்குக் காரணம் எனது மனைவி

தான். அவர்கள் எமது குடும்பத்திற்குப் பொருத்தமானவர்கள் இல்லை என்றாலும் எனக்குச் சிறந்த மனைவியாக இருக்கிறாள். ஒரு குடிகாரத்தகப்பனுக்குப் பிறந்த அவள் ஒரு சிறந்தமனைவியாக இருக்கும் போது ஒரு தலை சிறந்த மனிதனுக்குப் பிறந்த நான் உதவாதவனாகி விட்டேன். அது தானப்பா எனக்கு கவலை'' சுந்தரன் அழுதான்.

''குடித்துவிட்டு ஊரிலும், வீட்டிலும் அட்டகாசம் செய்த சுந்தரனா இவ்வாறு பேசுகிறான்'' பொன்னம்பலத்திற்கு ஆச்சரியமாக இருந்தது.

''அப்பா இப்போ நான் நல்ல வசதியாக இருக்கிறேன். தவத்தின் கலியாணத்திற்கு எனது மனைவியும் நானும் பிள்ளைகளும் வர விரும்புகிறோம். அதை அனுமதிப்பீர்களா….?'' கெஞ்சினான் சுந்தரன்.

''தாராளமாக வாப்பா..''

''உண்மையாக வா அப்பா…''

எனது மனைவியை நீங்கள் அங்கீகரரித்து ஏற்பீர்களா அப்பா…?’’

‘‘நீ வா. தாராளமாக வா’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘சரியப்பா. மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் வருவதானால் இன்னும் ஒன்றை நீங்கள் அனுமதிக்க வேண்டும்’’

‘‘சொல்லடா…. சொல்லு’’

‘‘தவத்தின்ரை கல்யாணச்செலவு முழுவதையும் நான் ஏற்கப்போறேன். அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்’’.

‘‘அது பெருஞ்செலவடா. உன்னாலை முடியுமோ….?

‘‘முடியும் அப்பா’’

‘‘சரி. உன்ரை தங்கச்சியின் விஷயம். உனது விருப்பப்படி செய்’’ என்றார் பொன்னம்பலம்.

அதன்பின் அவன் அவரோடு பலமணிநேரம் கதைத்தான். தாயோடும் தவத்தோடும் குருபரனோடும் கதைத்தான். அவனது மனைவியும் கதைத்தாள். பொன்னம்பலத்திற்குப் பூரண மகிழ்ச்சி.

‘‘அப்பா, சுந்தரண்ணையைக் கூட இது வரை ஏற்காத நீங்கள் இன்று அவரின் மனைவியையும் ஏற்று விட்டீர்கள். நீங்கள் உண்மையில் பெரியவர் தான்’’ என்றாள் பிரியா.

‘‘நான் ஏற்கவில்லை அம்மா. நீ தான் ஏற்கப்பண்ணினாய். எம்மவர் சாதி சமயம் பதவி அந்தஸ்து முதலியவற்றைத் தான் மதிக்கிறார்கள். நல்லவர்களை வல்லவர்களை மதிப்பதில்லை. அத்துடன் பொது நலத்துக்காகப் போராடியவர்களையும் மதிப்பதில்லை. நீ இயக்கத்திற்குச் சென்று வந்த பின்பு தான் எமது இனத்தைப் புரிந்து கொண்டேன். நல்லவர்களை மதிக்க வேண்டும். உனது அண்ணன்மார் ஐவர். ஐவரில் நால்வர் தமது மனைவி,

மனைவியின் பெற்றோர் சகோதரர்களைத் தானே மதிக்கிறார்கள்.. சுந்தரனும் மனைவியும் எல்லோரையும் மதிக்கிறார்கள். அவர்கள் சமூகத்தாலை ஒதுக்குப்பட்டதால் அதன் தாக்கத்தைப் புரிந்துள்ளனர். அது தான் அவர்களின் மாற்றத்திற்குக் காரணம். பலர் சுயநலத்துடன் செயற்பட்டதால் தான் போராட்டம் தோல்வியில் முடிந்தது. மனம் ஆறுதல் அடைந்தால் தான் மனிதன் சிறப்பாக வாழமுடியும்'' என்றார் பொன்னம்பலம்.

‘‘தனது தந்தை இப்படி மாறுவாரென்று அவள் கனவு கூடக் கண்டதில்லை, ‘‘பிரச்சினைகள், சிக்கல்கள், துன்பங்கள் வரும்போது மனங்கள் எவ்வளவு பாதிப்படைகிறது. அதிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்று நினைக்கிறது. அதிஷ்ட்டவசமாகத் துன்பங்கள் மறைந்தால் மனங்கள் மாறுமா?'' எனச் சிந்தித்தாள் தவம்.

# 12

இரண்டு நாட்கள் மெல்லக் கழிந்தன. குருபரன் அலுவலகத்திற்கு லீவு கொடுத்து விட்டுத் தவத்துடன் தங்கியிருந்தான். அவளோடு கழிக்கும் ஒவ்வொரு கணமும் நினைத்துப் பார்க்க முடியாத பேரின்பத்தைக் கொடுத்தது. அவன் இரண்டு நாட்களாகக் குடிக்கவில்லை. அத்துடன் குடிக்க வேண்டும் என்ற நினைவு கூட வரவில்லை. அவனது மனதைத் தவம் முழுமையாக நிரப்பியமையால் அவன் உலகையே மறந்துவிட்டான்.

காலையில் எழுந்தவுடன் வந்து தவத்துடன் சேர்ந்து பொன்னம்பலத்திற்கு உதவி செய்வான். பின்பு தவத்துடன் சேர்ந்து சாப்பிட்டு விட்டு அவளுடன் பொழுதைப் போக்குவான். அதன்பின் தவத்தோடு தான் பொழுது கழியும்.

‘‘வளவன் தன் காதலியை ரசித்து ரசித்து எழுதிய கவிதைகளை உம்மோடு சேர்த்துப் பார்க்கத்தான் என்னால் முடியும். அவன் எழுதிய இப் பாடலைப் பாரும். உமக்குப்

பொருந்துகிறது'' என்று சொல்லிவிட்டு அப்பாடலைக் காட்டினான்.

இடர்களை நீக்கி

இன்பம் தந்து

சொர்க்கம் காட்ட

உதித்தாய் புவியில்

எத்தனை வருடம்

தவமிருந் தேனும்

உன்னை அடைத்தலே

என்தன் எண்ணமாகும்

பட்டுள்ப்புகுந்து

பளபளவென்று

சொர்க்கத்தேராய்

அருகே வந்து

பலகதைபேசி

மயக்கும் மயிலே

இன்று தந்த

இன்பம் யாவும்

என்றும் பெற்று

இனிதாய் வாழ்ந்து

என்றும் இன்பம்

தருவாய் என்று

எல்லாம் வல்ல

இறைவன் பாதம்

இறைஞ்சுகின்றேன்.

‘‘ஆ அருமையாக இருக்கிறது. இக் கவிதை. எழுதியவனுக்குப் பொருந்தவில்லை. எனக்குப் பொருந்துகிறது. எனது எதிர்பார்ப்பு முழுவதும் இக்கவிதையில் உண்டு’’ நெகிழ்ந்தான் குருகரன்.

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. அரவிந்தன் அழைப்பில் இருந்தான். ‘‘அரவிந்தன் அண்ணா அழைப்பில் இருக்கிறார். நான் அப்பாவிடம் கொடுத்து விட்டு வருகிறேன்’’ என்ற தவம் தந்தையிடம் சென்று ரெலிபோனைக் கொடுத்தாள்.

‘‘அப்பா முன்பு சமயம் ஒழுக்கம் சாதியென்றெல்லாம் பார்க்கும் நீங்கள் இப்போ முற்றாக மாறி விட்டீர்கள். சுந்தரனின் மனைவியின் குடும்பம் எப்படியானது என்று உங்களுக்குத்தெரியும். நாம் அவர்களின் வீட்டில் பச்சைத்தண்ணீர் கூடக் குடிப்பதில்லை. அப்படி இருக்க அக்குடும்பத்தைச் சேர்த்துள்ளீர்கள். மாமா தான் ரோட்டில் தலைநிமிர்ந்து நடக்க முடியாதாம். கேவலமானவர்களைச் சேர்த்துள்ளதால் ஊரே சிரிக்கிறதாம்’’. அரவிந்தன் பேசிக்கொண்டிருக்கும்போது பொன்னம்பலம் குறுக்கிட்டுச் சொன்னார்,

‘‘மகனே, பழையன கழிவதும் புதியன புகுதலும் இயல்பு என்று இரண்டாயிரம் வருடங்களுக்கு

முன் வாழ்ந்த தொல்காப்பியர் கூறியிருக்கிறார். சுந்தரனின் மனைவியின் மூத்த சகோதரி தான் உனது மாமா வீட்டாருக்குச் சமைத்துக் கொடுக்கிறாள். மாமாவின் வீட்டில் சமைக்கும் அவள் தனது வீட்டில் சமைத்ததை ஏன் உண்ணக் கூடாது''.

''நீங்கள் இப்ப தத்துவம் பேசத்தொடங்கிவிட்டீர்கள். இப்ப இப்படிக் கதைக்கும் நீங்கள் சுந்தரனின் கலியாணவீட்டிற்கு ஏன் போகவில்லை. ஏன் எங்களையும் செல்ல அனுமதிக்கவில்லை'' கோபமாகக் கேட்டான்.

''மகனே, காலத்திற்கேற்ப இயற்கையே மாறுகின்றது. தவம் இயக்கத்திற்குச் சென்று பின் புனர்வாழ்வு பெற்று வந்தபின் அவளில் என்ன வித்தியாசம் இருந்தது. ஏன் எல்லாரும் வெறுக்கின்றனர். ஒரு காலத்தில் தலையில்தூக்கி வைத்து வணங்கியவர்களெல்லாம்

வெறுத்து ஒதுக்கின்றார்கள். அவளுக்கு நேர்ந்த அவலத்தால் எனது மனம் வெறுப்படைந்து விட்டது. கொஞ்ச நாள் வாழ்க்கையில் தகுதி தராதரம் யாவும் பார்க்க வேண்டுமா என்று சிந்தித்தேன். ஒரு மனமாற்றத்தால் அவளுக்கு நல்ல வாழ்க்கை அமைந்துள்ளது. எமக்கு அடங்கியிருந்த தவம் குருகபரனிடஞ் சென்று தன்னை ஏற்கச்சொல்லியிருக்கிறாள். இது ஒரு மனமாற்றம். அடுத்து அவளது முடிவை ஏற்று நானும் சம்மதித்தேன். இதுவும் ஒரு மனமாற்றம். யார் ஓமென்றாலும் தனது மகளுக்குத் திருமணம் செய்யத் தயாராக இருந்த சரவணபவனும் மனைவியும் அந்த நிலைக்குட்பட்டதும் மனமாற்றம் தான். இப்படி ஒவ்வொருவரும் மனம் மாறினால் யாழ்ப்பாணம் சொர்க பூமியாக மாறிவிடும்’’.

‘‘இப்ப சுந்தரனும் மனைவியும் பிள்ளைகளும் ஊருக்கு வெழுக்கிடுகிறார்கள். இரண்டொரு நாளில் வந்து விடுவார்கள். அவர்களை எங்களது

வீட்டிலா தங்க வைக்கப் போகிறீர்கள்'' என்று கேட்டுவிட்டு பேச்சை நிறுத்தினான் அரவிந்தன்.

''முழுக்க நனைந்தபின்பு முக்காடு எதற்கு. நான் எல்லாவற்றையும் விட்டுவிட்டேன். என்னோடு உறவாட விரும்பியவர்கள் உறவாடலாம். விருப்பமில்லாதவர்கள் என்னை விட்டுப்போகட்டும்''.

''இந்தளவுக்கு வந்து விட்டீர்களா..? எங்களையெல்லாம் தேவையில்லை என்று நினைத்துவிட்டீர்களா…?'' ஆத்திரப்பட்டான் அரவிந்தன்.

''என்னால் உதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. எனது பிள்ளை இயக்கத்திற்குச் சென்று பெருங்காயங்களுடன் திரும்பி வந்துள்ளாள். அவளை ஏற்க நீங்களும் தயாரில்லை. உற்றார் உறவினர்களும் தயாரில்லை. பாசத்தோடு வளர்த்த நானும் உங்களைப் போலச் சொல்ல முடியுமா….? என்னைப்போல எத்தனை பெற்றோர் தமது

பிள்ளைகளைப்பற்றி நினைத்து நினைத்து இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். எல்லாம் அவரவருக்கு வந்தால் தான் தெரியும். உனக்கு விருப்பமில்லை. நீ உனது மனைவியினதும் மாமாவினதும் சொற்படி நடக்கிறாய். ஆரூரனுக்கும் வாகீசனுக்கும் நாவுக்கரசருக்கும் ஏன் விருப்பமில்லை. நாவுக்கரசன் இயக்கத்தின் பெரும் ஆதரவாளன். அதனால் இயக்கம் தானே அவனை வெளிநாட்டுக்கு அனுப்பித் தமது வேலைகளைப் பார்ப்பித்தவர்கள். அப்படி இருக்க அவரும் ஏன் வெறுக்கிறார்''.

''அவனுக்கு இயக்கத்தின் மீது வெறுப்பில்லை. குருபரன் மீது தான் வெறுப்பு. அவன் சரியான குடிகாரன்.''

''மகனே, எல்லோரும் தவறுகள் செய்வது இயல்பு, தான் செய்வது தவறு என்று நினைத்த பலர் திருத்தியுள்ளனர்''

''உதெல்லாம் கதைப்பதற்கு நன்றாக இருக்கும். செயலுக்குச் சரிவராது. நான்கு பிள்ளைகளையும்

வெறுத்து ஒதுக்கி விட்டுத் தனிய இருந்து என்ன செய்யப் போகிறீர்கள்’’

‘‘பத்து வரிசமாய் எல்லோரும் வெளி நாட்டிலை இருக்கிறியள். இஞ்சை எத்தனை இடப்பெயர்வுகள், செல் அடிகள், குண்டுத் தாக்குதல்கள். இதற்கெல்லாம் நீங்கள் தான் வந்து காப்பாற்றினீர்களா,? நாலைந்து வருடமாக எனது கையும் காலும் செயற்படுவதில்லை. யார்வந்து எனக்கு உதவி செய்தது…? சொல்லு.

‘‘எல்லாரும் வாய்ச்சொல்லில் தான் வீரர். செல்லத்துரை கள்ளுக் குடிக்க மட்டும் சாதிகெட்டவன்ரை வீட்டுக்குப் போய்க் கோடீக்கை இருந்து குடிக்கும். ஆனால் கதையிலை பெருஞ்சாதிமான்’’.கோபத்துடன் சொன்னார் பொன்னம்பலம்.

‘‘ நீங்கள் அண்ணையைக் கடுமையாகச் ஏசிவிட்டீர்கள். பாவம் அப்பா அண்ணை’’ என்றார் பிரியா

‘‘விடம்மா. ஒவ்வொருத்தனும் ஒவ்வொருகதை. நான் ஏதோ தங்கடை வருமானத்திலை சீவிப்பதாய் நினைப்பு. ஆருரன் சொல்கிறான் சுந்தரன் காசு தர்றதெண்டவுடனை ஏற்றுட்டியள் என்று. குருபரன் ஒரு சதம் கூடச் சீதனமாய்க் கேட்கவில்லை. சரவணபவனும் மனைவியும் உங்களது மகனை நாங்கள் மருமகளாகப் பெறக்கொடுத்து வைத்திருத்தல் வேண்டும் என்கிறார்கள். அப்படி இருக்க எனக்குக் காசுதேவையா…’’ அவன் கெஞ்சினான். அவனது விருப்பத்தை நிராகரிக்க என்னால் முடியவில்லை. அவன்ரை மனைவிக்குப் மகளுக்கும் அவன் தாற காசின் பெறுமதிக்கு நகைபோட்டு விடுவம். வாகீசன் எதுவும் கதைக்காமல் ‘‘அப்பா உங்களுக்கு நான் எதையும் சொல்லத்தேவையில்லை. அவன் குடிகாரன் நன்றாகயோசித்துச் செய்யுங்கள் என்றான். அதோடு சரி. அவனைச் செயற்படு அவனது மனைவியும் மாமியாரும் விடாயினை.. போனவன் மாமியின்ரை ஆட்களெல்லோரையும் அழைத்துத் தன்னுடன்

வைத்திருக்கிறான். எதையென்றாலும் செய்யட்டும்'' என்றார். பொன்னம்பலம் வெறுப்புடன்

``நல்ல மனிதனான குருகரனை நான் தானப்பா குடிகாரனாக மாற்றினேன். அவர் சத்தியத்தை மீறிக் குடித்தாலும் நான் ஏற்றுக்கொள்வேன்'' என்றாள் பிரியா.

``குருபரன் உன் மீது அளவில்லாத பாசம் கொண்டிருந்தமையால் தான் உன்னை மறக்க முடியாமல் குடிகாரனானவன். இனிமேல் அவர் குடிக்க மாட்டார். ஏனென்றால் இரண்டு மூன்று நாட்களாக என்னை அவர் பராமரிக்கும் விதம் அப்படி. எல்லாம் இறைவன் செயலென்று நினையம்மா. வீணான எண்ணங்களை உருவாக்கி மனதைக் குழப்பாதே'' என்றார் பொன்னம்பலம்.

மறுநாள் சுந்தரனும் மனைவியும் அவனது பிள்ளைகளும் பொன்னம்பலத்தின் வீட்டிற்கு வந்தனர். ``அப்பா நான் பிரான்சில் இருந்து நேரே இங்கே தான் வருகிறேன்.

உங்களுக்கு விருப்பமில்லையென்றால் நான் எனது மனைவியின் வீட்டுக்குச் செல்கிறேன்’’.

பொன்னம்பலம் சுந்தரனையும் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்தார். சிலகனங்கள் உற்றுப்பார்த்தார். பத்து வருடங்களாக அவர் அவனைப் பார்க்கவில்லை.

சுந்தரனும் மனைவியும் பிள்ளைகளும் பொன்னம்பலத்தின் பாதங்களில் விழுந்து வணங்கினர்.பின், ‘‘எங்களை ஆசீர் வதியுங்கள்’’ என்றான் சுந்தரன்.

பொன்னம்பலம் தனது பேரப்பிள்ளைகளை அணைத்து முத்தமிட்டார். ‘‘பெருவாழ்வு வாழுங்கள். சிவன் எப்போதும் உங்களுக்கு உதவியாக இருப்பார்’’ என்றார்.

மகாலட்சுமிக்குச் சரியான மகிழ்ச்சி. சுந்தரனில் தான் அவளுக்கு விருப்பம் அதிகம். அவன் குடிகாரனாகிக் குழப்பங்கள் செய்த போதும் அவளது அன்பு குறையவில்லை. அவள் சுந்தரனது மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தாள்.

‘‘அப்பா, இப்போது தான் நான் மகிழ்ச்சியடைகிறேன். உங்களை நான் அளவுக்கதிகமாகத் துன்பப்படுத்தி விட்டேன். அதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்’’ என்றான்.

சுந்தரன் வந்து பத்துத்தினங்கள் கழிந்து விட்டன. அவனது மனைவி சாரதா பொன்னம்பலத்தின் வேலைகள் முழுவதையும் செய்தாள். தான் பிரான்சுக்குப் போகும்வரை தானே அவரைக் கவனிப்பேன் என்று பிடிவாதமாக நின்றாள். பொன்னம்பலத்திற்கு அவளை மிகவும் பிடித்துவிட்டது ‘‘ஒவ்வொருவரைப் பற்றியும் ஆராயாது முடிவுகளை எடுத்துக் கொண்டு அதனால் ஆத்திரமும் கோபமும் கொண்டு வாழ்வைக் கெடுப்பது மனிதர்கள் தான். சாரதா மிகவும் அருமையான பெண். அவளை மருமகளாக அடைய நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும்’’ என்று நினைத்தார் பொன்னம்பலம்.

குருபரன் - பிரியாவின் திருமணம் வெகுவிமர்சையாக நடைபெற்றது. செல்லத்துரையும் பொன்னம்பலத்தினது நான்கு பிள்ளைகளும் திருமணத்திற்கு பரவில்லை. திருமணம் முடிந்த பின்பு அவர்கள் பேசக்கூட இல்லை.

சுந்தரனும் மனைவியும் பிள்ளைகளும் சென்று விட்டனர். வீடுகளையிழந்து இருந்தது.

அன்று பௌணமி. சந்தரனின் ஒளி யன்னலுடாக அறைக்குள் பரவியிருந்தது. குருபரனின் நெஞ்சில் சாய்ந்திருந்தாள் பிரியா.

‘‘உள்ளம் உவர்க்க

உரோமம் சிலிர்க்க

உலகை மறந்து

உவகை கொள்ள

வைத்த உந்தன்

அழகின் தன்மை

என்றும் நினைவில்

நிலைத்து நின்று

தீரா இன்பம்

தந்து நிற்கும்’’.

‘‘என்று வளவன் ஒரு கவிதை எழுதியிருந்தான். இதுவும் ஒரு கவிதையா என்று நினைத்தேன். அவன் கார்த்திகாவை அணுஅணுவாய் ரசித்துச் சுவைத்துத் தான் எழுதியுள்ளயான் என்பது உம்மைத் திருமணம் செய்த பின்பு தான் தெரிகிறது. எந்நேரமும் உமது நினை தான்’’ என்றான் குருபரன்.

‘‘இப்பவே இரவு பதினொரு மணியாகிவிட்டது. படுங்கள். நாளைக்கு முக்கியமானதொரு செமினார் இருக்கிறது என்றீர்கள் என்றாள் பிரியா.

‘‘முக்கியமான தென்பது எனது வாழ்வில் உம்மோடு கதைத்துச் சிரித்துப்பது தான். வேறெதுவும் இல்லை. பூரண நிலவு

அவர்களின் நிலையைக் கண்டு நாணி முகில்களுக்குள் மறைத்து கொண்டது.

# 13

நடுச்சாமவேளை பொன்னம்பலத்திற்கு நெஞ்சு வலித்தது. அதை அவர் சிரமப்பட்டு மறைக்கப்பார்த்தார். முடியவில்லை. நெஞ்சில் யாரோ ஒருவர் ஏறி இருப்பதைப் போயிருந்தது. அவரால் மூச்சுவிட முடியவில்லை. நான்கு தினங்களுக்கு முன்பு தான் குருபரனுக்கும் தவப்பிரியாவுக்கும் திருமணம் நடைபெற்றது. அவர்கள் நாலாஞ்சடங்கை முடித்து விட்டு அன்று பகல் தான் வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்று தனது வலியை அடக்கப்பார்த்தார். முடியவில்லை. அதனால் மகாலட்சுமியை அழைத்தார்.. அவரின் அழைப்புச் சத்தம் கேட்டு மகாலட்சுமியும் அவர்களுடன் இருக்கும்

கலையரசியும் எழுந்து லைட்ரைப் போட்டனர். பிரியாவுடன் கதைத்துக் கொண்டிருந்த குருபரன் வீட்டில் ஆரவாரம் கேட்டதால் எழுந்து வெளியே வந்தான். பின்னால் பிரியாவும் வந்தாள்.

''மகாநெஞ்சு வலிக்கிறது'' என்றார் பொன்னம்பலம்.

அங்கு வந்த குருபரன், ''மாமி நாக்குக்கு கீழ் வைக்கும் மாத்திரை இருக்கா. எடுத்துத் தாருங்கள்'' என்றான்.

மகாலட்சுமி மாத்திரையை எடுத்துத் தாருங்கள்'' என்றான்.

மகாலட்சுமி மாத்திரையை எடுத்துக்குருபரனிடம் கொடுத்தாள். அதை வாங்கிய குருபரன் பொன்னம்பலத்தின் நாக்குக்கு கீழ் வைத்து விட்டு அவரது நெஞ்சை வருடியபடி சொன்னான், ''மாமா பயப்படாதீர்கள். இந்த மாத்திரைக்குச் சரிவராவிட்டால் அருகில் டொக்ரர் முரளிதரனின் கிளினிக் இருக்கு. இரவுபகல் சேவை அங்குண்டு. இல்லாவிட்டால்

அம்புலன்சுக்கு அறிவிப்போம்….. என்றவன் அவரை உற்று நோக்கிவிட்டுச் சொன்னான், ‘‘மாமா படுக்கையில் சிறு நீர் கழித்து விட்டார்.. சாரத்தை எடுத்தாங்கோ மாற்றுவம்’’

அதைக்கேட்ட பொன்னம்பலம் அதிர்ந்து போனார் நெஞ்சுவலி ஏற்பட்டால் சில சமயங்களில் அவர் படுக்கையிலேயே தன்னை அறியாமல் சிறு நீர் கழித்து விடுவார். தனது பிள்ளைகள் கூட அவர் சிறு நீர் கழித்தால் உடையை மாற்றாது தாயைக் கூப்பிட்டுச் சொல்லுவார்கள். பின் மகாலட்சுமி வந்து கலையரசியுடன் மிகவும் சிரமப்பட்டு உடையை மாற்றுவாள். இன்று குருபரன் மகாலட்சுமி கொண்டு வந்த சாரத்தை வாங்கி அருவருப்படையாது மாற்றுவதை நினைக்க அவருக்கு நெஞ்சு வலி நின்றுவிட்டது. இப்படிப்பட்டவனையா நான் குடிகாரன் என்று வெறுத்தேன். அவரால் நம்பமுடியவில்லை.

மகாலட்சுமியும் கலையரசியும் திகைத்து நிற்கக் குருபரன் சாரத்தை மாற்றி விட்டு அவர்

உடுத்தியிருந்த சாரத்தை தூக்கிக் கொண்டு வெளியே சென்றான்.

‘‘என்னிடம் தாருங்கோ’’ என்றாள் கலையரசி.

‘‘மருமகனே என்னிடம் தாருங்கள், என்றாள் மகாலட்சுமி.

ஏன் எல்லோரும் தொடத்தேவையில்லை. நான் பாத்ரூமில் போட்டுவிட்டுக் கை கழுவி விட்டு வருகிறேன்’’ என்று கூறிய படி பாத்ரூம் உள்ள பக்கம் சென்றவன் குருபரன்.

பிரியா விம்மி விம்மி அழுதாள். இத்தகைய ஒரு நல்ல மனிதனையா நான் செருப்பால் அடிக்கப்போனேன். அதை நினைக்க அவளுக்கு துக்கம் பெருகியது. விம்மி விம்மி அழுதாள். மகாலட்சுமிக்கும் கலையரசிக்கும் அவள் எதற்காக அப்படி அழுகிறாள் என்று புரியாது தடுமாறினார்கள். இதற்கு முன் பலமுறை பொன்னம்பலத்திற்கு நெஞ்சுவலி வந்த போது பிரியா செயற்பட்டாளே தவிர அழவில்லை.

இப்போது ஏன் அழுகிறாள்'' என்று புரியாமல் தடுமாறினார்கள்.

அப்போது அங்கு வந்த குருபரன் சொன்னான், ''தவம், என்ன சின்னப்பிள்ளை மாதிரி அழுறீர் நாக்குக்குக் கீழ் வைக்கும் மாத்திரியை வைத்தால் நெஞ்சுவலி குறைந்துவிடும் குறையாவிட்டால் முரளிதரனுக்குப் போன்பண்ணுவம். இல்லாவிட்டால் அன்புலன்சை அழைப்பம் அழதையும்''

''எனக்கு நெஞ்சுவலி குறைஞ்சிட்டுதம்மா. நீ அழாதை. நீகுருபரனைக் காதலிக்கிறதாய்ச் சொன்னபோது நான் அதிர்ச்சியடைந்து விட்டேன். இருப்பினும் நான் இறந்தால் உன்னைக் கவனிக்க யாரும் இல்லையே என்று தான் எமது குலதெய்வத்தின் மீது பாரத்தைப்போட்டுவிட்டு அரைகுறையான மனத்துடன் சம்மதித்தேன். சம்மதித்த பின் ஊரவரும் இனத்தவரும் உனது சகோதர்களும் ஒவ்வொரு விதமாகக் கூற எனது மனம் சஞ்சலப்பட்டது. ஒரு கட்டத்தில் திருமணத்தை

நிறுத்திவிடலாமா என்று கூட நினைத்தேன். திருமணம் முடிந்த பின்பு கூட நான் தவறு செய்து விட்டேனோ என்ற நினைப்பு என்னை வாட்டிக்கொண்டிருந்தது. அதனால் தான் நெஞ்சு வலி ஏற்பட்டது’’ அதற்கு மேல் பேசமுடியாது அழுதார் பொன்னம்பலம்.

‘‘அழாதைங்கோ மாமா. இந்த நிலையில் நீங்கள் அழக்கூடாது’’ என்றான் குருபரன்.

‘‘இனி அழமாட்டன். என்னுடைய சந்தேகமெல்லாம் தீர்ந்து விட்டது’’ என்றார் பொன்னம்பலம்.

‘‘இதற்கெல்லாம் காரணம் நான் தான் அப்பா. உத்தமராக இருந்தவரைக் குடிகாரனாக்கிக் கேவலப்படுத்தியது நான் தான்’’. பிரியா விக்கி விசும்பி அழுதவாறு குருபரனின் பாதங்களைப் பிடித்து, ‘‘ என்னை மன்னியுங்கள் மன்னியுங்கள்’’ என்று மன்றாடினாள்.

‘‘எல்லாம் விதி. சரிசரி.... நான்மன்னிக்காதிருந்தால் உன்னைப் பழிவாங்கியிருப்பேன். வேறு இடத்தில் திருமணம் செய்திருப்பேன். என்னால் உன்னை மறக்கமுடியாததால் தான் குடித்துக் குடித்துக் காலத்தைக் கழித்தேன். இன்று நீ கிடைத்து விட்டாய். அதனால் குடியை நிறுத்தி விட்டேன். உன்னை நினைத்துக் குடித்ததற்கு நீதான் என்னை மன்னிக்க வேண்டும்’’ என்றார் குருபரன்.

காலைப்பிடித்தபடி விம்மி விம்பி அழுத பிரியா பின் எழுந்து கண்ணீரைத் துடைத்து விட்டு குருபரனை அழைத்துக் கொண்டு தனது அறைக்குச் சென்றாள்.

அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பரவசம் அதிகரித்தது . அவளது நெஞ்சில் சாய்ந்து விம்மினாள்.

‘‘என்னில் இவ்வளவு பாசமா...? நான் அவமதித்தபோது நீங்கள் மனம் வருந்த வில்லையா...? கோபம் வரவில்லையா..?

“நீ அவமதிக்க அவமதிக்க என்னுள் ஒரு ஆவேசம் பிறந்தது. உன்னை அடைந்தே தீர வேண்டும் என்ற வைராக்கியம் மிகுந்தது. உன்னை மறக்கவேண்டும் என்பதற்காகக் குடித்தேன். எனது உயிர்நண்பன் வளவன். அவனது காதலியும் அவனை விட்டு விட்டு இயக்கத்திற்குச் சென்று விட்டாள். அதனால் காதலிகளை மறக்க இருவரும் குடித்தோம். குடிக்க குடிக்க உன் நினைவு தான் மிகுந்தது. நீ செருப்பைக் கழற்றிக்கொண்டு அடிக்கவந்தாய். ஆனால் அடிக்கவில்லை. காதலியை மறப்பதானால் மரணிக்கவேண்டும். ஆனால் மரணித்தாலும் ஆத்மாக்குள் வீற்றிருக்கும் காதலி தொடர்ந்து வந்து துன்புறுத்துவாள் என்று வளவன் கூறுவான்” என்றான் குருபரன்.

பிரியா பேசவில்லை. இறுகக் கட்டியணைத்தபடி விம்மினாள்.

குருபரனுக்கு அச்செயல் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. தவம் வளவனின் கவிதைகள் தான் என்னை வாழ வைத்தன. அவனுக்கு நன்றி

கூறுதல் வேண்டும். நீ என்னைக் காதலிப்பதாகக் கூறியதும் உடனே வளவனுடன் தொடர்பு கொண்டேன். அவன் சொன்னான்,

“நீ பாக்கியவான்

நான் பாவி

காத்திருந்தாய் பயனடைந்தாய்

அவசரப்பட்டேன்

அமைதியை இழந்தேன்

அன்போடு அவளை நேசி

அனுவளவும் துன்பம் கொடாதே

ஆழ்ந்து அனுபவி

வாழ்க்கையை

காதல் தான் வாழ்வு

என்பதை மறவாதே” என்றான் அதன்படி தான் நான் வாழ முயற்சிக்கின்றேன். அவன் தான்

எனது குரு.அவனது கவிதைகள் தான் என்னை வாழ வைத்தன. இந்தக் கவிதையைப் பார்’’

‘‘எனக்குள்ளே

உன்னைக்கண்டேன்

பார்க்கும் பொருட்கள்

அனைத்திலும்

உன்நிழல் தெரிகிறது

கடுங்குளிர்காலத்தில்

சூடாக்குவாய் என்னை

கடுங்கோடை தன்னில் குளிர் நிலவாய்

என்னுள்ப் புகுந்திடுவாய்

என் ஏற்றமும் நீயே

இறக்கமும் நீயே

மனதினை நிரப்பி

உன்வசப்படுத்தி

உன்னுருவாக

என்னை மாற்றினாய்

உறங்க முடியவில்லை

குடிகுடியெனக் குடித்தும்

நிம்மதியில்லை.

உன் நினைவே முழுமதியறியுது.

உருக்குலைந்து போகிறேன்

வாழவிடு

இன்றேல் சாகவிடு

தாங்க முடியவில்லை

உனது தொல்லைகளை’’

இக்கவிதையை பல ஆயிரம் முறை வாசித்திருப்பேன். அவன் எழுதியவை முழுவதும் எனக்குப் பொருத்தும். இந்தக்’ கவிதையைக்கேளும்.

“இரகசியம் எதுவும்

உன்வசமில்லை

உன்னிடமுள்ளவை

என்னுள்ளுள் உண்டு

முக்கியமான தொரு

பொக்கிசம் எடுத்தேன்

முற்பகல் பிற்பகல்

எதுவானாலும்

அதையே பார்த்து

ஆனந்தம் கொள்வேன்

அதிலே தெரியும் உன்னுரு

தொட்டுத் தடவி

பார்த்துச் சுவைத்து

பரவசமாவேன்”

“வளவன் எதைப் பொக்கிசம் என்றானோ தெரியவில்லை. நான் கேட்டால் அது அபூர்வமான பொருள். யாருக்கும் கிடைக்காம பொருள். அவளை நினைக்க அதுவே போதும். பத்துவருடங்களாய்ப் பேணிக்காத்து வருகிறேன். அது கிடைத்தது பெரும் இன்பம்” என்பான். சொல்லமாட்டான். நீர் பாடசாலையில் சரஸ்வதிபூசை நடைபெற்றபோது அழகான பெரிய சிவப்பு ரோஜா ஒன்றைச் சூடி வந்தீர். நான் என்ன வளவனா கவிதைத பாட. அதைப் பார்த்து ரசித்தேன்.பின் நீர் வெளியே சென்றபோது உமக்குப் பின்னால் வந்தேன். உமது கூந்தலை அலங்கரித்த அந்தரோஜா திடீரென்று நிலத்தில் விழுந்தது. அதை எடுத்துப் பொத்திரப்படுத்தி வைத்து இன்று வரை பார்த்து ரசிக்கிறேன். அது தான் எனது பொக்கிஷம்” என்றான் குருபரன்.

“காதலித்தவளைக் கைவிட்டு விட்டு இன்னொருத்தியோடு கூடிக்குலாவும் ஆண்களைப் பற்றித் தான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

உங்களையும், உங்களது நண்பன் வளவனைப்பற்றியும் இன்றுதான் அறிகிறேன். பாவம் கார்த்திகா. அதைவிடப் பாவம் வளவன்'' என்றாள் பிரியா.

அழகை வரையறை செய்வது மனம். வளவனது காதலிபேரழில் கொண்டவள் அல்ல அவ்வாறிருக்க வளவன் அவளை வர்ணிக்கும் தன்மையை எண்ணி வியப்பேன். அப்போது வளவன் சொல்வான், ''குரு, அழகு என்பது அவரவரின் மனதைப் பொறுத்தது. ஒருகடையில் ஆயிரம் சேவைகள். இருக்கு, அங்கு செல்லும் ஒரு பெண் அவ்வாயிரம் சேலைகளையும் பார்த்து விட்டு ஒரு சேலையை எடுக்கிறாள். அதைப் பலர்பிடிக்காது கழிந்து விட்டிருப்பர். இப்போ அப் பெண் கழித்த சேலைகளை யாரோ விரும்பி எடுக்கத்தான் போகிறார்கள். இது போன்றது தான் வாழ்க்கை என்பான். அது உண்மை ஏனெனில் நான் எத்தனையோ பெண்களைக் கண்டிருப்பேன். உமது அழகுதான் என்னைக் கவர்ந்து மெய்சிலிர்க்க வைத்தது. அதன்பின் நான் கண்ட பெண்களில் ஒருவர்கூட என்னைக்

கவரவில்லை.. இது இறைவனின் செயல். இந்தக் கவிதையைக் கேளும்’’

‘‘அழகு பொங்கும் இடமெல்லாம்

கண்கள் சுவைத்து மகிழ்ந்தன.

அமுதம் கூடத் தோற்றது

அழகு மேனி வென்றது.

கவர்ச்சி யாவும் சேர்ந்து

களிப்புக் கொள்ள வைத்தது

அன்று சுவைத்த மனமது

என்றும் வேண்டும் வேண்டும் என்றது’’

‘‘எவ்வளவு அழகான கவிதை தெரியுமா….? இதைப் படித்த பின்பு உம்மை நினைத்தேன். உமது உருவம் கண்களுக்குள்த் தோன்றிச் சிரித்தது. குடி மயக்கத்தில் நான் இருந்தால் இக்கவிதை தான் எனது நினைவுக்கு வரும். வந்ததும் நீரும் கண்களுக்குள் வருவீர். பின்

மயக்கம் தீர்ந்தாலும் உம் மீது கொண்ட மயக்கம் தீராது. கணவன் என்பவன் மனைவியை நினைத்தே வாழுதல் வேண்டும். ஏனென்றால் உலகில் உள்ள அத்தனை பாசமுள்ளவர்களையும் சேர்த்து மனைவியாகப் படைத்துள்ளான் இறைவன்'' என்று வளவன் சொல்வான்....'' குருபரன் கதைத்துக் கொண்டே இருந்தான் பிரியா செயலிழந்து போனாள்.

# 14

இரண்டு மாதங்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் கழிந்தன.. அன்று பொன்னம்பலத்தின் வீடு களைகட்டியிருந்தது. உறவினர்களும் நண்பர்களும் வந்து குவிந்திருந்தனர்.

சரவணபவனுக்கும் சிவகாமிக்கும் மகிழ்ச்சி எல்லை தாண்டியிருந்தது. பொன்னம்பலத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

‘‘பெருங்குடிகாரனாக ஊருக்கு உதவாதவனாக இருந்த எனது மகன் இன்று பெரு மகிழ்ச்சியுடன் வாழ்வதை நினைக்க இப்போதும் நான் கனவு காண்கின்றேனோ என்றே எண்ணுகிறேன். இனிநான் இறந்தாலும் பரவாயில்லை’’ என்றார் சரவணபவன்.

பொன்னம்பலம் சிரித்தார், ‘‘மகிழ்வின் உச்சத்தில் இருக்கும் போது மனிதர்கள் உங்களைப்போலத் தான் எண்ணுகிறார்கள். இது ஏனென்று தெரியவில்லை. விரதம் பிடித்துக் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்யும் போது குருக்கள் தீபம் காட்டுகிறார். கடவுளின் திருவுருவம் ஒளிபட்டு எமக்கு அருளக் காத்திருக்கும் போது எம்பவர் கண் மூடியே தொழுகின்றனர். கடவுளின் திருவுருவை முழுமையாகப் பார்த்து ரசித்து மனிதில் பதிந்து ஆராதிப்பதை விடுத்துக்கண்களை மூடிவணங்குவதால் கடவுளின் அருள் கிடைக்காமலல்லவா போய்விடும். அதனால் தீபம் காட்டும் போது கண்களைத் திறந்தே

வணங்குதல் வேண்டும். அது போல உச்சமாக மகிழ்ச்சி கிடைக்கும் போது இன்னும் இப்படியான மகிழ்வான நிகழ்வுகளை நாம் அனுபவிக்க வேண்டுமென்றே நினைக்க வேண்டும். இப்போது தவம் கருவுற்றிருக்கிறாள். அவளுக்குப் பிள்ளை பிறந்து, பின் அப்பிள்ளை பிறப்பதைக் காணவேண்டும் என்று நினைக்காது. இதோடு இறக்கவேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள்'' என்றார் பொன்னம்பலம்.

''அவ்வளவு துன்பங்களை நான் அனுபவித்து விட்டேன். இந்த மகிழ்ச்சி எனக்குப்போதும். குருபரன் வாழ்நாள் முழுவதும் குடித்துக் குடித்து அழியப்போகிறான் என்ற நிலைமாறி அவன் குடும்பத்தவனாகி இன்று தனப்பனுமாகி விட்டான். அதை விட எனக்கு வேறென்ன வேண்டும்'' என்றார் சரவணபவன்.

''ஆசை என்பது இறக்கும் வரை இருக்கும். ஒன்று நிறைவேறினால் பத்தை நினைக்கத் தோன்றும். உங்களுக்கு உங்கள்

பேரக்குழந்தையைப் பார்க்க விருப்பமில்லையா ….''என்று கேட்டார் பொன்னம்பலம்.

சரவணபவன் பேசவில்லை. மகிழ்வுடன் சிரித்தார். பேசமுடியாதளவு பேரின்பம் அவரது இதயத்தை நிரப்பி இருந்தது.

குருபரனை நினைத்துப்பார்த்தார் பொன்னம்பலம். அவருக்கு அவன் ஒரு அதிசயமாகவே தெரிந்தான், '' ஆரம்பத்தில் பாசமுள்ளவனைப் போல நடந்து உங்களை ஏமாற்றுவான். உங்களை ஏமாற்றுவதற்காக எதையும் செய்வான். குடிக்காமலும் விடுவான். ஆனால் இரகசியமாகக் குடிப்பான். குடித்துவிட்டு வீதிகளில் விழுந்து கிடந்தால் தான் உங்களுக்குத் தெரியவரும். இரகசியமாகக் குடித்தால் தவம் தனக்கு விதி யென்று நினைத்துத் தனக்குள் அழுவாளே தவிர உங்களுக்குச் சொல்லமாட்டாள். ஆனபடியால் திருமணமாகிச் சில நாட்களுக்குள் அவன் மாறி விட்டான் என்று எண்ணி மகிழாதீர்கள். போகப் போகத் தான் அவனது சுயரூபம் வெளிப்படும்.

அப்ப என்ன சொல்வீர்கள்’’ என்று அரவிந்தன் கூறியது அவரது காதில் ஒலித்தது.

‘‘என்ன ஐயா யோசிக்கிறீர்கள்’’ என்று கேட்டார் சரவணபவன்.

‘‘ஒன்றுமில்லை. பழைய நினைவுகள் தவத்தின் எதிர்காலம்பற்றித் தான் நான் சிந்தித்துக் கவலைப்படுவேன். அவள் இயக்கத்திற்குச் சென்று விட்டாள் என்பதற்காக ஊரவர் எவரும் அவளை ஏற்றுக்கொள்ளவில்லை.... அவர்கள் ஏற்காததால் அவளுக்கு ஒரு திருமணத்தைச் செய்து கொடுக்க முடியவில்லை. ஆனால் உற்றார் உறவினர்களும் சொந்தச் சகோதரர்களும் ஏற்காதது எனக்குக் கவலையளித்துக் கொண்டே இருந்தது. ஒரு காலத்தில் போற்றிப் புகழ்ந்த இவர்கள் இப்போ என்ன காரணத்திற்காக வெறுக்கிறார்கள் என்று புரியவில்லை. குடிகாரன் குடிக்காமல் விடமாட்டான் எண்கிறார்கள். திருடன் திருடாமல் விட மாட்டான் என்கிறார்கள். அது இயக்கத்திற்குச் சென்றவர்கள். இயக்கத்தில்

இருந்ததைப் போலவே இருப்பார்கள் என்று நினைக்கிறார்களா….?'' என்றார் பொன்னம்பலம். அவரது குரல் தளதளர்த்தது.

''பழையவற்றை விடுங்கள். அவற்றை நினைத்து இனி ஏன் கவலைப்படல் வேண்டும்'' என்றார் சரவணபவன்.

''எமது பிரச்சினையைச் சம்பந்தப்பட்டவர்களே உணர்ந்து கொள்கிறார்களில்லை. தவம் ஒரு போராளி. வயிற்றில் பெரியகாயம் பட்டவள். அதனால் சாகக் கிடந்தவள். இதெல்லாம் எனது பிள்ளைகளுக்குத் தெரியும். போராட்டம் நடைபெறும்போது ஒரு நாளைக்குப் பத்துத் தரம் போன் பண்ணிக் கள நிலையைத் தெரிந்து கொண்டவர்கள். அத்துடன் போராட்டத்திற்கென்று நாம் வாழும் நாடுகளில் பேரணி நடத்தியவர்கள். அவர்களுக்கே போராளியான தவத்தின் நிலை தெரியவில்லை. அவர்கள் அவள் தனித்திருக்க வேண்டுமென்றே நினைக்கிறார்கள் போலும்'' என்றார் பொன்னம்பலம்.

“இன்று நாம் மிகவும் குதூகலமாக இருக்கிறோம். அப்படி இருக்க ஏன் கவலைப்படுகிறீர்கள்.” என்றார் சரவணபவன்..

“இப்போ குருபரன் முன்னைய ஆள் இல்லை என்று திரும்பத் திரும்பச் சொன்னாலும் நம்புகிறார்களில்லை. அதைவிடச்சொல்ல குருபரன் மகிழ்வுடன் வந்து தவம் கர்ப்பமாக இருப்பதை நான் எனது பிள்ளைகளுக்கு மகிழ்வுடன் அறிவித்தேன். அவர்கள் அதை மகிழ்வுடன் ஏற்பார்கள் என்றும் நினைத்தேன். ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைக் கூறுகிறார்கள். அரவிந்தன் “அப்படியா..” உங்களுக்குப் பொறுப்புக் கூடிவிட்டது. தவத்துடன் பிள்ளைகளையும் சேர்த்துக் கவனிக்க வேண்டும்”. என்றான் . ஆரூரன் சரி அப்பா வேலைக்குப் புறப்படுகிறேன் பிறகு என்றான். ஆரூரன் “சந்தோஷம் ” என்றான். வாகீசன் “சரி” என்றான் . நாவுக்கரசன், தவத்தின் பாடு கரைச்சல்தான்” என்றான். சுந்தரன் மட்டும் தான் அளவில்லாத மகிழ்வுடன்

கதைத்தான். பின்பு தவத்துடனும் கதைத்தவன். இப்படி எனது பிள்ளைகளே நடந்து கொள்ளும்போது பிறர் எவ்வாறு நடப்பர். போராளிகளைப் பெற்றோரும் உறவினர்களும் சகோதரர்களும் அந்நியராகவே கருதுகின்றனர். தவம் எனது பிள்ளை என்பதால் எனது மனம் துடியாய்த் துடித்தது. இப்போது துள்ளி மகிழ்கிறது. இதைப் போலத் தானே ஏனைய போராளிகளின் பெற்றோரும் வருந்துவர்'' கலங்கினார் பொன்னம்பலம்.

‘‘வெளிநாட்டுக்குப் போன பலர் நாட்டுக்கும் உறவினர்களுக்கும் அந்நியமாகி விட்டார்கள். அது உங்களுக்குத் தெரியாதா…? பாசமுள்ள பிள்ளைகளாக இருந்தால் நோய் வாய்ப்பட்ட உங்களை ஒரு முறையாவது வந்து பார்க்காமல் இருப்பார்களா..? கவலை கொள்ளாதீர்கள்.. உங்களுக்கு உதவக் குருபரன் இருக்கிறான்'' என்று சரவணபவன் வார்த்தைகளை முடிக்குமுன் பொன்னம்பலம் சொன்னார், ‘‘குருபரனை மாப்பிளையாக அடைந்த பின் யானையின் பலம்

எனக்கு ஏற்பட்டுவிட்டது. பிள்ளைகளைப் பெற்று வெளிநாடுகளுக்கு அனுப்பி விட்டு இங்கு பெற்றோர் படும்பாட்டை நான் அறிவேன். இப்போ எனக்குப் பிள்ளைகளைத் தேவையில்லை'' என்றார். பொன்னம்பலம். அவரது மனதை பூரணமகிழ்ச்சி நிரப்பியிருந்தது.

அப்போது அங்கு குருபரனோடு வந்த பிரியா சொன்னாள், ''எனது கணவர் அப்பாவைத் தனது தந்தையைப் போலக்கவனிக்கிறார். இருந்தும் அப்பா அதை உணராது தனது பிள்ளைகளின் குறைபாட்டைக் கூறிக்கவலைப் படுகிறார். அதனால் தான் அன்று இரவு ஹாட்அற்றாக்'' வந்தது. அதன் பின்பாவது உணர்கிறாயில்லை'' விம்மினாள் பிரியா.

''ஐயையோ, அப்படி இல்லை அம்மா, எனது பிள்ளைகளை நினைக்கக் கவலையாக உள்ளது. அவர்கள் உன்னைப் பற்றிச் சிறிதளவாவது சிந்திப்பதாகக் தெரியவில்லை. நான் காலையில் எவ்வளவு மகிழ்வோடை நீ கர்ப்பமாக

இருப்பதைச் சொன்னேன். ஆனால் அவர்கள் அதில் அக்கறைப்படவில்லை....''

‘‘அப்பா என்மீது அக்கறைப்பட நீங்களும் அம்மாவும் இருக்கிறீர்கள். அதை விட எனது கணவரும் அவரது பெற்றோரும் இருக்கிறார்கள். அம்மா என்னை அசைய விடாது கவனித்துக் கொண்டிருக்கிறா கலையரசி அக்கா. இதற்கு மேல் என்னப்பா வேண்டும்.'' என்றாள். பிரியா.

‘‘உண்மை தான் அம்மா.... இனி நான் கதைக்க மாட்டேன். இவங்கன் உன்னோடை ஒரு முறை கதைத்திருக்கலாம்.'' என்று பொன்னம்பலம் கூறும் போது பிரியா குறுக்கிட்டுச் சொன்னாள். ‘‘கதைக்கமாட்டேன் என்று கூறிவிட்டு ஏனப்பா கதைக்கிறீர்கள்...''

‘‘அவர் கதைக்கட்டும் விடும் கதைப்பதால் மனப்பாரம் குறையும்'' என்றான் குருபரன். ‘‘அப்பாவிற்கு மனப்பாரம் கூடுகிறது'' என்றால் பிரியா.

‘‘அப்போது அங்கு வந்த மகாலட்சுமி எல்லோரும் சாப்பிட வாருங்கள்.’’ என்று அழைத்தாள்.

அன்று உறவினர்கள், நண்பர்கள் குருபரனுடன் வேலை செய்பவர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் வந்திருந்தனர். அனைவருக்கும் அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

‘‘நான் மிகவும் மகிழ்வுடன் இருக்கிறேன். எனது வாழ்வை வளப்படுத்த எண்ணிய அம்பிகாவுக்குத் தனியாக காணி வாங்கி அதில் ஒரு சிறுவர் பாடசாலை அமைத்து வருகிறேன். அது எதிர் வரும் சனிக்கிழமை திறந்து வைக்கப்படும். எனது அன்பு மனைவி தவப்பிரியா அதை திறந்து வைப்பாள். அவ் விழாவிற்கும் இங்கு வந்த அனைவரும் வருகை தர வேண்டும்’’ என்றான் குருபரன்.

‘‘நல்ல சுவையான உணவு எங்கு கிடைத்தாலும் நான் அங்கு வருவேன்’’ என்றான் முகுந்தன். அவன் குருபரனின் நண்பன். அவனுடன் சேர்ந்து குடிப்பவன்.

“முகுந்தன் அண்ணா, இவரைப் போல நீங்களும் குடிக்காது விட்டால் என்ன?” என்று கேட்டாள் பிரியா.

“அதை தான் அம்மா குருபரன் நெடுகச் சொல்கிறான். பழகிய பழக்கத்தை விட முடியவில்லை. பழகிய குடியை நிறுத்த மனத்தைரியம் வேண்டும். அது குருவிடம் நிறைய இருக்கு என்னிடம் இல்லை.” என்றான் முகுந்தன்.

வந்தவர்கள் சென்று கொண்டிருந்தனர். குருபரனின் தாயார் குருபரனுக்கு அருகில் வந்து சொன்னார்; “குரு உன்னைப் பிரிந்து செல்ல என்னால் முடியவில்லை…”;;

அழுதாள்.

“ஏன் நீங்கள் பிரிய வேண்டும். எங்களுடன் இங்கேயே இருங்கள்.” என்றாள் பிரியா.

‘‘நான் எப்போதோ சொன்னதைத் தவம் இப்ப சொல்கிறாய். இங்கேயே இருங்கோ’’ என்று சிரித்தான் குருபரன்.

சிவகாமி ஏக்கத்துடன் சரவணபவனைப் பார்த்தாள்: ‘‘என்னாலும் குருவைப் பிரிந்து இருக்க முடியவில்லை.’’ என்று சரவணபவன் கூறும் போது குறுக்கிட்டுப் பொன்னம்பலம் சொன்னார்,’’ எனக்கும் கதைப்பதற்கு துணையாக இருக்கும்.’’

இரவு பிரியா குருபரனுக்கு கூறினாள்: ‘‘அண்ணன்மார் நான்கு பேரும் பேசாதது அப்பாவுக்கு மட்டும் வருத்தமில்லை. எனக்கும் வருத்தம் தான்’’ விம்மினாள்.

‘‘நீ தான் விடாப்பிடியாக நின்று மாமாவின் மனதை மாற்றியதாக அவர்கள் நினைக்கிறார்கள். அத்துடன் நான் இப்போதும் இரகசியமாகக் குடிப்பதாகவும் நம்புகின்றனர். அதானல் தான் அவர்கள் கதைக்க விரும்புகிறார்கள் இல்லை. இப்போ எனது

அப்பாவும் அம்மாவும் இங்கு வந்து விட்டனர். அன்பு செலுத்துபவர்கள் மீது அன்பு செலுத்துவோம். அவர்கள் ஒரு காலம் மனம் மாறுவார்கள். அது வரை நாம் பொறுத்திருக்கத் தான் வேண்டும். அதற்காகக் கவலைப்பட வேண்டாம்.'' என்றான் குருபரன்.

அவள் எதுவும் சொல்லாது குருபரனின் நெஞ்சில் சாய்ந்தாள். சில நிமிடங்ளில் அவள் உலகையே மறந்து விட்டாள்.

முடிந்தது.